# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2013

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| பிரதான அலுவலர்கள் | 1 |
| ஓட்டுமொத்த செயலாற்றுகை 2013 | 3 |
| *கருத்திட்டம் **I*** | |
| *அமுல்படுத்தல் கொத்தணி* | *17* |
| தடுப்புப் பணிப்பகம் | 18 |
| சமூக பாதுகாப்புப் பணிப்பகம் | 22 |
| பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பணிப்பகம் | 32 |
| மத்திய விசாரணைகள் பணிப்பகம் | 37 |
| சட்ட அலுவல்கள் பணிப்பகம் | 40 |
| மத்திய புலனாய்வுகள் பணிப்பகம் | 41 |
| *அரசிறை மற்றும் சேவைகள் கொத்தணி* | *46* |
| பிரகடனங்கள் பணிப்பகம் | 47 |
| கைத்தொழில் மற்றும் சேவைகள் பணிப்பகம் | 53 |
| சரக்குப் பரிசோதனைப் பணிப்பகம் | 58 |
| பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகம் | 62 |
| ஏற்றுமதிகள் பணிப்பகம் | 63 |
| பயணிகள் சேவை (கட்டுநாயக) பணிப்பகம் | 66 |
| அரசிறை மற்றும் சேவைகள் (கட்டுநாயக) பணிப்பகம் | 70 |
| *கூட்டுறவுக் கொத்தணி* | *73* |
| கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பணிப்பகம் | 74 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பணிப்பகம் | 82 |
| மத்திய பெறுமதி மதிப்பீட்டுப் பணிப்பகம் | 84 |
| விசேட சேவைகள் பணிப்பகம் | 85 |
| பொருள் வினியோகப் பணிப்பகம் | 88 |
| *மனிதவளங்கள் கொத்தணி* | *90* |
| மனிதவள முகாமைத்துப் பணிப்பகம் | 91 |
| மனிதவள அபிவிருத்திப் பணிப்பகம் | 94 |
| ஊழியர் சேவைகள் பணிப்பகம் | 99 |
| *மாகாணக் கொத்தணி* | *101* |
| அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகம் | 102 |
| பயணிகள் சேவை (மாகாணம்) பணிப்பகம் | 103 |
| *சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழான பணிப்பகங்கள்* | *104* |
| முறைமைகள் மற்றும் நடைமுறைகள் இணக்கப்பாட்டுக் கணக்காய்வுப் பணிப்பகம் | 105 |
| நிதிப் பணிப்பகம் | 106 |
| விசேட செயலணி மற்றும் கண்காணிப்புப் பணிப்பகம் | 111 |
| *கருத்திட்டம் **II*** | |
| உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) பிரிவு | 114 |

# இலங்கைச் சுங்கம்

## 2013

### பிரதான அலுவலர்கள்


திரு. ஜகத் பீ. விஜேவீர
சுங்கப் பணிப்பாளர் நாயகம்
திரு. எ. சேனாநாயக
சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (மனிதவளங்கள்)
திரு. டபிள்யு.எல்.டி.ஆர்.எ. குமாரதிலக
சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (கூட்டுறவு)
திரு. கே.எல்.ஜீ.ரீ. பெரேரா
சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (அமுல்படுத்தல்)
திரு. எம். புவீகரன்
சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (அரசிறை மற்றும் சேவைகள்)
திரு. எஸ். ராஜேந்திரன்
பதில் சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (கூட்டுறவு)
திரு. ஜி.ஏ.எல். காமினி
சுங்கப் பணிப்பாளர் (தடுப்பு)
திரு. கே.டி. நிக்லஸ்
சுங்கப் பணிப்பாளர் (சமூகப் பாதுகாப்பு)
திரு. எஸ். ராஜேந்திரன்
சுங்கப் பணிப்பாளர் (வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு)
திரு. எம். தயாபரன்
சுங்கப் பணிப்பாளர் (மத்திய விசாரணை)
திரு. யு.கெ.எம். இஸ்மாயில்
சுங்கப் பணிப்பாளர் (சட்ட அலுவல்கள்)
திரு. சி.என். ராஜரத்னம்/திரு. யு. லியனகே
சுங்கப் பணிப்பாளர் (மத்திய புலனாய்வு)
திரு. டி.எ.ஐ. தரணகம
சுங்கப் பணிப்பாளர் (பிரகடனங்கள்)
திரு. பி.ஜே.பீ. பெரேரா
சுங்கப் பணிப்பாளர் (கைத்தொழில் சேவைகள்)
திரு. டி.எ.பீ. டொமிங்கோ /திரு. ரி.டபிள்யு.எ சேனாநாயக
சுங்கப் பணிப்பாளர் நாயகம் (ஏற்றுமதி)
திரு. கே.ஏ.டீ.ஆர். கிறிஸ்ரி
சுங்கப் பணிப்பாளர் (பொருள் பரிசோதனை)
திரு. என்.கெ. சிவகுமார்
சுங்கப் பணிப்பாளர் (பயணிகள் சேவை – கொழும்பு)
திரு. பீ.பி.எஸ்.சி. நோனீஸ்
சுங்ப் பணிப்பாளர் (பயணிகள் சேவை – கட்டுநாயக)
திரு. ஜுட் நிலுக்சான்
சுங்கப் பணிப்பாளர் (அரசிறை மற்றும் சேவைகள் - கட்டுநாயக)
திரு. ஆர்.பி.டி.ரி. செனவிரத்ன
சுங்கப் பணிப்பாளர் (கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராச்சி)
திரு. எஸ். நித்குணநாதன்
சுங்கப் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பாடல்)
திரு. கெ. பிரேம்நாத்
சுங்கப் பணிப்பாளர் (மத்திய பெறுமதி மதிப்பீடு)
திரு. எ. குலேந்திரன்
சுங்கப் பணிப்பாளர் (விசேட சேவைகள்)
திரு. எஸ். குணவர்தன
சுங்கப் பணிப்பாளர் (பொருள் விநியோகங்கள்)
திரு. எம்.யு.எஸ். பெரேரா
சுங்கப் பணிப்பாளர் (மனிதவள முகாமை)

திருமதி. ஐ.ஜெ. அபேரத்ன
சுங்கப் பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி)
திரு. பிரதீப் குமார
சுங்கப் பணிப்பாளர் (ஊழியர் சேவை)
திரு. பி.எம்.எல். பியசேன
சுங்கப் பணிப்பாளர் (விசேட செயலணி மற்றும் கண்காணிப்பு)
திரு. ஜகத் டயஸ்
சுங்கப் பணிப்பாளர் (வருவாயகள் மற்றும் சேவைகள் - மாகாணம்)
திரு. கெ.கெ. பாலசந்திர
சுங்கப் பணிப்பாளர் (கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் - மாகாணம்)
திரு. கெ.கெ. விதான
சுங்கப் பணிப்பாளர் (பயணி சேவைகள் - மாகாணம்)
திரு. பி.ரி.ஜி. குணதிலக
பிரத கணக்காளர் (நிதி )
திருமதி. ஜி.கெ. வீரசூரிய
பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு)
திரு. யு.எஸ். வணபுஸ்ப
பிரதிப் பணிப்பாளர் (புள்ளிவிபரவியல்)
திரு. எ.கெ.என். விக்ரமசிங்க
பிரதிப் பணிப்பாளர் (உற்பத்தி வரி)

# ஒட்டுமொத்த செயலாற்றுகை
# 2013


அரசிறை சேகரிப்பு - 2013

**தேசிய வரி வருமானத்தினதொரு பங்காக***



அரசிறை சேகரிப்பு – 2013 வரிச் சேர்க்கை

| வகை | (ரூபா மில்லியன்) | மொத்தத்தின் ஒரு விகிதமாக |
|---|---|---|
| இறக்குமதிகள் தொடர்பிலான பெறுமதி சேர் வரி | 96,591 | 20 |
| இறக்குமதித் தீர்வை | 74,766 | 15 |
| இறக்குமதி செஸ் அறவீடு | 33,011 | 7 |
| துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி | 61,516 | 13 |
| உற்பத்தி வரி | **143,606** | 30 |
| விசேட பண்ட அறவீடு | 46,705 | 10 |
| தேச கட்டுமான வரி | 22,443 | 5 |
| ஏனையவை | 4.47 | 0 |
| மொத்தம் | 481,866 | |



# அரசிறை சேகரிப்பு - 2013


| குறியீடு | விபரம் | மீளமைக்கப்பட்ட இலக்கு 2013 | டிசம்பர் மாதம் வரையான செயலாற்றுகை | | | செயலாற்றுகை ஒப்பீடு 2012 & 2013 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இலக்கு | உண்மையானவை | வேறுபாடு | 2012 | 2013 | வேறுபாடு | % |
| 1001.01.00 | இறக்குமதித் தீர்வை | 82,591 | 82,591 | 74,766 | (7,825) | 73,489 | 74,766 | 1,277 | 2 |
| 1001.02.00 | ஏற்றுமதித் தீர்வை | 20 | 20 | 22 | 2 | 21 | 22 | 1 | 4 |
| 1001.04.00 | துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | 61,004 | 61,004 | 61,516 | 512 | 70,111 | 61,516 | (8,595) | (12) |
| 1001.05.01 | செஸ் அறவீடு - இறக்குமதி | 37,362 | 37,362 | 33,011 | (4,351) | 29,604 | 33,011 | 3,407 | 12 |
| 1001.06.00 | மோட்டார் வாகன சலுகை அறவீடு | - | - | - | - | - | - | - | - |
| 1001.07.00 | பிராந்திய கட்டுமான அபிவிருத்தி அறவீடு | - | - | 1.346 | 1 | 7 | 1 | (5) | (80) |
| 1001.05.02 | செஸ் அறவீடு ï ஏற்றுமதி | 3,120 | 3,120 | 3,087 | (33) | 3,136 | 3,087 | (49) | (2) |
| 1001.08.00 | விசேட பண்ட அறவீடு | 50,106 | 50,106 | 46,705 | (3,401) | 33,666 | 46,705 | 13,039 | 39 |
| | **மொத்த சுங்க வரி வருமானம்** | **234,203** | **234,203** | **219,108** | **(15,095)** | **210,033** | **219,108** | **9,075** | 4 |
| 1002.05.01 | உற்பத்தி வரி ï சிகரெட்டுகள் | 58,222 | 58,222 | 58,534 | 312 | 53,529 | 58,534 | 5,006 | 9 |
| 1002.05.02 | உற்பத்தி வரி ï மதுபானம் | - | - | 0.08 | 0 | 39 | 0 | (39) | - |
| 1002.05.03 | உற்பத்தி வரி – பெற்றோலியம் | **35,849** | **35,849** | **27,131** | **(8,719)** | **28,466** | 27,131 | **(1,336)** | (5) |
| | உற்பத்தி வரி ï பெற்றோலியம் (இறக்குமதிகள்) | *32,753* | *32,753* | *27,131* | *(5,623)* | *27,837* | 27,131 | (707) | (3) |
| | உற்பத்தி வரி ï பெற்றோலியம் (உள்நாடு) | *3,096* | *3,096* | | *(3,096)* | *629* | - | (629) | - |
| 1002.05.04 | உற்பத்தி வரி ï மோட்டார் வாகனம் | 71,906 | 71,906 | 55,517 | (16,389) | 46,496 | 55,517 | 9,021 | 19 |
| 1002.05.09 | உற்பத்தி வரி – ஏனையவை | **5,347** | **5,347** | **2,424** | **(2,924)** | **3,336** | 2,424 | **(912)** | (27) |
| | உற்பத்தி வரி ï ஏனையவைகள் - இறக்குமதி | *1,477* | *1,477* | *1,144* | *(333)* | 2,533 | 1,144 | (1,389) | (55) |
| | உற்பத்தி வரி ï ஏனையவைகள் - உள்நாடு | *3,870* | *3,870* | *1,279* | *(2,591)* | 803 | 1,279 | 477 | - |
| | **மொத்த உற்பத்தி வரி வருமானம்** | **171,324** | **171,325** | **143,606** | **(27,719)** | **131,866** | **143,606** | **11,740** | 9 |
| 1002.01.04 | இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி | 123,888 | 123,888 | 96,591 | (27,297) | 99,469 | 96,591 | (2,878) | (3) |
| 1003.10.00 | சமூக பாதுகாப்பு அறவீடு | **-** | **-** | **0** | **0** | **1** | 0 | (1) | (82) |
| | *சமூக பாதுகாப்பு அறவீடு - இறக்குமதி* | - | | *0* | *0* | 1 | 0 | (1) | (82) |
| | *சமூக பாதுகாப்பு அறவீடு – உள்நாடு* | - | - | - | - | - | - | - | - |
| 1002.12.03 | தேச கட்டுமான வரி | *19,721* | *19,721* | *22,443* | *2,722* | 15,667 | 22,443 | 6,776 | 0 |
| | **மொத்த ஏனைய வரி வருமானம்** | **143,609** | **143,609** | **119,035** | **(24,574)** | **115,138** | **119,035** | **3,897** | 3 |
| | **மொத்த வரி வருமானம்** | **549,136** | **549,136** | **481,748** | **(67,388)** | **457,037** | **481,748** | **24,712** | 5 |
| 2003.02.17 | ஆடைகளது விற்பனை | 95 | 95 | 91.5 | (3) | 105 | 92 | (13) | (13) |
| 2003.02.99 | | | | | | | - | - | - |
| 2003.99.00 | பலவகை சில்லறைப் பொருள்கள் | 859 | 859 | 2,142 | 1,283 | 5,042 | 2,142 | | - |
| 2003.03.00 | | | | | | | | | |
| | மொத்த வரியல்லா வருமானம் | **954** | **954** | **2,234** | **(3)** | **5,147** | 2,234 | **(13)** | (0) |
| | மொத்த வருமானம் (வரி மற்றும் வரியல்லாதவை) | **550,090** | **550,090** | **483,982** | **(67,391)** | **462,184** | **483,982** | **24,698** | 5 |
| | நிகர வைப்புகள் | | | 1,231 | **1,231** | 1,774 | 1,231 | **(543)** | - |
| | வைப்புகளுடனான மொத்த வருமானம் | **550,090** | **550,090** | **485,213** | **(66,161)** | **463,958** | **485,213** | **21,255** | 5 |

அதிகூடிய அரசிறையினை ஈட்டித்தருகின்ற முதல் ஐம்பது பண்டங்கள் - (இயைபு முறைத்தலைப்பு வாரியாக)

| மட்டம் | இ.மு அத்தியாயம் | விபரம் | மொத்த வரி (ரூபா) |
|---|---|---|---|
| **1** | 87 | மோட்டார் வாகனங்கள் | 88,909,340,890 |
| **2** | 27 | பேற்றோலிய தயாரிப்புகள் | 76,774,999,341 |
| **3** | 25 | சீமெந்து மற்றும் சீமெந்து உருக்காங்கல் | 19,567,106,125 |
| **4** | 84 | இயந்திர மற்றும் இயந்திர உதிரிப்பாகங்கள் | 17,937,661,754 |
| **5** | 15 | பாம் எண்ணெய் , பாம் ஸ்டியரின் மற்றும் மாஜரின் | 16,745,388,060 |
| **6** | 39 | பிளாஸ்ரிக்குகளும் அவற்றினது பொருள்களும் | 14,229,738,324 |
| **7** | 17 | சீனியும் மற்றும் சீனி மிட்டாய் வகைகளும் | 12,509,377,567 |
| **8** | 4 | பால் தயாரிப்புகள் | 11,346,042,635 |
| **9** | 85 | மின்சார உதிரிப்பாகங்கள் | 11,189,856,035 |
| **10** | 7 | உருளைக்கிழங்கு, வெங்காளம் மற்றும் சிக்கடலைகள் போன்றவை | 11,159,580,840 |
| **11** | 10 | கோதுமை | 10,061,862,006 |
| **12** | 48 | கடதாசியும் கடதாசியட்டையும் | 8,381,274,991 |
| **13** | 72 | இரும்பும் உருக்கு இரும்பும் | 8,182,058,190 |
| **14** | 22 | மதுபான வகைகள், மதுசாரம், வினாகிரி | 7,789,696,291 |
| **15** | 69 | மட்பாண்ட பொருள்கள் | 7,077,415,002 |
| **16** | 73 | இரும்பு அல்லது உருக்கு இரும்பினது பொருள்கள் | 6,960,450,154 |
| **17** | 40 | இறப்பரும் மற்றும் அவற்றினது பொருள்களும் | 6,873,678,991 |
| **18** | 38 | பல்வகை இரசாயன தயாரிப்புகள் | 4,813,522,887 |
| **19** | 33 | வாசனைத்திரவியங்களது கலப்பு | 3,739,644,250 |
| **20** | 8 | உண்ணத்தக்க பழங்களும் விதைகளும் : முலாம் பழங்கள், நாரத்தைப் பழங்கள் அல்லது தோல்கள் | 3,321,985,551 |
| **21** | 62 | ஆடை மற்றும் துணிமணிகளது பொருள்களும், பின்னப்படாதவை அல்லது கொக்கி ஊசி கொண்டு வேலைப்பாடு செய்யப்படாதவை | 3,318,596,630 |
| **22** | 19 | மோல்டட பிரித்தெடுப்புகளும் மற்றும் தயாரிப்புகளும் | 3,266,662,100 |
| **23** | 9 | கோப்பி, தேயிலை, மேற் நறுமணசரக்குகள் | 3,231,436,590 |
| **24** | 32 | தோல் பதனிடும் அல்லது சாயந்தோய்க்கும் வடிசாறுகள் | 2,673,713,485 |
| **25** | 94 | தளபாடம் | 2,409,327,799 |
| **26** | 29 | சேதனவுறுப்பு இரசாயன பொருள்கள் | 2,305,323,184 |
| **27** | 70 | கண்ணாடியும் கண்ணாடிப் பொருள்களும் | 2,299,963,739 |
| **28** | 76 | அலுமினியமும் அவற்றினது பொருட்களும் | 2,247,774,118 |
| **29** | 23 | உணவுக்கைத்தொழிலிலி இருந்து கிடைக்கும் எச்சங்களும் கழிவுகளும் | 2,162,432,546 |
| **30** | 16 | இறைச்சியினது அல்லது மீனினது அல்லது சிப்பிகளது தயாரிப்புகள் | 2,161,237,419 |
| **31** | 55 | மனிதரால் செய்யப்பட்ட இழை நார்கள் | 2,130,794,106 |
| **32** | 3 | மீன், ஓட்டுப்பிராணிகள், சிப்பி வகைகள் மற்றும் பிற நீர்வாழ் முள்ளந்தண்டில்லாத பிராணிகள் | 2,090,322,399 |
| **33** | 83 | மூல ஊலோகங்களிலான நானவித பொருட்கள் | 2,057,942,609 |
| **34** | 21 | நானாவிதங்களும் உண்ணத்தகு தயாரிப்புகளும் | 1,995,885,338 |
| **35** | 52 | பருத்தி | 1,886,616,662 |
| **36** | 20 | மரக்கறிகள், பழங்கள், விதைகளது தயாரிப்புகள் அல்லது தாவரங்களது பிற பாகங்கள் | 1,698,387,293 |
| **37** | 96 | பலவித உற்பத்திசெய்த பொருட்கள் | 1,628,393,356 |
| **38** | 28 | அசேதன இரசாயனங்கள் | 1,577,559,760 |
| **39** | 34 | சவர்க்காரம், மேற்பாகத்தாக்கு பொருட்கள், சலவைத் தயாரிப்புகள் | 1,554,077,021 |
| **40** | 31 | வளமாக்கிகள் | 1,546,648,679 |
| **41** | 74 | செம்பும் அவற்றினது பொருட்களும் | 1,536,341,131 |
| **42** | 44 | மரமும் மரத்திலான பொருள்களும் | 1,479,636,534 |
| **43** | 68 | கல்லால், சாந்தினால், சீமெந்தினால், மைக்காவினால் அல்லது அவை போன்ற மூலப்பொருட்களிலானவை | 1,357,840,376 |
| **44** | 90 | ஒளியியல், நிழற்படவியல், சலனப்படவியல் உதிரிப்பாகங்கள் | 1,253,509,939 |
| **45** | 64 | காலணிகள் | 1,227,603,542 |
| **46** | 82 | மூலலோகத்திலான கருவிகள்,துணைக்கருவிகளின் தொகுதி, வெட்டுக்கருவிகளின் தொகுதி, கரண்கெளும் சுவர் முட்களும் | 1,143,768,011 |
| **47** | 61 | ஆக்கப்பட்ட புடவைப்பொருட்களும் ஆடைதுணிப்பொருட்களும் | 1,048,008,283 |
| **48** | 11 | அரையல் தொழிற்சாலைகளது தயாரிப்புகள் | 913,371,753 |
| **49** | 60 | பின்னப்பட்ட அல்லது வலைப்பின்னல் செய்யப்பெற்ற துணிகள் | 827,109,788 |
| **50** | 14 | பின்னல் வேலைக்கு பயன்படும் தாவரப்பொருட்கள் | 823,838,762 |

குறிப்பிடத்தக்க வருவாயினை ஈட்டித்தருகின்ற பண்டங்கள் - இறங்குவரிசையில் - 2013

| விபரம் | மொத்த வரி (ரூபா) | மொத்த வருவாய்க்கு எதிரானதொரு விகிதமாக **(%)** |
|---|---|---|
| மோட்டார் வானங்கள் | 88,909,340,890 | 19 |
| பெற்றோலிய தயாரிப்புகள் | 76,774,999,341 | 17 |
| சீமெந்து மற்றும் சீமெந்து உருக்காங்கல் | 19,567,106,125 | 4 |
| பொயிலர்கள் இயந்திரங்கள் | 17,937,661,754 | 4 |
| பாம் எண்ணெய் , பாம் ஸ்டியரின் மற்றும் மாஜரின் | 16,745,388,060 | 3 |
| பிளாஸ்ரிக்குகளும் அவற்றினது பொருள்களும் | 14,229,738,324 | 3 |
| சீனியும் மற்றும் சீனி மிட்டாய் வகைகளும் | 12,509,377,567 | 2 |
| பால் தயாரிப்புகள் | 11,346,042,635 | 2 |
| மின்சார உதிரிப்பாகங்கள் | 11,189,856,035 | 2 |
| உண்ணத்தகு மரக்களிகளும் கிழங்குகளும் | 11,159,580,840 | 2 |
| ஏனையவை | 165,362,291,913 | 37 |




அரசிறை சேகரிப்பினது ஒப்பீட்டாய்வு – 2012 மற்றும் 2013

(ரூபா மில்)

| வகை | 2012 | 2013 | வேறுபாடு |
|---|---|---|---|
| இறக்குமதித் தீர்வை | 73,488.80 | 74,765.96 | 1,277.16 |
| ஏற்றுமதித் திர்வை | 20.863 | 21.658164 | 0.795164 |
| துறைமுக மற்றும் விமனநிலைய அபிவிருத்தி அறவீடு | 70,110.73 | 61,516.09 | -8,594.63 |
| செஸ் வரி - இறக்குமதி | 29,603.82 | 33,010.93 | 3,407.11 |
| மோட்டார் வாகனச் சலுகை அறவீடு | 0 | 0 | 0 |
| பிராந்திய கட்டுமான அபிவிருத்தி அறவீடு | 6.80 | 1.35 | -5.456 |
| செஸ் வரி - ஏற்றுமதி | 3,136.46 | 3,087.14 | -49.32 |
| விசேட பண்ட அறவீடு | 33,665.84 | 46,704.89 | 13,039.05 |
| மொத்த சுங்க வரி வருமானம் | 210033.303 | 219108.0189 | 9074.715932 |
| உற்பத்தி வரி ï சிகரெட்டுகள் | 53,528.69 | 58,534.24 | 5,005.55 |
| உற்பத்தி வரி ï மதுபானம் | 39.0804 | 0.0752 | -39.0052 |
| உற்பத்தி வரி ï எரிபொருள் | 28,466.07 | 27,130.55 | -1,335.52 |
| உற்பத்தி வரி ï எரிபொருள் (இறக்குமதி) | 27,837.50 | 27,130.55 | -706.95 |
| உற்பத்தி வரி ï எரிபொருள் (உள்நாடு) | 628.58 | 0.00 | -628.58 |
| | | | |
| உற்பத்தி வரி ï மோட்டார் வாகனம் | 46,495.74 | 55,517.12 | 9,021.39 |
| உற்பத்தி வரி ï ஏனையவைகள் | 3,336.09 | 2,423.83 | -912.26 |
| உற்பத்தி வரி ï ஏனையவைகள் - இறக்குமதி | 2,533.48 | 1,144.39 | -1,389.09 |
| உற்பத்தி வரி ï ஏனையவைகள் - உள்நாடு | 802.61 | 1,279.44 | 476.83 |
| மொத்த உற்பத்தி வரி வருமானம் | 131,865.67 | 143,605.82 | 11,740.15 |
| இறக்குமதி மீதான பெறுமதி சேர் வரி | 99,469.33 | 96,590.88 | -2,878.45 |
| சமூக பாதுகாப்பு அறவீடு | 1.29 | 0.23 | -1.06 |
| சமூக பாதுகாப்பு அறவீடு - இறக்குமதி | 1.29 | 0.23 | -1.06 |
| சமூக பாதுகாப்பு அறவீடு ï உள்நாடு | 0.00 | 0.00 | 0.00 |
| தேசக் கட்டுமான வரி | 15,667.26 | 22,443.44 | 6,776.17 |
| மொத்த பிற வரி வருமானம் | 115,137.89 | 119,034.54 | 3,896.66 |
| மொத்த வரி வருமானம் | 457,036.86 | 481,748.38 | 24,711.52 |
| தைத்த ஆடைகளது விற்பனை | 104.69 | 91.51 | -13.17 |
| | | 0.00 | 0.00 |
| பலவகைப் பொருட்கள் | 5,042.17 | 2,142.35 | |
| | | | |
| மொத்த வரியல்லா வருமானம் | 5,146.86 | 2,233.87 | -13.17 |
| மொத்த வருமானம் (வரி மற்றும் வரியல்லா) | 462183.7168 | 483982.247 | 24698.34687 |
| நிகர சேமிப்புகள் | 1,774.00 | 1,230.52 | -543.49 |
| சேமிப்புகளுடனான மொத்த வருமானம் | **463957.7168** | **485212.762** | **21255.045** |


அரசிறை சேகரிப்பினது ஒப்பீட்டாய்வு – 2012 மற்றும் 2013





மொத்த சுங்க அரசிறைகளது ஒப்பீட்டாய்வு - வருடம் மற்றும் மாதம் வாரியாக

(ரூபா. மில்)

| மாதம் | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 24,709 | 17,582 | 20,973 | 33,334 | 36,759 | 39,161 |
| பெப்ரவரி | 25,198 | 16,886 | 27,635 | 29,384 | 32,071 | 31,490 |
| மார்ச் | 27,701 | 31,520 | 28,276 | 38,853 | 45,402 | 41,938 |
| ஏப்ரல் | 23,732 | 19,401 | 25,968 | 33,264 | 40,701 | 39,133 |
| மே | 25,433 | 18,666 | 26,127 | 36,451 | 43,343 | 38,875 |
| ஜுன் | 22,370 | 21,856 | 26,949 | 36,743 | 46,809 | 36,363 |
| ஜுலை | 24,279 | 23,788 | 35,494 | 37,725 | 32,940 | 46,159 |
| ஆகஸ்ட் | 24,080 | 23,964 | 34,429 | 38,763 | 33,310 | 37,737 |
| செப்டம்பர் | 23,714 | 57,971 | 34,620 | 40,482 | 33,643 | 36,258 |
| ஒக்டோபர் | 23,327 | 22,424 | 38,703 | 37,156 | 33,890 | 42,603 |
| நொவம்பர் | 30,923 | 26,380 | 40,527 | 40,537 | 33,073 | 41,169 |
| டிசம்பர் | 39,772 | 38,545 | 41,201 | 57,650 | 31,916 | 65,227 |
| மொத்தம் | **315,236** | **318,982** | **380,903** | **460,343** | **443,858** | **498,126** |




மொத்த சுங்க அரசிறைகளது ஒப்பீட்டாய்வு - வருடம் மற்றும் மாதம் வாரியாக
ரூபா. மில்லியன்
70000
60000
50000
40000
30000
20000
10000
0
ஜனவரி
பெப்ரவரி
மார்ச்
ஏப்ரல்
மே
ஜூன்
ஜூலை
ஆகஸ்ட்
செப்டம்பர்
ஒக்டோபர்
நொவம்பர்
டிசம்பர்
2008
2009
2010
2011
2012
2013

மொத்த சுங்க வருவாயினது ஒப்பீட்டாய்வு – வருடம் ரீதியாக
550,000
500,000
450,000
400,000
350,000
300,000
250,000
2008
2009
2010
2011
2012
2013
Series1


## மோட்டார் வாகன இறக்குமதிகள்
(இறக்குமதி செய்யப்பட்ட அலகுகளது எண்ணிக்கை)

| | அலகுகள் | | |
|---|---|---|---|
| | **2011** | **2012** | **2013** |
| ஜனவரி | 34,883 | 50,311 | 31,973 |
| பெப்ரவரி | 34,985 | 38,477 | 19,372 |
| மார்ச் | 37,126 | 53,228 | 22,667 |
| ஏப்ரல் | 41,712 | 33,767 | 47,239 |
| மே | 47,794 | 31,080 | 34,541 |
| ஜூன் | 44,178 | 19,862 | 28,484 |
| ஜூலை | 54,851 | 17,519 | 32,489 |
| ஆகஸ்ட் | 45,842 | 19,800 | 31,879 |
| செப்டம்பர் | 52,843 | 33,313 | 28,674 |
| ஒக்டோபர் | 49,480 | 43,758 | 29,577 |
| நொவம்பர் | 35,192 | 25,505 | 22,174 |
| டிசம்பர் | 47,022 | 26,668 | 31,974 |
| மொத்தம் | 525,908 | 393,288 | 363,056 |



மோட்டார் வாகன இறக்குமதி
சீ ஐ எப் பெறுமதி


| | சீ ஐ எப் பெறுமதி (ரூபா) | | |
|---|---|---|---|
| | **2011** | **2012** | **2013** |
| ஜனவரி | 14,523,722,878 | 21,256,336,140 | 13,918,084,078 |
| பெப்ரவரி | 12,373,845,242 | 16,954,170,840 | 16,954,170,840 |
| மார்ச் | 16,554,923,978 | 24,426,409,258 | 24,426,409,258 |
| ஏப்ரல் | 14,428,851,903 | 16,083,149,987 | 16,083,149,987 |
| மே | 16,615,696,882 | 15,659,343,418 | 15,659,343,418 |
| ஜுன் | 15,565,149,707 | 10,556,027,168 | 10,556,027,168 |
| ஜுலை | 18,429,774,777 | 10,720,764,216 | 10,720,764,216 |
| ஆகஸ்ட் | 17,907,567,940 | 10,329,151,341 | 10,329,151,341 |
| செப்டம்பர் | 19,059,350,081 | 8,438,231,519 | 8,438,231,519 |
| ஒக்டோபர் | 18,640,067,761 | 7,275,261,435 | 7,275,261,435 |
| நொவம்பர் | 15,474,611,733 | 8,406,879,450 | 8,406,879,450 |
| டிசம்பர் | 16,909,220,753 | 7,179,033,205 | 7,179,033,205 |
| மொத்தம் | 196,482,783,635 | 157,284,757,977 | 149,946,507,928 |



# மோட்டார் வாகன இறக்குமதிகள்


வரி வருமானம்

| | அரசிறை (ரூபா) | | |
|---|---|---|---|
| | **2011** | **2012** | **2013** |
| ஜனவரி | 9,725,110,365 | 11,109,844,511 | 6,110,180,354 |
| பெப்ரவரி | 8,069,640,783 | 8,233,046,108 | 3,900,074,807 |
| மார்ச் | 10,464,242,348 | 13,911,906,605 | 5,777,845,610 |
| ஏப்ரல் | 8,868,923,698 | 11,783,621,944 | 6,648,146,874 |
| மே | 11,783,367,142 | 12,364,583,772 | 6,821,280,690 |
| ஜுன் | 10,444,041,904 | 5,354,183,367 | 6,984,718,534 |
| ஜுலை | 11,506,136,845 | 5,455,760,513 | 9,299,717,685 |
| ஆகஸ்ட் | 11,578,660,244 | 5,918,646,790 | 9,301,914,023 |
| செப்டம்பர் | 12,229,833,942 | 5,413,904,828 | 7,463,853,161 |
| ஒக்டோபர் | 11,398,540,101 | 4,922,883,651 | 8,433,628,709 |
| நொவம்பர் | 10,424,804,707 | 4,996,455,008 | 7,028,786,552 |
| டிசம்பர் | 11,923,432,615 | 5,008,196,732 | 6,514,730,458 |
| மொத்தம் | **128,416,734,694** | **94,473,033,829** | **84,284,879,470** |



## மோட்டார் வாகன இறக்குமதிகள்
### வாகனங்கள் தொடர்பில் தள்ளுபடி செய்யப்பட்ட சுங்கத் தீர்வை

| மாதம் | சீ.ஐ.எப் பெறுமதி | தள்ளுபடி செய்யப்பட்ட சுங்கத் தீர்வை (ரூபா) |
|---|---|---|
| ஜனவரி | 507,362,381 | 127,473,589 |
| பெப்ரவரி | 991,789,485 | 253,103,878 |
| மார்ச் | 1,929,609,076 | 553,357,122 |
| ஏப்ரல் | 2,330,898,248 | 686,453,871 |
| மே | 2,635,223,342 | 794,043,230 |
| ஜூன் | 3,540,353,743 | 1,002,225,223 |
| ஜூலை | 4,368,038,163 | 1,223,655,314 |
| ஆகஸ்ட் | 4,353,321,184 | 1,207,758,653 |
| செப்டம்பர் | 3,037,955,431 | 871,273,235 |
| ஒக்டோபர் | 2,505,415,842 | 733,615,917 |
| நொவம்பர் | 3,329,255,371 | 920,967,851 |
| டிசம்பர் | 1,983,618,624 | 485,394,324 |




விஷேட கருத்திட்டங்கள் தொடர்பில் தள்ளுபடி செய்யப்பட்ட தீர்வை

| கருத்திட்டம் | பெறுமதி (ரூபா) | தள்ளுபடி செய்யப்பட்ட சுங்கத் தீர்வை(ரூபா) |
|---|---|---|
| கொழும்பு கட்டுநாயக அதிவேகப் பாதைத் திட்டம் | 510,494,519 | 59,837,212 |
| ஏனைய வீதி அபிவிருத்தித் திட்டங்கள் | 3,744,061,743 | 8,671,006,188 |
| துறைமுக அபிவிருத்தித் திட்டம் - ஹம்பாந்தோட்ட | 4,576,384,534 | 557,913,794 |
| மொறகஹகந்த அபிவிருத்தித் திட்டம் | 447,581,701 | 40,412,262 |
| தாமரைக் கோபுரத் திட்டம் | 1,015,914,956 | 151,472,902 |
| உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் | 8,965,080,664 | 272,235,015 |
| மொத்தம் | **14,683,133,584** | **9,194,963,579** |

முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான இறக்குமதிகள் - 2013

| வர்த்தக உடன்படிக்கைகள் | சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை | நிகர நிறை (கி.கி) | விநியோகக் கூறு | பெறுமதி (ரூபா) | மொத்த வரிகள்(ரூபா) |
|---|---|---|---|---|---|
| APTA | 347 | 7,243,988 | 6,269,828 | 1,582,842,300 | 520,981,813 |
| GSTP | 45 | 2,200,069 | 2,882 | 1,816,889,457 | 3,577,441,007 |
| ISFTA | 9,962 | 1,399,411,935 | 1,365,241,211 | 50,682,034,352 | 23,355,248,652 |
| PSFTA | 1,390 | 999,606,873 | 1,010,136,758 | 15,472,880,496 | 4,383,418,620 |
| SAFTA | 173 | 1,100,485 | 1,230,655 | 202,015,041 | 114,833,205 |
| SAPTA | 37 | 253,293 | 253,327 | 51,315,210 | 17,651,074 |
| SAPTA - LDC | 15 | 114,579 | 114,579 | 36,742,673 | 14,346,160 |
| மொத்தம் | **11,969** | **2,409,931,221** | **2,383,249,239** | **69,844,719,529** | **31,983,920,531** |



# அமுலாக்கல் கொத்தணி

# தடுப்புப் பணிப்பகம்

அறிமுகம்

தடுப்புப் பணிப்பகமானது இலங்கைச் சுங்கத்தின் பிரதானமான சட்ட அமுலாக்கல் கரமாகச் செயற்பட்டுவருகிறது. குறிப்பாக கப்பற்துறைமுகங்கள், கரையோரப் பிரதேசங்கள், கடல் வழிப்பாதைகள் மற்றும் எல்லைப்புற கடற்பிரதேசங்கள், சர்வதேச விமானநிலையங்கள், சுதந்திர வர்த்தக வலயங்கள், ஏற்றுமதிச் செயலாக்கல் வலயங்கள், பொருள் சோதனைக் சாலைகள் மற்றும் உள்நாட்டு வெளியாக்கல் நிலையங்கள் போன்ற சுங்கத்தின் ஒட்டுமொத்தச் செயற்பாட்டுப் பிரதேசங்கள் குறித்தான கண்காணிப்பினை மேற்கொண்டு வருகிறது.

இது நிர்வாகம், ரீபீ௦ கிளை, செயற்பாடுகள், புலன்விசாரணைகள், கடல் சார் பிரிவு, பாரிய-கப்பற்துறை கண்காணிப்பகம், விற்பனைகள், மற்றும் தீவு முழுவதிலும் கரையோர நகரங்களில் உபாய முறையில் நிறுவப்பட்டுள்ள அனேக உப தடுப்புக் காரியாலயங்கள் ஆகிய பல்வேறு கிளைகளைக் கொண்டுள்ளது.

**பிரதான தொழிற்பாடுகள்**

1. கள்ளக்கடத்தல், வர்த்தக மோசடிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றைத் தடுத்தல்.
2. சுங்க குற்றமிழைப்புகள் தொடர்பான தகவல்களைப் பெற்று அவை குறித்து நடவடிக்கை மேற்கொள்ளல்.
3. சுங்க குற்றமிழைப்புக்களை அதன் ஆரம்ப கட்டத்திலேயே கண்டுபிடித்தல், தவறான பொருட்களை பறிமுதல் செய்தல், குற்றமிழைத்தோருக்கு எதிராக புலனாய்வுகளையும் விசாரணைகளையும் மற்றும் வழக்குத்தொடர்தல்களையும் மேற்கொள்ளல்.
4. உரிய அரசிறைச் சேகரிப்பை உறுதிப்படுத்தல்.
5. நாட்டின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் சூழலியல்/ சுற்றால் சார்ந்த சிறப்பம்சங்களைப் பாதுகாப்பதோடு, இவற்றுடன் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அமுலாக்கத்தைப் பேணுதல்.
6. கொழும்புத் துறைமுகம், ஏனைய துறைமுகங்கள், பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம் மற்றும் மத்தளை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் ஆகியவற்றில் கண்காணிப்பை மேற்கொள்ளல்.
7. படகுகளின் நடமாட்டத்தையும் மற்றும் எல்லைப்புற செயற்பாடுகளையும் கட்டுபபடுத்தல்.
8. இலங்கைச் சுங்கத்தினால் பறிமுதல் செய்யப்படும் பொருட்களை விற்றுத்தீர்த்தல்.

## 1. கடத்தல், வர்த்தக ரீதியான மோசடிகள், மற்றும் போதைப்பொருள் குற்றங்கள் போன்றவற்றைத் தடுத்தல்.

கோட்டை தடுப்பு அலுவகத்தின் அமைவிடம் மாற்றப்பட்டதோடு, பிரதான அலுவலகத்திலிருந்த கிளை அலுவலகங்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு உள்ளேயும் மற்றும் வெளியேயுமான 03 இடங்களுக்கு இடமாற்றப்பட்டன. தற்போது தடுத்தல் நிர்வாகக் கிளை அலுவலகமும் தடுத்தல் அலுவலகப் பணிப்பாளரும் சுங்க தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றுள்ளன. இவை தவிர, திருகோணமலை, காலி, கொக்கலை, நீர்கொழும்பு மற்றும் சின்னப்படு ஆகிய குறிப்பான பாரிய கரையோரப் பிரதேசங்களில் பல ரீஉப-தடுப்பு அலுவலகங்கள்௦ உள்ளன.

மேற்படி அலுவலகங்களிலுள்ள தடுப்பு அதிகாரிகள், நாட்டிற்குள் நோக்கியதும் மற்றும் நாட்டிலிருந்து வெளிநோக்கியதுமான கடத்தல்கள், வர்த்தக மோசடிகள் மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றச்செயல்களை தடுப்பதற்கான ஆக்கபூர்வமானதும் முனைப்பானதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இது தவிர, சுதந்திர வர்த்தக வலயங்களில் கடமையாற்றும் தடுப்பு அதிகாரிகள் அவ்வலயங்களிலிருந்து தீர்வை விதிக்கப்படத்தக்க பொருட்களின் இரகசிய வெளியாக்கல்களைத் தடுக்கும் செயற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளனர்.

நாட்டில் சமாதானம் நிலவியதன் பின்னர், யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய இடங்களிலும் அதன் உப தடுப்பு அலுவலகங்களை மீளத்தொடங்குவதற்கான நடவடிக்கைகளை திணைக்களம்

எடுத்துள்ளது. இருந்தபோதிலும், சுங்கத்திற்கான படகுகள் மற்றும் பயிற்றப்பட்ட அதிகாரிகள் இன்மையின் காரணத்தால் கடல் சார்ந்த நடவடிக்கைகளை திணைக்களத்தினால் மீள-ஆரம்பிக்க முடியாமற்போனது. எனினும், இவ்விடயம் தொடர்பில் ஆராயும் நோக்கிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதோடு அது பற்றிய விரிவானதொரு அறிக்கையும் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை கப்பற்துறைமுகம் மற்றும் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் போன்ற இடங்களில் தற்போது தடுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2. கண்டுபிடிப்புகள், பறிமுதல்கள், புலனாய்வுகள் மற்றும் வழக்குத் தொடுப்புகள்.

தடுப்புப் பணிப்பகத்திற்கு பல்வேறு சுங்க-குற்றச்செயல்கள் (கடத்தல், வர்த்தக மோசடிகள், மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றச்செயல்கள்) பற்றிய தகவல்கள் பிரதானமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வழிமுறைகள் மூலம் கிடைக்கப்பெறுகிறது :

(அ) தடுப்புப் பணிப்பகத்திலுள்ள அதிகாரிகளின் தனிப்பட்ட தகவலாளர்கள்.

(ஆ) பொதுமக்கள் தகவலாளர்கள்

இவை தவிர, தடுப்பு அலுவலக அதிகாரிகள் தமது சொந்த முயற்சிகளின் பேரில் சரக்குப் பட்டியல் விபரம் மற்றும் இறக்குமதி வெளியாக்கல் ஆவணங்கள் போன்றவற்றை கண்டறிந்து பல்வேறு மோசடிச் செயற்பாடுகளை அடையாளங்கண்டிருந்தனர். மோசடிமிக்க செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களை கண்டு பிடிப்பதற்கான இணையம் மூலமான வசதியானது கைமுறை மூலமான சரக்குப் பட்டியல் விபரம் மற்றும் சுங்கப்பிரகடனம் போன்றவற்றைக் கொண்டு கண்டு பிடிப்பதை விடவும் அதிகம் வழியமைத்துள்ளது.

தடுப்புப் பணிப்பகத்தின் மதிநுட்பம் மிக்க செயற்பாடுகள் சோதனைச் செயற்பாடுகளையும் மற்றும் பறிமுதல் நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு வழிவகுத்துள்ளதோடு, கடத்தப்பட்ட அல்லது சுங்கத்திற்கு வெளிப்படுத்தப்படாத பொருட்களைக் கண்டறிவதற்கும் வழிவகுத்துள்ளது. தடுப்பு அதிகாரிகளால் புலனாய்வுகள் மற்றும் வழக்குத் தொடரல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அரிதாகவுள்ள மனித வளங்களின் பயனுறுதிமிக்க தன்மையினை சுங்க அமுலாக்கல் பிரிவின் மூலம் மேம்படுத்தும் வகையில் பொருத்தமான இடர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டமொன்றை விருத்தி செய்வதற்கான தொழில்நுட்ப உதவியினைப் பெறுவதற்கான கோரிக்கையினை அமுல்படுத்தவேண்டிய தேவை காணப்படுகிறது. மேலும், அமுலாக்கல் செயற்பாடுடன் தொடர்புடைய இலக்குகள் மற்றும் கடமைகள் தொடர்பான விசேட அவதானத்தைக் கொண்ட திறன் கட்டியெழுப்புகை நிகழ்ச்சித்திட்டங்களை தடுப்பு அலுவலக அதிகாரிகளுக்கு நடத்துவதும் அவசியமாகவுள்ளது.

## 3. அரசுக்குரிய வருமானச் சேகரிப்பினை உறுதிசெய்தல்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களிலிருந்தான அரசிறையினை சேகரித்தல் சுங்கத்தின் பிரதான குறிக்கோள்களுள் ஒன்றாகும். நம்பிக்கை மிக்க வர்த்தகர்களுக்காக சுங்கத் திணைக்களத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட நீண்டகால அடைவுடைய வர்த்தக வசதியேற்பாட்டு நடவடிக்கைகள், அரசிறையினைச் செலுத்தாது சுங்கத்தினூடாக தப்பித்துச் செல்லும் மோசடிச் செயற்பாடுகள் தொடர்பிலான தீர்வினை ஓரளவு வழங்கியுள்ளது. அனேக வர்த்தகர்கள் சட்டத்தை மதித்து இணக்கப்பாடுகளை தன்னார்வமாக விரும்புபவர்களாகவிருக்கும் அதேவேளை, தமது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை சரியாக விபரிக்காத, குறை மதிப்பிடுகின்ற அல்லது வெளிப்படுத்துகை செய்யாத சில தீய சக்திகளும் உள்ளனர்.

2013 ஆம் ஆண்டின் போது தடுப்புப் பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை விடயங்களின் விபரங்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை | 3,050 |
| முடிவுறுத்தப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை | 2,473 |
| குற்றங்களென தீர்மானிக்கப்பட்ட மற்றும் பறிமுதல்கள் / அபராதங்கள் விதிக்கப்பட்டவை பற்றிய விசாரணைகளின் எண்ணிக்கை | 378 |
| சேகரிக்கப்பட்ட அபராதங்களதும் பறிமுதல்களதும் மொத்த எண்ணிக்கை (ரூபா.மில்) | 251.48 |
| மேலதிக பதிவுகளாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை (ரூபா.மில்) | 31.61 |
| சேகரிக்கப்பட்ட மொத்தத் தீர்வை (உள்நாட்டு விற்பனைகள்) (ரூபா.மில்) | 745.84 |
| மேலதிக நேர அல்லது ஏனையவை தொடர்பிலான மொத்த அறவீடுகள் (ரூபா.மில்) | 91.93 |
| மொத்த சேகரிப்பு (ரூபா.மில்) | 1,120.67 |

## 4. நாட்டின் சமூகப் பொருளாதார, கலாசார, சூழலியல் மற்றும் சுற்றாடல் சார்ந்த நலன்களை பாதுகாத்தலும், மற்றும் தொடர்புபட்ட சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் நடைமுறைப்படுத்தலும்.

தடுப்புப் பணிப்பகத்தினால் நாட்டின் சமூகப் பொருளாதார, கலாசார, சூழலியல் மற்றும் சுற்றாடல் சார்ந்த நலன்களை அதன் நடவடிக்கைகள் மூலமாக பாதுகாக்க முடிந்துள்ளது.

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளுக்கும் மேலாக, கீழே குறிப்பிடப்பட்டன போன்ற ஒழுங்குவிதிகள் மற்றும் ஏனைய சட்டங்களுடன் இணங்கிச் செல்வதனையும் தடுப்புப் பணிப்பகத்தின் அலுவலர்கள் உறுதிசெய்கின்றனர் :

1. ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் சட்டம்
2. தாவர, விலங்கினச் சட்டம்
3. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டம்
4. ஒப்பனைப் பொருட்கள், சாதனங்கள் மற்றும் ஔடதங்கள் சட்டம்
5. தொலைத் தொடர்பு ஒழுங்குவிதி ஆணைக்குழுச் சட்டம்
6. உணவு மற்றும் மருந்துகள் சட்டம்
7. அன்னிய செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்
8. புலமைச் சொத்துரிமைச் சட்டம்

## 5. கொழும்பு துறைமுகம், ஏனைய துறைமுகங்கள், சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஆகிய தொடர்பான கண்காணிப்பு

கொழும்புத் துறைமுகம் தொடர்பிலான கண்காணிப்பினை இப்பணிப்பகத்தின், துறைமுக தடுப்பு அலுவலகம் மற்றும் கொச்சிக்கடை தடுப்பு அலுவலகம் ஆகிய இரண்டு பிரிவுகளும் மேற்கொள்வதோடு, இவை முறையே துறைமுகப் பிரதேசம் மற்றும் கொச்சிக்கடைப் பிரதேசம் போன்றன தொடர்பிலான கண்காணிப்பிற்கு பொறுப்பாகவுள்ளன. கொழும்புத் துறைமுகத்தைப் பொறுத்தவரை, துறைமுகத் தடுப்பு அலுவலகத்திலுள்ள தரைமார்க்க கடமை அதிகாரியும் மற்றும் கொச்சிக்கடை தடுப்பு அலுவலத்திலுள்ள கொச்சிக்கடை கடமை அதிகாரியும் தொடர்ச்சியான சேவையில் ஈடுபடுவதனால், இவ் அலுவலகங்கள் ஒருபோதும் மூடப்படுவதில்லை. இவ் அதிகாரிகள் மேற்படி பிரதேசங்கள் உரிய முறையில் ஆட்களைக் கொண்டு சிறப்பாக தொழிற்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட பிரதேசங்களின் நுழைவாயில்களில் பார்வையிடுகின்றனர்.

பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம் மற்றும் கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயம் ஆகியன நய்க்கந்தவிலுள்ள உப-தடுப்பு அலுவலகத்தினால் கண்காணிக்கப்படுவதோடு, பியகம உப-தடுப்பு அலுவகத்தினால் பியகம சுதந்திர வர்த்தக வலயம் கண்காணிக்கப்படுகிறது.

இருப்பினும், பல்லேகல, ஹொரண, மீரிகம போன்ற இடங்களிலுள்ள ஏற்றுமதிச் செயலாக்க வலயங்கள் தடுப்புப் பணிப்பகத்தின் கண்காணிப்பின் கீழ் இல்லை. எனினும், சுங்கம் தொடர்பான அம்சங்களை முன்னெடுப்பதற்கு மேற்படி வலயங்களில் உப-தடுப்பு அலுவகங்களைத் தாபித்தல் அல்லது ஏனைய உப-தடுப்பு அலுவலகங்களின் அதிகாரிகளை அங்கு ஈடுபடுத்துவது அவசியமாகும்.

## 6. கப்பல்களின் நகர்வுகள் மற்றும் எல்லைப்புறச் செயற்பாடுகள் தொடர்பான கட்டுப்பாட்டு நடவடிக்கை

நான்கு பிரதான துறைமுகங்களிலும் (அம்பாந்தோட்டைத் துறைமுகம் உள்ளிட்ட) கப்பல்களின் இயக்கத்தைக் கண்காணிப்பதும் தடுப்புப் பணிப்பகத்தின் பொறுப்புக்களில் ஒன்றாகும். கொழும்புத் துறைமுகத்தில் இந்நடவடிக்கையானது துறைமுகத் தடுப்பு அலுவகத்தினால் கண்காணிக்கப்பட்டு வரும் அதேவேளை, காலி, திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்களில் இந்நடவடிக்கைகள் அந்தந்த துறைமுகத்தில் தாபிக்கப்பட்டுள்ள உப-தடுப்பு அலுவலகத்தினால் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

துறைமுகத் தடுப்பு அலுவலகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள துறைமுக கடமை அதிகாரி கப்பல்களின் இயக்கங்களைக் கட்டுப்படுத்தும் வகையிலான தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக 24 மணி நேர தொடர்ச்சியான சேவையிலுள்ளார். இவர் கொழும்புத் துறைமுகத்தில் அழைப்பிலுள்ள கப்பல்களைப் பெறுவதோடு, இவை கொழும்புத் துறைமுகத்தினுள் நுழைவதற்கான ரிஇறுதியான துறைமுக அழைப்பும் இலிருந்தான அனுமதியைப் பெற்றுள்ளமையையும் உறுதிப்படுத்துவார். மேலும், ஐ.எம்.ஓ. விமானப் பணியாளர்களின் வெளிப்படுத்தல்களையும் பரிசோதிப்பர். கொழும்பு துறைமுகத்தின் அழைப்பிலுள்ள ஒவ்வொரு கப்பலும் தொடர்பிலும் உள்வரும் சரக்குகள் பற்றிய வெளிப்படுத்துகை, கப்பலில் ஏற்றப்படும் பொருட்கள் பற்றிய வெளிப்படுத்துகை மற்றும் மாற்றியேற்றப்படும் பொருட்கள் பற்றிய வெளிப்படுத்துகை என்பன தொடர்பான விரபங்களை சமர்ப்பித்து அவற்றை வெளிப்படுத்துகை செய்வது உள்நாட்டுக் கப்பல் முகவரின் பொறுப்பாகவுள்ளது.

புறப்பட்டுச் செல்கின்ற ஒவ்வொரு கப்பலுக்கும் துறைமுக தீர்வை அதிகாரியால் ரிவெளிச்செல்வதற்கான வெளிப்படுத்துகைò வழங்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட அனைத்துத் தேவைப்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டிருப்பதனை அந்தந்த கப்பலின் மாலுமிக்குப் பொறுப்பாகச் செயற்படுகின்ற கப்பலின் உள்நாட்டு முகவரால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இது வழங்கப்படுகிறது.

தற்போதுள்ளவாறு, கப்பல் முகவர்கள் ஏற்றுமதிச் சரக்குகளின் வெளிப்படுத்துகை பற்றிய விபரங்களை தடுப்பு அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதில்லை. எனவே, வெளிச்செல்லத் தயாராகவுள்ள கப்பலிலுள்ள ஏற்றுமதிச் சரக்குகள் பற்றிய விபரங்கள் தொடர்பில் வெளிச்செல்லல் அனுமதியை வழங்குகின்ற அதிகாரி அறிந்திருக்கமாட்டார்.

## 7. இலங்கைச் சுங்கத்தினால் பறிமுதல் செய்யப்படும் பொருட்களை விற்றுத்தீர்த்தல்

மத்திய பொருள் அகற்றுகைப் பிரிவானது திணைக்களத்தின் பல்வேறு அனைத்து பணிப்பகங்கள் மற்றும் பிரிவுகளினாலும் கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை விற்றுத்தீர்ப்பதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை பகிரங்க ஏலமிடல் மூலம் விற்றுத் தீர்ப்பதற்கான அதிகாரத்தை சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் வழங்குவதோடு, அத்தகைய ஏலமிடலின் போது நிதிசார் ஒழுங்குவிதிகளின் கீழ் தாபிக்கப்பட்ட வினைமனு விற்பனை நடைமுறை பின்பற்றப்படுகின்றன.

# சமூக பாதுகாப்புப் பணிப்பகம்

அறிமுகம்

சமூகப் பாதுகாப்புச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான தனியான பணிப்பகம் ஒன்று, இதே நோக்கத்திற்காக சுங்கத்தின் பல்வேறு பணிப்பகங்களிலும் இயங்கிவந்த சம்பந்தப்பட்ட பிரிவுகளை இதனுடன் ஒருங்கிணைத்துத் தாபிக்கப்பட்டது. குறிப்பாக போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, நுகர்வோர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவு, மற்றும் உயிர்ப் பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமை பாதுகாப்புப் பிரிவு ஆகியன சுங்கச்சட்டம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சட்டங்களை கண்டிப்பாக அமுல்படுத்துவத்தும் பிரிவுகளென இனங்காணப்பட்டுள்ளன.

பிரதான தொழிற்பாடுகள்

இப்பணிப்பகத்தின் தொழிற்பாடுகள், சுங்க நிலையங்களில் இடம்பெறுகின்ற வர்த்தகர்களுக்கு வசதியளிக்கும் வகையிலான சம்பந்தப்பட்ட சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் அரசுக்குரிய வருமானத்தை உறுதிப்படுத்தும் அதேவேளை, போதைப்பொருள், உள நிலைமாற்ற மருந்துப்பொருட்களைக் கடத்திச் செல்வதை தடுத்தல்/ இடைமறித்தல், மற்றும் சுற்றாடல், உயிர்ப்பல்வகைமை, கலாசாரம், தேசிய மரபுரிமைகள் மற்றும் நுகர்வோர் உரிமைகள் போன்றவற்றையும் பாதுகாத்தல்.

## போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு

போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவானது, சமூக-பொருளாதார, சுற்றாடல் மற்றும் கலாச்சார நலன்களைப் பாதுகாக்கும் அதேவேளை, சுங்கச் சட்டங்களையும் மற்றும் இறக்குமதிகள், ஏற்றுமதிகள், அன்பளிப்புப் பொதியுடைய அஞ்சல்கள், கூரியர் சேவைகள், பயணிகள் மற்றும் பயணிகள் பொதிகள் போன்றனவற்றுடன் போதைப்பொருட்கள் மற்றும் உள நிலைமாற்ற மருந்துகளைக் கடத்துவதைத் தடுப்பதுடன் சம்பந்தப்பட்ட சட்டங்களையும் அமுல்படுத்தும் நோக்கில் தாபிக்கப்பட்டதாகும்.

பிரதான தொழிற்பாடுகள்

1. விமானநிலையத்தில் 24 மணிநேர கண்காணிப்பு
2. விமானம் மூலமான சரக்குகள், கப்பல் சரக்குகள், தபால் மற்றும் கூரியர் பொருட்கள் தொடர்பில் எழுமாறான கண்காணிப்பு
3. ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக இடம்பெறக்கூடிய இறக்குமி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களோடு போதைப் பொருட்கள் மற்றும் உள நிலைமாற்றி மருந்துகள் ஆகியவற்றின் கடத்தல்களை இனங்கண்டு அவற்றைத் தடுத்தல்.
4. நம்பத்தகு தகவல்கள் குறித்தான புலன்விசாரணைகளை மேற்கொள்ளல்.
5. விழிப்பூட்டல் மற்றும் திறன் கட்டியெழுப்புகை தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
6. முன்னோடி இரசாயனப் பொருள் இறக்குமதிகள், கப்பல் மாற்றி ஏற்றுகைகள், ஏற்றுமதிகள் போன்றன தொடர்பில் விழிப்புடன் செயற்படல்.
7. பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்துடன் இணைந்து கூட்டான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2013 ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலான போதைப் பொருள் கண்டுபிடிப்பு

| விபரம் | அளவு (கிராம்) | பெறுமதி (ரூ) |
|---|---|---|
| ஹிரோயின் | 2528.00 | 17,072,000.00 |
| மெதம்பெடமைன் | 1970.00 | 25.61 மில்லியன் |
| காற் தாவரம் | 50000.00 | 78,000.00 |

போதைப்பொருள்கள் தவிந்த ஏனைய கண்டுபிடிப்புகள்

| மாதம் | விபரம் | பெறுமதி (ரூ) |
|---|---|---|
| ஜனவரி | வெங்காய விதைகள் ï 20 கி.கி | 2000/- |
| | குக்டா தர மெல்லும் புகையிலை | 14000/- |
| | கருக்கலைப்பு மாத்திரைகள் - 94 அட்டைகள் | 9400/- |
| பெப்ரவரி | சிகரெட்டுகள் - 375 பெட்டிகள் (கார்ட்டுன்கள்) | 1,125,000/- |
| | மெல்லும் புகையிலை ï 13 கி.கி | 13000/- |
| | க்லானசீபம் 2மில்லிகிராம் மாத்திரைகள் - 2610 அட்டைகள் | 522,000/- |
| மார்ச் | டெப்ரோவீரா ஊசி மூலமான மருந்தேற்றுகைகள் - 4990 வில்லைகள் | 1497,000/- |
| | மிபிபிறின் மாத்திரைகள் - 344 அட்டைகள் | 34400/- |
| | சிகரெட்டுகள் - 119 பெட்டிகள் (கார்ட்டுன்கள்) | 357,000/- |
| | றிவ்றில் மாத்திரிரைகள் - 650 அட்டைகள் | 195000/- |
| | பேங் பறாங் - 5.5 கி.கி | 550,000/- |
| | முகத்திற்கு பூசும் கிறீம் - 130 | 13,000/- |
| ஏப்ரல் | மிசொப்றொஸ்ட் - 400 மாத்திரைகள் | 40,000/- |
| | ஏலக்காய் - 110.3 கி.கி | 110,300/- |
| | சிகரெட்டுகள் - 10 பெட்டிகள் (கார்ட்டுன்கள்) | 30,000/- |
| | பெரிய வெங்காய விதைகள் - 195 கி.கி | 19500/- |
| | றிவொட்றில் மாத்திரைகள் - 1998 அட்டைகள் | 899,400/- |
| | டீபோ புறோவீர ï 1116 குப்பிகள் | 334800/- |
| | ட்றமடோல் ஹைட்றோகுலோறைட்டு ï 3500 வில்லைகள் | 1,050,000/- |
| மே | மேற்கத்தைய மருத்துவம் - 1135 ஊசி மூலமான மருந்தேற்றுகைகள் | 340500/- |
| | மெப்பிரின் - 200 அட்டைகள் | 20000/- |
| | றிவோட்றில் மாத்திரைகள் - 450 அட்டைகள் | 135000/- |
| | பேன் பராங் - 10 கி.கி | 100000/- |
| | மிசோபுரொஸ்ரோல் - 850 அட்டைகள் | 85000/- |
| ஜூன் | மிசோபுரொஸ்ரோல் - 90 அட்டைகள் | 9000/- |
| | சத்திரசிகிச்சை பிளேட்கள் - எண்ணிக்கை 1000 | 100000/- |
| ஜூலை | சிகரெட்டுகள் - 60 பெட்டிகள் (கார்ட்டுன்கள்) | 120000/- |
| | றொவோட்றில் மாத்திரைகள் - 600 காட்டுன்கள் | 300000/- |
| | சேர்கம்ஸ்சிசன் கருவிகள் - எண்ணிக்கை 10000 | 50000/- |
| | மிசொப்ரொஸ்ட் மாத்திரைகள் - எண்ணிக்கை 1000 | 350000/- |
| ஆகஸ்ட் | ஓப்பனைப் பொருட்கள் | 47000/- |
| | ஓன்றுசேர்க்கப்ட்ட மேற்கத்தய மருந்துகள் | 112082/- |
| செப்டெம்பர் | ட்றமடோல் ஹைட்றோகுளோறைட்டு ï 500 அட்டைகள் | 100000/- |
| | டோப் மவுன்டயின் சிகரெட்டுகள் - 401 கார்டுன்கள் | 2120000/- |
| ஒக்டோபர் | ட்றமடோல் ஹைட்றோகுளோறைட்டு ï 467 அட்டைகள் | 800600/- |
| | மிசப்றொஸ்ரோல் - 125 அட்டைகள் | 31280/-/- |
| நவம்பர் | மிசப்றொஸ்ரோல் - 88 அட்டைகள் | 8800/- |
| | றொவோட்றில் மாத்திரைகள் - 720 அட்டைகள் | 72000/- |
| டிசம்பர் | ஓன்றுசேர்க்கப்ட்ட மேற்கத்தய மருந்துகள் | 57750/- |
| | போலி ஐ.அ.டொ மற்றும் சி.எச்.எப் தாள்கள் | 416500/- |
| | ட்றமடோல் ஹைட்றோகுளோறைட்டு ï 1000 மாத்திரைகள் | 13600/- |
| | மிசப்றொஸ்ரோல் - 136 மாத்திரைகள் | 13600/- |
| | சிகரெட்டுகள் - 100 | 300000/- |

## உயிர் பல்வகைமை, கலாசார மற்றும் மரபுரிமைப் பாதுகாப்புப் பிரிவு

இப்பிரிவானது, நேர்மையாக் செயற்படுகின்ற வர்த்தகர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் நோக்கில், நாட்டில் சட்டவிரோத வனவாழ் ஜீவராசிகள் தொடர்பான வியாபாரத்தைத் தடுக்கும் அதேவேளை, நாட்டின் சுற்றாடல், உயிர் பல்வகைமை மற்றும் கலாசார மரபுரிமை சார்ந்த அம்சங்கள் போன்றவற்றைப் பாதுகாக்கும் நோக்கில் தாபிக்கப்பட்டதாகும்.

பிரதான தொழிற்பாடுகள்

1. உயிர் பல்வகையுடன் தொடர்புபட்ட தயாரிப்புகளை எடுத்துச்செல்லுவதுடன் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களை அமுல்படுத்தல்.
2. சகல உயிர் பல்வகையுடன் தொடர்புபட்ட ஏற்றுமதிகள், இறக்குமதிகளின் விபரம், வகைப்படுத்தல் மற்றும் பெறுமதி மதிப்பிடல் தொடர்பில் பரிசோதித்தல்.
3. உயிர் பல்வகைமையுடன் தொடர்புபட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை, தாவர விலங்கின மற்றும் தொடர்புபட்ட தயாரிப்புகளது இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் போதான தேவைப்பாட்டு அனுமதிப்பத்திரத்துடனான இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்தல்.
4. நாட்டினது உயிரியல் மரபுரிமைக்கு தீங்கு விளைவிக்காத விதத்திலான தாவர, விலங்கினக்கூறுகளின் சட்டரீதியான இறக்குமதிகள், ஏற்றுமதிகள் ஊடாக நாட்டினது அபிவிருத்தித் திட்டங்களை ஊக்குவித்தல்.

### 2013 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் உயிர் பல்வகைமை, கலாசார மற்றும் மரபுரிமைப் பாதுகாப்புப் பிரிவிலிலுள்ள (உ.ப.க.ம.பி) அலுவலர்களால் கண்டுபடிப்புகள்

| | திகதி | உற்பத்திகள் | |
|---|---|---|---|
| 1 | 2013.01.03 | மயில் இறகுகள் | உ.ப.க.ம.பி |
| 2 | 2013.01.06 | மயில் இறகுகள் | உ.ப.க.ம.பி |
| 3 | 2013.01.08 | பழங்கால குடுவை | உ.ப.க.ம.பி |
| 4 | 2013.01.09 | கடல் கக்கரிக்காய் | உ.ப.க.ம.பி |
| 5 | 2013.01.19 | கடல் கக்கரிக்காய் | உ.ப.க.ம.பி |
| 6 | 2013.02.21 | புதிய நீரினுள்ளான உயிர்வாழ் நண்டுகள் | உ.ப.க.ம.பி |
| 7 | 2013.02.22 | கடற் சிப்பிகள் | உ.ப.க.ம.பி |
| 8 | 2013.03.31 | பழங்கால குற்றி நாயணங்கள் | உ.ப.க.ம.பி |
| 9 | 2013.02.22 | மான் கொம்புகள், | உ.ப.க.ம.பி |
| 10 | 2013.03.22 | பழங்கால குற்றி நாயணங்கள் | உ.ப.க.ம.பி |
| 11 | 2013.04.04 | புதிய நீரினுள்ளான மீன் மற்றும் நண்டுகள் | உ.ப.க.ம.பி |
| 12 | 2013.03.27 | கடற்சிப்பிகள், பவளங்கள் | உ.ப.க.ம.பி |
| 13 | 2013.03.27 | கடல் பவளங்கள் | உ.ப.க.ம.பி |
| 15 | 2013.04.12 | கொதல ஹிம்புடு (*சலாசியா றீரிகுலாதா*) | உ.ப.க.ம.பி |
| 16 | 2013.05.02 | பழங்கால குற்றி நாயணங்கள் | உ.ப.க.ம.பி |
| 17 | 2013.05.20 | பாதுகாப்பளிக்கப்பட்ட கடற் சிப்பிகள் | உ.ப.க.ம.பி |
| 18 | 2013.06.06 | உயிர் வாழ் லொப்ஸ்டர் எனும் ஒருவகை நண்டு | உ.ப.க.ம.பி |
| 19 | 2013.06.15 | பழங்கால குற்றி நாயணங்கள், பழங்கால எலுமிச்சை வைக்கும் பாத்திரம் | உ.ப.க.ம.பி |
| 20 | 2013.04.01 | கடற் சிப்பிகள் | உ.ப.க.ம.பி |

| | | | |
|---|---|---|---|
| 21 | 2013.07.04 | கடல் கக்கரிக்காய் | உ.ப.க.ம.பி |
| 22 | 2013.07.05 | மஹோகனி மரம் | உ.ப.க.ம.பி |
| 23 | 2013.07.05 | கருங்காலி மரத்திலான தளபாடம், யானைத்தந்தத்திலான சிலை, பழங்கால குற்றி நாயணங்கள் | உ.ப.க.ம.பி |
| 24 | 2013.07.09 | பாதுகாப்பளிக்கப்பட்ட கடற் சிப்பிகள் | உ.ப.க.ம.பி |
| 25 | 2013.07.21 | பாதுகாப்பளிக்கப்பட்ட கடற் சிப்பிகள் | உ.ப.க.ம.பி |
| 26 | 2013.07.22 | யானைத்தந்தத்திலான காப்புகளும், மாலையும் | உ.ப.க.ம.பி |
| 27 | 2013.07.27 | வல்ல பட்டை | உ.ப.க.ம.பி |
| 28 | 2013.07.28 | மான் தோல் | உ.ப.க.ம.பி |
| 29 | 2013.10.08 | சந்தன எண்ணெய் | உ.ப.க.ம.பி |
| 30 | 2013.09.27 | உயிர்வாழ் பறவைகள் | பொதி |
| 31 | 2013.10.08 | வல்ல பட்டை | உ.ப.க.ம.பி |
| 32 | 2013.10.11 | வல்ல பட்டை | உ.ப.க.ம.பி |
| 33 | 2013.10.16 | சந்தன எண்ணெய் | உ.ப.க.ம.பி |
| 34 | 2013.10.16 | சந்தன எண்ணெய், குச்சிகள் | உ.ப.க.ம.பி |
| 35 | 2013.10.23 | சந்தன எண்ணெய் | உ.ப.க.ம.பி |
| 36 | 2013.10.23 | சந்தன எண்ணெய் | உ.ப.க.ம.பி |
| 37 | 2013.10.30 | வல்ல பட்டை | உ.ப.க.ம.பி |

சட்ட ரீதியற்ற முறையில் கொத்தல ஹிம்பட்டு எனும் மூலிகையை ஏற்றுமதி செய்வதற்கான முயற்சியொன்று தடுக்கப்பட்டமை.





2013 ஏப்ரல் 12 இல், நீரிழிவு நோக்காக பாரம்பரி ஆயுள்வேத மருத்துவ முறை மூலம் சிகிச்சை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற சுதேச மூலிகையினை சட்ட ரீதியற்ற முறையில் ஏற்றுமதி செய்வதற்கானதொரு முயற்சியினை இலங்கைச் சுங்கம் முறியடித்தது. வெளிநாட்டிற்குக் கடத்தப்படவிருந்த மேற்படி கொத்தல ஹிம்பட்டுவயானது (*Salacia reticulata*) இலங்கையில் உலர் வலயக் காடுகளில் வளர்கின்றதொரு மூலிகைத் தாவரமாகும். இலங்கையைச் சேர்ந்த ஒரு வர்த்தகரே 323 கிலோகிராம் நிறையுடைய கொத்தல ஹிம்பட்டுயினை 12 பொதிகளில் அடைத்து கூரியர் சேவை மூலமாக கடத்த முற்பட்டுள்ளார். இது ஜப்பானுக்கு கொண்டுசெல்வதற்குரியதாகவிருந்தது.

கொத்தல ஹிம்பட்டு என்பது மருத்துவக் குணம் கொண்டதொரு தாவரமாகும். இது நீரிழிவு மற்றும் பல்வேறு காயங்கள் ஆகியவற்றுக்கு சிகிச்சையளிப்பதற்காக பல நூறாண்டு காலமாக சுதேச மருத்துவத்துறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. விஞ்ஞானிகள் இம் மூலிகையினைக் கொண்டு நீரிழிவு மற்றும் பல்வேறு காயங்களுக்கான சிகிச்சை மருந்தினைத் தயாரிக்கும் நோக்கோடு, பெரியதொரு கேள்வி உருவாகும் வகையில், இதிலுள்ள முனைப்பான மரபணுக் கூறுகளைப் பிரித்தெடுப்பதற்கும் முயன்றுள்ளனர். கொத்தல ஹிம்பட்டு பிரதானமாக இலங்கையின் உலர் வலயங்கள் மற்றும் இடைத்தர வலயங்களில் காணப்படுகின்றன.

எனினும், கொத்தல ஹிம்பட்டு வேகம் குன்றிய வளர்ச்சியுடைய தாவரமாகும். இது உரிய அறுவடைக்குரிய முதிர்ச்சிப் பருவத்தை அடைவதற்கு சுமார் 40 முதல் 50 வருடங்கள் வரை எடுக்கின்றன. கட்டுப்படுத்த முடியாத வகையில் கொத்தல ஹிம்பட்டு எடுத்துச்செல்லப்படுவதனால் காடுகளில் இவற்றின் அளவு ஏற்கனவே

குறைவடைந்துள்ளது. மேலும் இது அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள தாவரம் மற்றும் விலங்கு இனங்கள் பற்றிய சிவப்புப் பட்டியலில் இலங்கையில் அருகிவரும் தாவரமாக இது வகைப்படுத்தப்படக்கூடும்.

வரலாற்று முக்கியத்துவம் மிக்க பொருட்களைக் கடத்துவதற்கான முயற்சியொன்று தடுத்து முறியடிக்கப்பட்டமை

இலங்கையைச் சேர்ந்த பயணியொருவர் ஒல்லாந்தர், போத்துக்கீசர் மற்றும் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்திற்குரிய மற்றும் பொலன்னறுவைக் காலத்திற்குரிய வரலாற்றுப் பெறுமதி மிக்க புராதன நாணயங்களை தமது பொதிகளினுள் மறைத்து வைத்துக் கடத்திச் செல்வதற்கு முயற்சித்த போது அவர் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இலங்கைச் சுங்கத்தினரால் 2013.03.22 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர். தொல்பொருளியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் உரிமப்பத்திரம்/ அனுமதி எதுமில்லாது எம் நாட்டிற்குரிய மரபுரிமைச் சொத்துக்களை கடத்திற்செல்வதானது, தொல்பொருளியல் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் ஒரு குற்றமுடைய செயலாகையால், மேற்படி பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

சட்ட ரீதியற்ற முறையில் கடற்சிப்பிகளை ஏற்றுமதி செய்வதற்கு எத்தனித்த போது அவை பறிமுதல் செய்யப்பட்ட சந்தர்ப்பம்.



வெளிநாட்டுப் பயணி ஒருவர் கடற்சிப்பிகளைக் கொண்ட சரக்கொன்றினை 2013 மார்ச்சு 27 ஆம் திகதி நாட்டை விட்டு வெளியே கடத்திச் செல்வதற்கு முற்பட்ட போது, அவற்றை இலங்கைச் சுங்கத்தின் உயிர்ப்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் பாதுகாப்புப் பிரிவினரால் கைப்பற்ற முடிந்தது.

பிங்க் சங்கு எனப்படுகின்ற குயீன் சங்கானது, அருகிவருகின்ற வனவாழ் தாவரம் மற்றும் விலங்கினங்களின் சர்வதேச வர்த்தகம் மீதான சமவாயத்தின் கீழ் பாதுகாக்கப்படுகிறது.

சங்குகள் அனேக நாடுகளில் அதிகமாக அறுவடை செய்யப்படுவதோடு, இதனை அனுமதியின்றி அளவுக்கதிகமாக எடுத்துச்செல்வதும் மற்றும் பெருமளவு தொகையினை ஏற்றுமதி செய்வதும் சட்டவிரோதமான செயலாகும். இருப்பினும், சர்வதேச சந்தையில் சங்கின் உணவுப் பாகத்திற்கும் சிப்பிகளுக்கும் பெருமளவு கேள்வி உள்ளன. சில கடற்சிப்பிகளும் மெல்லுடலிகளும் (மொலஸ்கா) தாவர மற்றும் விலங்கின பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுகின்றன. இச்சட்டத்தின் பிரகாரம் சிப்பிகள் கடற்கரைகளில் அவை உயிரிழந்து கிடந்தாலும் அவற்றை எடுப்பதற்கும் அனுமதியில்லை.

சில வகைக் கடற்சிப்பிகளைக் கொண்டு செய்யப்படுகின்ற பாரம்பரிய வளையல்கள் திருமண நிகழ்வுகளின் போது அணியப்படுவதால் அத்தகைய கடற்சிப்பிகள் ஏற்றுமதிச் சந்தையில் பெருமளவு கேள்வியைக் கொண்டுள்ளன.

கட்டுப்பாடு விதிக்கப்பட்ட மரங்களை ஏற்றுமதி செய்வதற்கு முற்பட்ட சந்தர்ப்பம் ஒன்று முறியடிக்கப்படடமை



நாட்டை விட்டும் வெளியே கொண்டு செல்லவிருந்த மஹோகனி மரக்குற்றிகளை (*Swetinia macrophyla*) கொண்டதொரு சரக்கானது 2013 ஜூலை 05 ஆம் திகதி இலங்கைச் சுங்கத்தினால் கண்டுபிடிக்கப்பட்டது. இவை மாலைதீவுக்கு எடுத்துசெல்லப்படுவதற்காக பேணப்பட்டிருந்தது.

மஹோகனி மரக்குற்றிகளை எடுத்துச்செல்வதற்கு வனத்திணைக்களத்தின் உரிமப்பத்திரம் அவசியமாகும். எனவே இதுவே வனக் கட்டளைச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச்சட்ட மீறுகையொன்றாகவுள்ளது. சுங்கமானது மேற்படி மீறுகைக்காக இக்குற்றமிழைத்த கம்பனிக்கு அபராதம் ஒன்றை விதித்தது.

கட்டுப்பாடு விதிக்கப்பட்ட நீர்வாழ் உயிரிகளை கடத்திச் செல்வதற்கானதொரு முயற்சியைக் கண்டுபிடித்தமை





உயிர்ப்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள், நாட்டிலிருந்து கடத்திச்செல்வதற்காக வைக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்ட உயிருள்ள நன்னீர் மீன்கள் மற்றும் நன்னீர் நண்டுகள் ஆகியவற்றைக் கொண்டதொரு சரக்கினை 2013 ஏப்ரல் 04 ஆம் திகதி கண்டுபிடித்தனர்.

குறித்த இச்சரக்கானது கட்டுப்பாடு விதிக்கப்பட்ட நன்னீர் மீன் இனமாகிய பிளவர் பின் பார்ப்ஸ் (*Rasborides veterifloris*) மற்றும் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட நன்னீர் இறால் (*Macrobachism spp*) ஆகியவற்றைக் கொண்டிருந்தது. இந்நீர் வாழ் உயிரிகள் கட்டார் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தவையாகும். இவை பறிமுதல் செய்யப்பட்டு தேசிய விலங்கியல் பூங்காக்களுக்கு கையளிக்கப்பட்டதோடு, குற்றவாளிகளுக்கு அபராதமும் விதிக்கப்பட்டது.

இது கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் சட்டத்துடன் வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச்சட்ட மீறுகையொன்றாகும்.

கட்டுப்பாடு விதிக்கப்பட்ட தளபாடப் பொருட்களை கண்டுபிடித்தமை




இலங்கையிலிருந்து எடுத்துச்செல்வதற்காக கருங்காலி மூலம் செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் பழங்கால நாணயக்குற்றிகள் ஆகியன உள்ளிட்டு பணியாளின் பொருட்களென வெளிப்படுத்தப்பட்ட எப்.சீ.எல். கொள்கலன் 2013.07.05 இல் கண்டுபிடிக்கப்பட்டது. இது 2013.07.06 இல் மலேசியா நாட்டுக்கு எடுத்துச்செல்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்து. 24 மரத்தளபாடங்கள், 86 பழங்கால நாணயங்கள் மற்றும் ஐவரி சிலை ஒன்று ஆகியன இக்கொள்கலனில் வெளிப்படுத்தப்படாத பொருட்களாகக் காணப்பட்டன. வெளிப்படுத்தப்படாத 24 தளபாடங்களிலும் 19 தளபாடங்கள் கருங்காலி அல்லது அதனைச்சார்ந்த மர வகையைக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகவிருந்தன.

2009 இன் 65 ஆம் இலக்க வனப் பேணுகைகக் கட்டளைச்சட்டம் மற்றும் 1995 இன் 23 ஆம் இலக்க வனம் (திருத்தச்) சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட 200.12.05 ஆம் திகதிய 1161/6 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தல் ஆகியவற்றின் பிரகாரம் கருங்காலி மரம் கொண்டு தயாரிக்கப்பட்ட தளபாடங்களை ஏற்றுமதி செய்வதானது தடைசெய்யப்பட்டுள்ளது.

1937 இன் 2 ஆம் இலக்க தாவரம் மற்றும் விலங்கினங்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் 2009 இன் 22 ஆம் இலக்கத் திருத்தச் சட்டம் ஆகியவற்றின் பிரகாரம் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் செல்லுபடியாகும் உரிமப்பத்திரம் இன்றி ஐவரி சிலையினை ஏற்றுமதி செய்ய முடியாது.

1940 இன் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச்சட்டத்தின் 36 ஆம் பிரிவு மற்றும் 1998 இன் 24 ஆம் இலக்க அதன் திருத்தச் சட்டம் ஆகியவற்றின் பிரகாரம் தொல்பொருளியல் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற செல்லுபடியாகும் உரிமப்பத்திரம் இன்றி பழங்காலப் பெறுமதிகளை ஏற்றுமதி செய்ய முடியாது.

ஏயர் காகோவில் வைத்து சந்தன எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டமை

50 கி.கி. எடையுடைய சந்தன எண்ணெய் கொண்ட இரண்டு பெரல்கள், கூரியர் சேவை மூலமாக சிங்கப்பூர் நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்குத் தயாராக வைக்கப்பட்டிருந்த வேளையில் ஏயர் காகோவில் வைத்து 2013.10.07 இல் கண்டுபிடிக்கப்பட்டது. இவை நறுமண எண்ணெய் மற்றும் மாதிரிகள் என வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

சந்தனம் மரங்கள், 2009 இன் 22 ஆம் இலக்க தாவர மற்றும் விலங்குகள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டதொன்றாகும். எனவே, சந்தனத்தை ஏற்றுமதி செய்வதானது, 2009 இன் 22 ஆம் இலக்க தாவர மற்றும் விலங்குகள் பாதுகாப்புக் கட்டளைச்சட்ட (திருத்தச்) சட்டம் மற்றும் 2009 இன் 65 ஆம் இலக்க வனப் பேணுகை கட்டளைச்சட்ட (திருத்தச்) சட்டம் ஆகியவற்றின் கீழானதொரு மீறுகையாகும்.

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வெல்லப்பட்டை (***Gyrinops walla***) கண்டுபிடிக்கப்பட்டமை



இரண்டு கம்போடிய பயணிகள், தடை விதிக்கப்பட்டதான 31 கி.கி. எடையுடைய வெல்லப்பட்டை மரத்துண்டுகளை நாட்டிலிருந்து கொண்டு செல்ல முயற்சித்த போது பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து 2013.10.07 இல் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடத்திச்செல்லப்படவிருந்த வெல்லப்பட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு, சந்தேக நபர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டது.

வெல்லப்பட்டை எனப்படுவது மருத்துவ நோக்கங்களுக்காக பாரம்பரியமாகப் பயன்படுத்தப்படுகின்ற பொதுவானதொரு தாவரமாகும். எனினும், இது வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுவதோடு, ஏனைய நாடுகளில் அதிக விலைபெறுகின்ற ரெசின் எனும் திரவியத்தை இது உற்பத்தி செய்கிறது.

சாராம்சம்

| | |
|---|---|
| உயிர்ப் பல்வகைமை தொடர்பான விடயங்கள் | 28 |
| மரபுரிமைப் பெறுமதிகள் தொடர்பான விடயங்கள் | 10 |
| உயிர்ப் பல்வகைமை தொடர்பான விடயங்கள் (ஏனைய கிளை அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டவை) | 03 |
| மரபுரிமைப் பெறுமதிகள் தொடர்பான விடயங்கள் (ஏனைய கிளை அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டவை) | 03 |

## பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவு

பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவானது, நாட்டின் நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்களுடனான இணக்கப்பாட்டிற்கு அமைய இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தரத்தைக் கட்டுப்படுத்தி அவற்றை கண்காணிக்கும் நோக்கில் 2011 இல் தாபிக்கப்பட்டதாகும். பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவானது இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் மீதான பிரச்சினைகள் தொடர்பிலான புலமைச் சொத்துரிமைகளை அமுல்படுத்துவதற்கான இலங்கைச் சுங்கத்தின் மைய அவதானத்தையுடையது. மேலும் இது ஏனைய சம்பந்தப்பட்ட முகவரகங்களுடனான ஒருங்கிணைந்த செயற்பாட்டினூடாக சர்வதேச மாநாடுகளிலிருந்து எழக்கூடிய அமுலாக்கத்துடன் கூடிய கடப்பாடுகள் மூலம் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான பங்களிப்பினை வழங்குகிறது.

### பிரதான தொழிற்பாடுகள்

1. புலமைச் சொத்துரிமைச் சட்டம், இலங்கை நியமங்கள் நிறுவகச் சட்டம், ஒப்பனைப் பொருட்கள் மற்றும் ஔடதங்கள் சட்டம், நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம், மற்றும் சுகாதாரத் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சு ஆகியன தொடர்பிலான ஏதேனும் மோசடிகள் அல்லது மீறுகைகளை எதிர்த்துச் செயற்படும் நோக்கிலான சுங்கத்தோடு தொடர்புபட்ட சட்டங்கள் போன்ற தேவைப்பாடுகளை அமுல்படுத்தும் வகையில், மேற்படி அதிகாரங்களின் அனைத்து இக்குமதிகளும், சுங்க வளாகத்திலிருந்து அவை விடுவிக்கப்படுவதற்கு முன்னர், நுகர்வோர் பாதுகாப்புப் பிரிவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.
2. மேற்படி நோக்கத்திற்காக சரக்கினைப் பெறுபவரால் மேற்படி அதிகாரங்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்படுகின்ற உத்தரவாதப் பதிவினை பேணுதல்.
3. சம்பந்தப்பட்ட அதிகாரங்களின் ஒழுங்குவிதிகளைப் பேணும் வகையில் வாடிக்கையாளர் நடைமுறைகளை இற்றைப்படுத்தல்.
4. அவசியமானவிடத்து இப்பிரிவிலிருந்தான பணியாளரை பரிசோதனை மேற்கொள்ளும் இடங்களில் அமர்த்துதல்.
5. இதுவரை அடையாளங்காணப்பட்டுள்ள சுங்கச் சட்டங்களோடு தொடர்புடைய கட்டளைச்சட்டங்கள், சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒழுங்குவிதிகளை மீளாய்வுசெய்தல்.
6. மேற்படி செயற்பாடுகள் தொடர்பான கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டங்களோடு சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச் சட்டத்திற்கேற்ப சட்டங்களை பிரயோகித்தல்.

இவ்வாண்டுக்காலப்பகுதில் கையாளப்பட்ட விடயங்கள்

| மாதம் | பொருட்களது விபரங்கள் | அறவீடுகள் (அபராதங்கள் ) (ரூபா.) |
|---|---|---|
| ஜனவரி | பற்பசை/ மட்பாண்ட தரை ஓடுகள் /மின்சார குவளைகள் | 580,000 |
| பெப்ரவரி | மின் முலாம் பூசப்பட்ட வயர் /பெற்றரிகள் /தையல் நூல் | 145,000 |
| மார்ச் | மட்பாண்ட தரை ஓடுகள் /தோலுக்கு பாவிக்கப்படும் பவுடர் /பீங்கான் பொருட்கள் | 932,000 |
| ஏப்ரல் | மட்பாண்ட ஓடுகள் | 416,000 |
| மே | பீங்கான் பொருட்கள்/ தரை ஓடுகள்/விளக்குகள் | 570,000 |
| ஜூன் | தரை ஓடுகள் /பெற்றரிகள் /விசிறிகள்(பேன்) /குடுவைகள் | 425,000 |
| ஜூலை | மின்சார குவளைகள் /விசிறிகள் /மட்பாண்ட தரை ஓடுகள் | 1,315,340 |
| ஆகஸ்ட் | தரை ஓடுகள் /இரும்பிலான குழாய்கள் /விசிறிகள் /மாஜரீன் /குடுவைகள் | 5,778,371 |
| செப்டெம்பர் | கூரை மின் விசிறிகள் / ஜி.ஐ. குழாய்கள் /தரை ஓடுகள் /சுவிச்கள் தலைக்கவசம் /தையல் நூல் | 2,387,925 |
| ஒக்டோபர் | தரை ஓடுகள் /இரம்பிலான குழாய்கள் /தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் /கூரை மின் விசிறிகள் /தோலில் பாவிக்கப்படும் பவுடர் | 5,410,492 |
| நவம்பர் | தரை ஓடுகள் / விசிறிகள் /பெற்றரிகள் /மின்சார கேத்தல்கள் /மின்சார குவளைகள் | 3,717,900 |
| டிசம்பர் | தரை ஓடுகள் /மின்சார குவளைகள் /தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் /சூடாக்கும் தட்டம் /வயர் கம்புகள் /சூட்டை தக்கவைத்துக்கொள்ளும் குடுவை | 2,942,740 |

2013 ஆம் ஆண்டிலான செயலாற்றுகைப் பொழிப்பு

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 297 |
| குற்றங்களென நிரூபிக்கப்பட்ட மற்றும் பறிமுதல்களதும் விதிக்கப்பட்ட அபராதங்களதும் எண்ணிக்கை | 204 |
| முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 246 |
| சேகரிக்கப்பட்ட அபராதங்களதும் பறிமுதல்களதும் மொத்தத் தொகை (ரூபா) | 30,999,180 |
| புலமைச் சொத்துரிமை தொடர்பிலான நீதிமன்ற வழக்குகளது மொத்த எண்ணிக்கை | 4 |
| கையாளப்பட்ட இலங்கை தர நிர்ணய நிறுவக பதிகளது மொத்தம் | 3852 |

# பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பணிப்பகம்

அறிமுகம்

வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வு எனப்படுவது, சுங்கத்தின் பாதுகாப்பிலிருந்து சரக்குகள் விடுவிக்கப்படுவதனையடுத்து மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வு சார்ந்த சுங்க கட்டுப்பாட்டு நடவடிக்கையாகும். சரக்குகள் தொடர்பான வெளிப்படுத்துகையின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதும் மற்றும் வர்த்தகர்கள் தொடர்பான வர்த்தகத் தரவுகள், வியாபார முறைமைகள், பதிவுகள் மற்றும் பதிவேடுகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதுமே இத்தகைய கணக்காய்வின் நோக்கமாகும். இத்தகைய கணக்காய்வானது, வர்த்தகரின் வளாகத்தில் இடம்பெறக்கூடுமென்பதோடு, நபர் ஒருவரின் பரிமாற்றங்கள் கவனத்திற்கொள்ளப்படக்கூடும்; இது ‟பரிமாற்றம் அடிப்படையிலானம் கணக்காய்வு எனப்படுகிறது, அல்லது குறிப்பிட்ட காலப்பகுதிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிகளை மற்றும்/ அல்லது ஏற்றுமதிகள் கவனத்திற்கொள்ளப்படலாம்; இது ‟கம்பனி அடிப்படையிலானம் கணக்காய்வு எனப்படுகிறது.

வெளியாக்கத்திற்குப் பின்னரான கணக்காய்வுகள் ஒவ்வொரு விடயமாகத் தனித்தனியாகக் கொண்டு, இலக்குப்படுத்தப்பட்ட செயற்பாட்டாளர் மீது அவதானம் செலுத்துவதன் அடிப்படையில், சமுதாயம் மற்றும் வர்த்தகர் தொடர்பான இடர் பகுப்பாய்வு குறித்து தெரிவுசெய்வதன் அடிப்படையில், அல்லது வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு திட்டமிடப்பட்ட ஒழுங்குமுறையான வழிமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட முடியும். மேலும், இக் கணக்காய்வானது குறித்த சில பொருளாதார நடவடிக்கையாளர்களை விசேடமாக கையாளும் வகையிலும் பயன்படுத்தப்பட முடியும்.

(மூலம் : உலக சுங்க அமைப்பகம் மற்றும் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி குறித்தான ஐக்கிய தேசிய மாநாடு ஆகியவற்றினால் இணைந்து வழங்கப்பட்ட தொழில்நுட்பக் குறிப்புகள்)

வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வுக் கிளையானது, உலக வர்த்தக அமைப்பகத்தின் மதிப்பீட்டு உடன்படிக்கையினை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு வசதியளிக்கும் நோக்கில் மதிப்பீட்டுப் பணிப்பகத்தின் கீழ் 2000 ஆம் ஆண்டு முதலில் தாபிக்கப்பட்டது. இக்கிளையானது பின் கணக்காய்வு மற்றும் பொருட்பட்டியல் பற்றிய அலகு, கணக்காய்வு மற்றும் மேற்பார்வைக் கிளை ஆகியவற்றை உள்ளீர்ப்புச்செய்து தாபிக்கப்பட்டதாகும்.

2010 இன் இறுதியில் மேற்கொண்ட சுங்க சீர்திருத்தங்கள் மற்றும் நவீனமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றின் கீழான புதிய நிறுவனக் கட்டமைப்பின் அமுலாக்கத்தோடு, மதிப்பீட்டுப் பணிப்பகத்தின் கீழ் தொழிற்பட்ட வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வுக் கிளையானது அமுலாக்கல் கொத்தணியினுள் சுங்கப்பணிப்பாளர் ஒருவரின் கீழ் தரமுயர்த்தப்பட்டதோடு, இது வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வுப் பணிப்பகம் எனவழைக்கப்பட்டது. இணக்கப்பாடுமிக்க வர்த்தகர்களுக்கு வசதியளிக்க வேண்டிய அவசியம் மற்றும் சுங்க வெளியாக்கத்தில் காலங்கழிவுகள், மோசடிகளைக் கட்டுப்படுத்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொள்கையில், சுங்கத்தில் இடர் முகாமைத்துவப் பிரிவொன்றைத் தாபிப்பதன் மூலம் தற்போதுள்ள முறைமைகளை மேம்படுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாட்டு நடவடிக்கை தொடர்பான கோட்பாடுகளை அமுல்படுத்தல், மற்றும் சுங்க வெளியாக்கல் செயன்முறையிலான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வசதியளிக்கும் நடைமுறைகளை அறிமுகம் செய்தல் ஆகியன வர்த்தக சமூகத்தினருக்கிடையிலான இணக்கப்பாட்டினளவை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச்செய்யக்கூடிய இன்றியமையா காரணிகளாக ஏற்றுக்கொள்ளப்படுவதால், வெளியாக்கலுக்கு முன்னரான கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றின் தொழிற்பாடுகளை கூட்டுறவுக் கொத்தணியினுள்ளானதொரு பணிப்பகத்தின் கீழ் கொண்டுவருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்பின்னர், வெளியாக்கலுக்கு முன்னரான கணக்காய்வும் மற்றும் இடர் முகாமைத்துவமும், 883 ஆம் இலக்க திணைக்களக் கட்டளையின் பிரகாரம் 2013 செப்டம்பர் 26 இலிருந்து செயற்படும் வண்ணம் ‟இணக்கபாடு மற்றும் வசதியளிப்புப் பணிப்பகம்ம எனப்படும் பணிப்பகத்தின் கீழான இரண்டு கிளைகளாக தொழிற்பட்டு வருகின்றன.

முதன்மைக் குறிக்கோள்கள்

(அ) சுங்கப் பிரகடனங்களின் துல்லியம் மற்றும் அங்கீகாரம் ஆகியவற்றை சரிபார்த்தல்.
(ஆ) தவறான பிரகடனங்கள் தொடர்பிலான திருத்தங்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கணக்காய்வுக்குட்படுவோருக்கு பரிந்துரைத்தல்.
(இ) சுங்கத்தின் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுமாறு கணக்காய்வுக்குட்படுவோரை ஊக்குவித்தல்.
(ஈ) இடர் முகாமைத்துவச் செயன்முறைக்கான உள்ளீட்டினை வழங்கல்.

பிரதான தொழிற்பாடுகள்:

1. அனைத்து சுங்கப் பிரகடனம் தொடர்பான ிஆணைப் பிரதிகளைம் திட்டமிட்ட முறையில் சேகரித்து, களஞ்சியப்படுததல் மற்றும் பாதுகாத்தல்.
2. ஆணைப் பிரதிகள், சம்பந்தப்பட் ஆவணங்களை நுண்ணாய்வு செய்தல் மற்றும் அவ் ஆவணங்களிலுள்ள தகவல்கள்/ தரவுகளை பகுப்பாய்வு செய்தல்.
3. வாய்ப்புள்ள கணக்காய்வு விடயங்களைத் தெரிவுசெய்தல்.
4. கணக்காய்வுகை மேற்கொள்ளல்.
5. மோசடிகள் அல்லது குறைவான அறவீடுகள் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அவை தொடர்பில் பொருத்தமான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
6. எதிர்கால மேம்பாட்டுக்கான கணக்காய்வு முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல்.
7. அஸிகுடா சா்வதே முறைமையூடாக சமா்ப்பிக்கப்பட்ட சரக்குகள் பற்றிய இலத்திரனியல் விபரங்களை கண்காணித்தல்.
8. உரிய மீளளிப்புக்களை துரிதமாக வழங்கல்; திணைக்களம் சாா்ந்த மீளளிப்புச் செயற்பாடுகளை சீா்படுத்தி அவற்றைக் கண்காணித்தல்.

வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வில் ஒப்பீட்டாய்வு செய்யப்படுகின்ற பொருட்கள்

கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இறக்குமதி வெளிப்படுத்தல் ஒன்றுக்குத் தேவையான ஒவ்வொரு ஆவணமும் வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வின் போது ஒப்பீட்டாய்வு செய்யப்பட முடியும் :

| தொடர்புபட்ட பொருட்கள் அடிப்படையிலான தீர்வை | தீர்வை விகிதம் தொடர்புபட்ட பொருட்கள் | தீர்வைத் தொகை தொடர்புபட்ட பொருட்கள் | ஏனையவை |
|---|---|---|---|
| பெறுமதி<br><br>அளவு<br><br>நாணயம்<br><br>நாணயமாற்று விகிதம் | வகைப்படுத்தல்<br><br>பொது விகிதங்களது விண்ணப்பங்கள்<br><br>முன்னரிமை விகிதங்கள் | விலக்களிப்புகள்<br><br>நியாயமானமுறையில் தீர்மானிக்கப்பட்ட தொகை<br><br>சரியான தீர்வைக் கணிப்பீடு | மட்டுப்படுத்தப்பட்டவைகள்<br><br>தடைசெய்யப்பட்டவை<br><br>இறக்குமதி அனுமதிப்பத்திரம் புலமைச் சொத்துரிமை<br><br>சீ.ஐ.ரீ.ஈ.எஸ் |

மேற்படி பொருட்கள் சுங்க வெளியாக்கலில் மற்றும்/ அல்லது பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுக்கு முன்னரான வெளியாக்கலுக்கு முந்திய ஒப்பீட்டாய்வு செய்யும் கட்டத்தில் பரிசோதிக்கப்பட முடியுமென்பதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். அநாவசிய இரட்டிப்பினை தவிா்ப்பதற்கும், சிறப்புத்தன்மையை அதிகரிப்பதற்கும் மற்றும் பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு குறித்தான அபகீர்த்தியை குறைப்பதற்கும் பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்விற்கான அணுகலானது சுங்க வெளியாக்கலில் (வெளியாக்கலுக்கு முந்திய ஒப்பீட்டாய்வு) ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டதாகவிருத்தல் வேண்டும். பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு அதிகாரிகள் சுங்கப் பிரகடனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரமன்றி, கணக்குப் புத்தகங்கள் போன்ற


கணக்காய்வுக்குட்படுபவர் தமது வளாகத்தினுள் கடந்த காலங்களில் பேணி வந்த சம்பந்தப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேறுகளையும் பரிசோதிக்கின்றனர் என்பதை ஒரு சிறப்புத் தன்மையாக இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

## பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பிரிவு

2013 ஆம் ஆண்டுக்காலத்தின் போதான செயலாற்றுகை (2011, 2012 உடன் ஒப்பிடப்படுகிறது)

| | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை | 44 | 47 | 93 |
| முடிவுறுத்தப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை (முன்னமே பதிவுசெய்யப்பட்டவை அடங்கவாக) | 69 | 24 | 42 |
| கணக்காய்வு மூலம் நிரூபிக்கப்பட்ட குற்றங்களும் மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்களும் | 33 | 24 | 42 |
| அறவிடப்பட்ட அபராதங்களது மொத்தத் தொகை (ரூபா) | 42,439,788 | 165,713,513 | 251,181,532 |
| பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது மொத்தப் பெறுமதி(ரூபா) | ஒன்றுமில்லை | 278,159,754 | ஒன்றுமில்லை |
| மேலதிக வருவாயாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தெகை(ரூபா) | 153,764,042 | 41,223,576 | ஒன்றுமில்லை |

செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு – 2011, 2012 மற்றும் 2013



மீளளிப்புக் கிளை


மீளளிப்புக் கோரிக்கைகள் பற்றியது

கடந்த ஆண்டுகளுடனான ஒப்பீட்டாய்வு **(2010, 2011** மற்றும் **2012)**

| ஆண்டு | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகள் | 149 | 76 | 186 | 165 |
| நிறைவடைந்த நிதி மீளளிப்புகள் | 17 | 51 | 98 | 92 |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகள் | 03 | 01 | 02 | 06 |

மீளளிப்புக் கோரிக்கைகளது நிலை

கடந்த ஆண்டுகளுடனான ஒப்பீட்டாய்வு **(2010, 2011** மற்றும் **2011)**




இடர் முகாமைத்துவப் பிரிவு

பிரதான தொழிற்பாடுகள்

**1.** உயர் இடர் கொண்ட சரக்கினை தெரிவுசெய்தல்

- முதற்தரம் பதிவுசெய்துகொண்ட இறக்குமதியாளர்கள் பற்றி விபரங்கள் சேகரித்தல் (மே 01 இலிருந்து நவம்பர் 20 வரையும் மற்றும் நவம்பர் 21 இலிருந்து ஜனவரி 09 வரையும்).
- தற்போதுள்ள அதியுயர் இடர் கொண்ட சரக்குப் பட்டியல் தொடர்பான முன்னைய விபரங்களை பகுப்பாய்வு செய்யப்பட்டது.
- ஏற்கவே காணப்பட்ட உயர் இடர் சரக்குப் பட்டியல் நீக்கப்பட்டது.
- புதிய உயர் இடர் சரக்குப் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டது.
- புதிதாக சேர்க்கப்பட்ட உயர் இடர் சரக்கு இறக்குமதியாளர்களை கண்காணித்தல்.

**2.** நீள அறையில் துரித வழிமுறையில் ஆவணமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்

- இனங்காணப்பட்ட இணக்கப்பாடுள்ள வர்த்தகர்களுக்காக நீள அறையில் பச்சை வழிமூல ஆவணமாக்கல் வசதிகள்.
- இணக்கப்பாடுள்ள வர்த்தகர்கள், அவர்களது உள்ளக நடைமுறைகள், கணக்கீட்டு முறைமைகள் மற்றும் இணக்கப்பாட்டு உணர்வுமிக்க விடயங்கள் ஆகியவற்றை மதிப்பீடுவதை இலக்காகக் கொண்டு சம்பந்தப்பட்ட நபர்களை இணக்கமாக கையாளுதல்.
- குறித்த பிரேரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் மேற்படி கம்பனிகளின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தல்.
- நீள அறையின் சுங்கப் பிரகடனச் செயலாக்கத்தில் அஸிகுடா சர்வதேச முறைமையினுள் வர்த்தகர்களை இனங்காண்பதற்கான வரி அடையாளப்படுத்தல் இலக்கங்கள் உள்ளீடு செய்யப்பட்டன.

3. வருமான ஆய்வு

- பிரேரிக்கப்பட்ட வருமான ஆய்வு அறிக்கையின் உள்ளடக்கங்களும் நோக்கெல்லைகளும் கட்டமைக்கப்பட்டன.
- சம்பந்தப்பட்ட பணிப்பகங்களினால் மேலதிக அறவீடுகள், அபராதங்கள் மற்றும் பறிமுதல்கள் ஆகிய வடிவங்களில் சேகரிக்கப்பட்ட பணத்தொகைளை சேகரிப்பதற்கான படிவம் ஒன்றை தயாரித்தல்.
- தெரிவுசெய்யப்படுகின்ற துறைகள் தொடர்பில் அறிந்துகொள்வதற்காக தரவுத்தளத்திலிருந்து இறக்குமதித் தரவுகளை மீளப்பெறுவதற்கான தரவுத்தள வினவல்கள் தயாரிக்கப்பட்டன.

**4.** தன்னியக்க மதிப்பீடு மேற்கோள் தரவுத்தளத்தை தாபித்தல்.

- இயைபுமுறைத் தலைப்பு/பொருட்கள் தொடர்பில் அவற்றின் விபரங்கள்/ இயல்புகள் ஆகியவற்றுக்கு எதிராக தொகுக்கப்பட்டு பின்பற்றப்பட்டன.
- தற்போது செயற்பாட்டிலுள்ள அஸிகுடா சர்வதேச மொடியுளிற்கு எதிராக பிரேரிக்கப்பட்ட மதிப்பீடு மேற்கோள் தரவுத்தளத்திற்கான சாத்தியவள அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டது.
- தரவு பரவலாக்கத்தை பயன்படுத்திய தொகுப்பாக்கம் தொடர்பான நடைமுறை இந்திய பிரதிநிதியினால் மேற்கொள்ளப்படுகின்றமை.

# மத்திய விசாரணைப் பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்பகமானது திணைக்களத்தின் உபாயமுறைத் திட்டம் 2010 ï 2015இன் இலக்குகளுக்கமைய, ஏனைய செயற்பாட்டுப் பணிப்பகங்களினால் கண்டறியப்படுகின்ற சுங்கச் சட்டம் மற்றும் ஏனைய தொடர்புபட்ட சட்டங்களது மீறுகை தொடர்பில் விசாரனைகளை மேற்கொள்ளுவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. மேலும் இது மத்திய விடயப் பதிவினை பேணுவதற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது.

திணைக்களத்தின் நோக்கெல்லையினை திறம்பட எய்தும் நோக்கிலான இப்பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள்களாக :

- சகல சுங்க விசாரணைகளையும் ஒருமுகப்படுத்தி அவற்றை தொழில்வாண்மை தன்மையில் மேற்கொள்ளல்.
- மத்திய விடயப் பதிவினை வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்க முறையிலும் பேணுதல்.
- வெகுமதி பகிர்ந்தளிப்பினை ஒருமுகப்படுத்தி அவற்றினை வெளிப்படத்தன்மையோடு மேற்கொள்ளல்.

பிரதான தொழிற்பாடுகள்

- ஏனைய பணிப்பகங்களினால் (விசேட செயலணி மற்றும் கண்காணிப்பு மற்றும் தடுப்புப் பணிப்பகங்கள் தவரிந்த) கண்டறிப்படுகின்ற விடயங்களை விசாரணை செய்தல்.
- சுங்க மீறுகைகளை கண்டுபிடித்து விசாரணைக்குட்படுத்தல்.
- மத்திய விடயப் பதிவினை பேணுதல்.
- விசேட செயலணி மற்றும் கண்காணிப்பு பணிப்பகம் மற்றும் தடுப்புப் பணிப்பகங்களால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளின் முன்னேற்றங்களை கண்காணித்தல்.
- மத்திய விடயப் பதிவிலுள்ள முடிவுற்ற விடயங்களை இற்றைப்படுத்தல்
- திணைக்களத்திலுள்ள முடிவுற்ற சகல விடயங்கள் தொடர்பிலும் வெகுமதிகளை பகிர்ந்தளித்தல்.

**1.** பொதுவான செயலாற்றுகைகள்

அ) இப்பணிப்பகத்திலான விசாரணைகள்

| | |
|---|---|
| க். கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | - 90 |
| க. பூரணப்படுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | - 67 |
| I. அறவிடப்பட்ட அபராதம் (ரூபா) | - 325,000.00 |
| II. மேலதிக பறிமுதல் (ரூபா) | - 394,099,008.00 |
| III. அறவிடப்பட்ட மேலதிகப் பதிவு | - இருக்கவில்லை |
| IV. விற்பனை வரும்படிகள் (ரூபா) | - 21,216,796.00 |

ஆ) பிற பிரிவுகளாலான விசாரணைகள்


க். இக்காலப்பகுதியில் விசாரணை தொடர்பில் பிற பிரிவுகளில் இருந்து இப்பணிப்பகத்திற்கு அனுப்பப்பட்ட கோவைகளது எண்ணிக்கை


இ) மத்திய விடயப் பதிவு தொடர்பிலான பேணுகை


| | | |
|---|---|---|
| க் | மத்திய விடயப் பதிவில் பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - 7,158 |
| க. | மத்திய விடயப் பதிவில் இற்றைப்படுத்தப்பட்ட கோவைகளது எண்ணிக்கை | - 5,427 |
| கா. | சிபாரிசு செய்யப்பட்ட வெகுமதிப் பட்டியல்களது எண்ணிக்கை | - 204 |


செயலாற்றுகை பற்றிய ஒப்பீடு

| ஆண்டு | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|
| இப்பணிப்பக அலுவலர்களால் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 23 | 48 | 62 | 90 |
| இப்பணிப்பக அலுவலர்களால் முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 5 | 21 | 64 | 67 |
| "NFA" இல் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள் | 2 | 8 | 3 | 24 |
| அறவிடப்பட்ட அபராதம் (ரூபா) | 9,315,692 | 66,388,000 | 32,880,000 | 325,000 |
| மேலதிக பறிமுதல்களது தொகை (ரூபா) | | 8,364,450 | 221,361,350 | 394,099,008 |
| விற்பனை வருமபடிகள் (ரூபா) | | 6,130,000 | 289,728,263 | 21,216,796 |
| மொத்தம் (ரூபா) | **9,315,692** | **80,882,450** | **543,969,613** | **415,640,804** |
| மத்திய விடயப் பதிவில் பதிவுசெய்யப்பட்ட விடயங்களது மொத்த எண்ணிக்கை | 6096 | 4210 | 5828 | 7158 |
| மத்திய விடயப் பதிவில் இற்றைப்படுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 4490 | 2536 | 4434 | 5427 |
| பரிந்துரைக்கப்பட்ட அன்பளிப்பு பட்டியல்களது எண்ணிக்கை | 168 | 154 | | 179 |






2013 இல் பணிப்பகத்தின் அலுவலா்களினால் ஆற்றப்பட்ட குறிப்பிடத்தக்க செயலாற்றுகை

அ. குறிப்பிடத்தக்க விடயங்கள்

- க். CIB/INV/29/2004 – பத்து வருடங்களுக்கு செலுத்தப்படாததும் 2005ல் விதிக்கப்பட்டதுமான ரூபா 208 மில்லியன்களை அறவிடுவதற்கு இப்பணிப்பக அலுவலர்கள் ஏதுவாக இருந்தனர்.
- க. CIB/INV/027/2013/CCR/1724 – சட்ட ரீதியற்ற முறையில் இறக்குமதி செய்யப்பட்ட 12 வாகனங்கள் தொடர்பான (D/INV/087/2013) விசாரணையொன்றினை இப்பணிப்பக அலுவலர்கள் விசாரணைக்குட்படுத்தியதோடு குறைவான பறிமுதலாக ரூபா 30,000,000.00 அறவிடப்பட்டது

CIB/INV/14/2013 – சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட விடயமான சட்டரீதியற்ற முறையிலான எதனோல் இறக்குமதியினை இப்பணிப்க அலுவலர்கள் விசாரணை மேற்கொண்டதோடு ரூபா 33 மில்லியன் விதித்து 65,100 லீற்றர் எதனோலினை பறிமுதல் செய்யப்பட்டன.

# சட்ட அலுவல்கள் பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்பகமானது பணிப்பாளர் ஒருவரினது தலைமையின் கீழ் ஒரு பிரதிப் பணிப்பாளர், இரண்டு அத்தியட்சகர்கள், ஒரு பிரதி அத்தியட்சகர் மற்றும் இரண்டு உதவி அத்திட்சகர்கள் ஆகியோரின் உதவியுடன் இயங்குகின்றன. நீதிமன்றில் வழக்குகளை தொடுத்தல் தொடர்பில் அதனை நிர்வகித்தலும் கண்காணித்தலும் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கூட்டிணைப்பினை பேணுதல் என்பன இப்பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரதான தொழிற்பாடுள்

1. ஏனைய பிரிவுகளுக்கு சட்ட ரீதியான ஆலோசனைகளை வழங்குதல்.
2. திணைக்களம் சார்பில் சட்டத்துறை தலைமை அதிபதியின் ஆலோசனையினை நாடுதல்.
3. சுங்கச் சட்டம் தொடர்பிலான தொடர்ச்சியான மீளாய்வு.
4. பிற சுங்க நிர்வாகங்களுடனான உடன்படிக்கை தொடர்பிலான சகல விடயங்களுக்கும் சமூகமளித்தல்.

பதிவு செய்யப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை

| | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாவட்ட நீதிமன்ற வழக்குகள் | - | - | - | - | - | - | - | 01 | 03 | |
| நீதவான் நீதிமன்ற வழக்குகள் | | | | | | | | | | 7 |
| மேல் நீதிமன்ற வழக்குகள் | - | 01 | - | - | - | - | - | 01 | 06 | 5 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற மனுக்கள் | 51 | 89 | 107 | 36 | 43 | 18 | 18 | 20 | 51 | 9 |
| மேல் நீதிமன்ற மனுக்கள் | 08 | 11 | 06 | 16 | 14 | 10 | 15 | 08 | 09 | 16 |
| உயர் நீதிமன்ற மனுக்கள் | - | - | 02 | 02 | - | - | - | - | - | |
| மொத்தம் | 59 | 101 | 115 | 54 | 57 | 28 | 33 | 30 | 69 | 37 |

முடிவுறுத்தப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை

| | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாவட்ட நீதிமன்ற வழக்குகள் | - | - | - | - | - | - | - | - | - | |
| நீதவான் நீதிமன்ற வழக்குகள் | | | | | | | | | | |
| மேல் நீதிமன்ற வழக்குகள் | - | 01 | - | - | - | - | - | 01 | - | 1 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற மனுக்கள் | 03 | 07 | 06 | 102 | 18 | 03 | 28 | 21 | 6 | 4 |
| மேல் நீதிமன்ற மனுக்கள் | 04 | 04 | - | 07 | 02 | 02 | 11 | 10 | 3 | 5 |
| உயர் நீதிமன்ற மனுக்கள் | - | - | - | - | - | - | - | - | - | |
| மொத்தம் | 07 | 11 | 06 | 109 | 20 | 05 | 39 | 31 | 9 | 10 |

# மத்திய புலனாய்வுப் பணிப்பகம்

அறிமுகம்

மத்திய புலனாய்வுப் பணிப்பகமானது, அரசிறை இழப்புக்களைத் தவிர்த்தும் ரீசமூக ரீதியான பாதுகாப்பும் தொடர்பான கடப்பாடுகளைப் பேணி, நேர்மையான வர்த்தகர்களுக்கு வசதியளித்தல் தொடர்பிலான திணைக்களத்தின் இலக்கினை அடையும் நோக்கில், சம்பந்தப்பட்ட புலனாய்வுகளை வினைத்திறன்மிக்கதாகவும் உரிய நேரத்திலும் மற்றும் துல்லியமாகவும் தொழிற்பாட்டு பிரிவிற்கு மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும் வழங்குவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

இப்பணிப்பகத்தின் பொதுவான இலக்குகள் பின்வருமாறு :

- அத்தியவசிய புலனாய்வுகளை சமர்ப்பிப்பதன் மூலம் உயர் தரத்திலான தீர்மானம் மேற்கொள்கைக்கு உதவுதல்.
- சரக்கு மற்றும் பயணிகள் வெளியாக்கத்திலுள்ள புலனாய்வு மூலமான கட்டுப்பாட்டு முறைமையின் தொழிற்பாட்டை வலியுறுத்தல்.
- எல்லைக் குறுக்காக இடம்பெறுகின்ற சரக்கு போக்குவரத்துகள் தொடர்பான தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- புலனாய்வுத் தகவல்களை உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் பகிர்ந்துகொள்வதற்கான தேசிய தொடர்புகொள்கை மையமாகவும் மற்றும் மத்திய நிலையமாகவும் செயற்பட்டு, அமுலாக்கல் தொடர்பிலான உதவிகளை வழங்கல்.

பிரதான தொழிற்பாடுகள்

1. தகவல்களை சேகரித்தல்
2. 24மணி நேர பொது மக்கள் தகவல் பெறல் கருமபீடத்தினை பேணலும் முகாமை செய்தலும்.
3. தரவுத் தளங்களைப் பராமரித்தல்
4. தகவல் பகுப்பாய்வு மற்றும் விருத்தி
5. தகவலினைப் பரப்புதல், உள்நாட்டில் பணிப்பகங்கள் ஊடாகவும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுடாகவும்.
6. சர்வதேச சுங்க தகவல் முறைமையுடனான கூட்டிணைப்பு.
7. ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய ஒற்றர் இணைப்பு அலுவலகத்தற்கான தேசிய தொடர்பு நிலையமாகவும் மற்றும் சர்வதேச அமுல்படுத்தல் ஒருங்கிணைப்புக்கான குவியல் நிலையமாகவும் செயற்படல்.
8. தேசிய பாதுகாப்புச் சர்ச்சைகள் தொடர்பில் ஒருங்கிணைப்பு மையமாக தொழிற்படல்.
9. கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் பாதுகாப்பு பூர்வாங்க கருத்திட்டத்தை செயற்படுத்தல்.
10. பாதுகாப்பு நோக்கங்களுக்காக, இலங்கைக் கடற்படையினால் தெரிவு செய்யப்படுகின்ற சரக்குகளை ஒருங்கிணைந்து சோதனையிடல்.
11. திணைக்கள இடர் முகாமைத்துவக் குழுவின் ஒரு அங்கத்தவராக பங்கேற்றல்.
12. சரக்குப் பட்டியல் மீளாய்வு செய்தல், தகவல் மற்றும் புலனாய்வு அடிப்படையில் உயர் இடர் சரக்குகளை இடை நிறுத்தல்.
13. சுங்க விசாரணைகளை மேற்கொள்ளுதலும் மற்றும் குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கலினை தொடுத்தலும்.
14. முன்னர் குற்றமிழைத்தவர்களது தரவு நிரல்களைப் பேணல்
15. சென் தரவு நிரல்களைப் பேணல்
16. பதிவு செய்வதற்கு முன்னர் பொருள் உரிமையாளர்களது மனுக்களை ஆழமாக ஆராய்தல்
17. சுங்க இல்ல முகவர் தரவு நிரல் பேணலுக்கான வெளியாக்கல் முகவர்களது தகவலினை சேகரித்தல் மற்றும் சுங்க இல்ல முகவர்களது விண்ணப்பங்களை ஆழமாக ஆராய்தல்.

செயலாற்றுகை - 2013

பெறப்பட்ட மற்றும் விநியோகிக்கப்பட்ட தகவல்கள் - முன்னைய வருடங்களுடனான ஒப்பீட்டாய்வு

| விபரம் | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| பொது தகவல் பெறப்படும் கருமபீடம் ஊடாக பெறப்பட்ட தகவல்களது எண்ணிக்கை | 60 | 60 | 45 |
| பிற மூலகங்களில் இருந்து (பெக்ஸ், கடிதங்கள், செய்திகள்) | 44 | 04 | 5 |
| மொத்தம் | 104 | 64 | 50 |
| பிற கிளைகளுடன் பரிமாறப்பட்ட தகவலினது எண்ணிக்கை | | | |
| நடவக்கை எடுப்பதற்காக பிற கிளைகளுக்கு பங்கிடப்பட்ட தகவல்களது எண்ணிக்கை | 27 | 26 | 23 |
| முகாமைத்துவத்துக்குக் கொடுக்கப்பட்ட உபாய தகவல் மதிப்பீடுகளது எண்ணிக்கை | - | - | - |

பகிர்ந்தளிக்கப்பட்ட தகவல் எச்சரிக்கைகளது எண்ணிக்கை

| | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| மத்திய புலனாய்வுக் கூறு எச்சரிக்கைகள் | 06 | 11 | 17 |
| பிராந்திய தகவல் ஒருங்கிணைப்பு அலுவலகம், உலக சுங்க அலுவலகம், சென் எச்சரிக்கைகள் | 01 | 01 | இல்லை |

பகிர்ந்நதளிக்கட்ட மாதாந்தம் பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களது எண்ணிக்கை

| | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| மத்திய புலனாய்வுக் கூறினது தகவல் பகுப்பாய்வு அறிக்கைகள் | இல்லை | இல்லை | இல்லை |
| பிராந்திய தகவல் ஒருங்கிணைப்பு அலுவலக மாதாந்த செய்தித் தாள் | 03 | இல்லை | இல்லை |
| முன்னர் குற்றமிழைத்தவர்களது விபரங்கள் தொடர்பாக பல்வேறு கிளைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டவைகளது எண்ணிக்கை | 1730 | 2091 | 397 |

மத்திய புலனாய்வுப் பணிப்பகத்தின் ஒத்துழைப்போடு இலங்கை கடற்படையினரால் தடுக்கப்பட்ட சரக்குகள்

| | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| நாட்டின் பாதுகாப்புக் கருதி இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தடுப்புகளின் எண்ணிக்கை (இந்த பரிசோதனையின் போது மத்திய புலனாய்வுப் பணிப்பகத்தின் ஒத்துழைப்பும் தேவைப்பட்டது) | 407 | 392 | 74 |
| கடற்படையினரின் தடுப்பின் மூலம் இனங்காணப்பட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கை. | இல்லை | இல்லை | இல்லை |

சுங்க இல்ல முகவர் மற்றும் பெறுமதி சேர் வரி தொடர்பிலான பதிவுகளின் எண்ணிக்கை (2012.04.26 இலிருந்து)

| | 2013 |
|---|---|
| சுங்க இல்ல முகவர்கள் உரிமம் புதுப்பித்தல்கள் | 3500 |
| இலங்கை துறைமுக அதிகார சபை சரக்கு மேடை உதவியாளர் உரிமங்கள் (ஏ அங்கீகாரம்) (கிட்டத்தட்ட) | 2000 |
| இறக்குமதியாளர்களின் பெறுமதி சேர் வரி பதிவு பற்றிய ஆவணங்களின் சோதனை | 1442 |

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விசாரணை மற்றும் புலனாய்வு முகவர்களுடனான தொடர்பு

| முகவர் | வேண்டுகோள்களது எண்ணிக்கை | | | பெறப்பட்ட பதில்களது எண்ணிக்கை | | | பெறப்படாத பதில்களது எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **2011** | **2012** | **2013** | **2011** | **2012** | **2013** | **2011** | **2012** | **2013** |
| றிலோ - சீனா | | | | | | | | | |
| டி.ஆர்.ஐ. - இந்தியா | 21 | 16 | 04 | 12 | 07 | | 09 | 09 | 04 |
| ஜப்பானிலுள்ள இலங்கை தூதராலயம் | 14 | 10 | 08 | 14 | 07 | 06 | | 03 | 02 |
| ஐக்கிய இராச்சியத்திலுள்ள இலங்கை தூதராலயம் | 03 | 02 | 04 | 02 | 01 | | 01 | 01 | 04 |
| எச்.எம். சுங்கம்- ஐக்கிய இராச்சியம் | 01 | | | | | | 01 | | |
| அவுஸ்திரேலியா | 01 | 03 | | 01 | | | | 03 | |
| சிங்கப்பூரிலுள்ள இலங்கை தூதராலயம் | 01 | 01 | 01 | 01 | | | | 01 | |
| ஐக்கிய அரபுக் குடியரசு | 01 | | | 01 | | | | | |
| ஜப்பான் சுங்கம் | | 01 | | | 01 | | | | |
| நியுசீலாந்து உள்ளக இணைப்பு அலுவலகம் | | | | | | | | | |
| பாகிஸ்தான் ஜப்பான் சுங்கம் | 03 | | | 03 | | | | | - |
| இந்தோனேசிய சுங்கம் | | | | | | | | | |
| மாலைதீவு சுங்கம் | 01 | 01 | | | 01 | | 01 | | |
| தாய்லாந்து சுங்கம் | 01 | 02 | | | 02 | | 01 | | |
| நேபாள சுங்கம் | | | | | | | | | |
| ஈரானிய சுங்கம் | | | | | | | | | |
| மலேசிய சுங்கம் | | | 01 | | | | | | 01 |
| வியட்நாம் சுங்கம் | 01 | | 01 | | | | 01 | | 01 |
| ICE ATTACHE (புதிடில்லியிலுள்ள ஐ.அமேரிக்க தூதுவராலயம்) | 01 | | | | | | 01 | | |
| தாய்லாந்து தூதுவராலயம் | | | 04 | | | | | | |
| ஜப்பான் தூதுவராலயம் | | | | | | | | | |

பொதுவான மேம்பாடுகள்

அ. கொள்கலன் கண்காணிப்பு பூர்வாங்க வேலைத்திட்டங்களது செயலாற்றுகை

| | |
|---|---|
| அ. நுட்பமாக ஆராயப்பட்ட மாற்றி ஏற்றல் கொள்கலன்களது எண்ணிக்கை | - 264 |
| ஆ. நுட்பமாக ஆராயப்பட்ட உள்நாட்டு கொள்கலன்களது எண்ணிக்கை | - இல்லை |
| இ. சரீர ரீதியாக பரிசோதிக்கப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை. | - இல்லை |
| ஈ. கண்டுபிடிக்கப்பட்ட, விதிமுறைக்கு முரணான கொள்கலன்களது எண்ணிக்கை | - இல்லை |

ஆ. அமுல்படுத்தல் செயலாற்றுகை

| | |
|---|---|
| அ. ஆரம்பிக்கப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | - 61 |
| ஆ. முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | - 23 |
| இ. அறவிடப்பட்ட அபராத தொகை (ரூபா) | - 14,321,764 |
| ஈ. விற்பனை வரும்படிகளிலிருந்து அறவிடப்பட்ட தொகை(ரூபா) | - 27,234,281 |
| உ. மேலதிக அறவீடாக அறவிடப்பட்ட தொகை(ரூபா) | - 5,861,663 |
| ஊ. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது தொகை(ரூபா) | - 320,000 |

விசேட செயலாற்றுகை

அ. புலனாய்வுகளை விருத்திசெய்யும் வகையில் இப் பணிப்பகத்தின் அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க விடயங்கள் :

I. நெத்தலிக் கருவாடுகளுடன் ரூபா. 32,573,261 பெறுமதிமிக்க வாசனைத் திரவியங்கள், சப்பாத்துகள், சிகரெட்டுகள், தீ கொளுத்துகை(லைட்டர்), உணவுப் பொருட்கள், பாலூட்டும் போத்தல்கள் மற்றும் காகிதாதிகள் என்பன மறைத்து வைக்கப்பட்டு அவை நெத்தலிக் "நெத்தலிக் கருவாடு" என பிரகடனம் செய்து வெளியாக்க முயற்சிக்கப்பட்ட வேளை இது தொடர்பில் இறக்குமதியாளர் அபராதத்திற்குள்ளாக்கபட்டதுடன் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

II. புகழ்பெற்ற இறக்குமதியாளர் ஒருவரால் இறக்குமதி செய்த ஆடையுடனான பால்மாக்களில் மேற்கொள்ளப்பட்டதொரு கணக்காய்வின் பின்னர் பிழையான வகைப்படுத்தலின் காரணமாக விதிக்கத்தகு தீர்வைகளில் ஏமாற்றம் செய்யப்பட்டமை வெளிக்கொணரப்பட்டதுடன் ஏமாற்றப்பட்டதன் தொகை ரூபா. 30 மில்லியன்களாக மதிப்பிடப்படன.

ஏனைய குறிப்புகள்

கொள்திறன் விருத்தி செயற்பாடுகளுடன் தொடர்புபட்டதாக, இப்பணிப்பகத்திலிலுள்ள பணிப்பாளர் மற்றும் சுங்க அத்தியட்சகர் அவர்கள் வியட்நாமில் இடம்பெற்ற வருடாந்த றிலோ தேசிய தொடர்பு மையம் தொடர்பான கலந்துரையாடல்களில் பங்கேற்றதுடன் இப்பணிப்பகத்திலுள்ள பிரதி சுங்கப்பணிப்பாளர் அவர்கள் கொரியாவில் இடம்பெற்ற எல்லைக் கடப்புக் குற்றங்கள் தொடர்பிலான பயணத்துக்கான றிலோ திட்டம் மீதான பிராந்திய கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

எனினும், தொடர்புபட்ட புலனாய்வில் உள்ள அலுவலர்களது திறன் மட்டத்தினை விருத்திசெய்யும் வகையில் புலனாய்வுப் பகுப்பாய்வு தொடர்பான அதிக பயிற்சி வாய்ப்பு வசதிகள் தேவையாகவுள்ளன.

கடற்படையினது இறக்குமதிப் பொருட்களை பரிசோதனை செய்யும் செயற்பாடானது 2013 ஜுலை மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. எனினும் பொருள் வெளியாக்கல் தொடர்பில் பொருள் சொந்தக்காரர்களுக்கு தாமதங்கள் மற்றும் மேலதிக செலவினங்களை உண்டுபண்ணும் வகையிலான மீள் பரிசோதனை குறைக்கப்பட்டுமுள்ளன.

# அரசிறை மற்றும் சேவைகள் கொத்தணி

# பிரகடனங்கள் பணிப்பகம்

அறிமுகம்

திணைக்களத்தின் புதிய சீர்திருத்தக் கட்டமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட அரசிறை மற்றும் சேவைகள் (கொழும்பு) கொத்திணியின் கீழான இப்பிரகடனப் பணிப்பகமானது, டீ கிளை, நீள அறை, மோட்டார் வாகனப் பிரிவு மற்றும் கைத்தொழில், கைத்தொழில் சேவைகள் ஆவண செய்முறைப்படுத்தல் பிரிவு மற்றும் ஆவணம் கையாளும் நிலையம் ஆகிய பிரிவுகளைக் கொண்டுள்ளது.

பிரதான தொழிற்பாடுகள்

1. சுங்க ஒழுங்குவிதிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டளைச்சட்டத்தின் கீழ் சுங்கப் பிரகடனங்களைச் செய்முறைப்படுத்தல்.
2. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிச் சரக்குத் தொடர்பில் பெறுமதி மதிப்பிடலும் உரிய அரசிறையைச் சேகரித்தலும்.
3. வியாபார, வர்த்தக மற்றும் பொதுமக்களது நலன் கருதி அரச கொள்கையின் கீழ் தீர்வைத் தள்ளுபடி/ விலக்களிப்புகளை வழங்கல் மற்றும் தீர்வையினையும் வரியினையும் தற்காலிகமாக இடைநிறுத்தல்.
4. இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளோடு தொடர்புபட்ட சகல சட்ட ரீதியான தேவைப்பாடுகளுடனும் தன்னிச்சையான இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்தல்.
5. விரைவான வெளியாக்கல் நடைமுறையின் கீழ் சட்ட ரீதியான இறக்குமதியாளர்கள்/ இறக்குமதியாளர்களின் வெளியாக்கத்தை எளிதாக்கல்.

இப்பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள்கள்

இப்பணிப்பகத்தின் பிரதான குறிக்கோளானது இறக்குமதி செய்கின்ற பொருட்கள் மற்றும் பிணைப்படுத்தப்படவிருக்கும் பொருட்கள் தொடர்பில் பிரகடனங்களைச் செய்முறைப்படுத்தல் வசதிகளை வழங்குதலாகும். இக்குறிக்கோளினை நிறைவேற்றும் வகையில் பின்வருவனவற்றுக்கான ஏற்பாடுகளை இப்பணிப்பகம் விசேடமாக மேற்கொண்டுள்ளது,

i. நேரடி வர்த்தக உள்ளீடு ஊடாக சுங்கப் பிரகடனங்களைப் பெறுதல்.
ii. இற்றைப்படுத்தப்பட்ட சுங்கப் பிரகடனம் தொடர்பிலான பொருட்பட்டியல் மற்றும் தீர்வைகள் செலுத்துகை மற்றும் ஏனைய அறவீடுகளை உறுதிப்படுத்தல்.
iii. இலங்கை துறைமுக அதிகாரசபைச் சாலைகளிலிருந்தான முழு கொள்கலன்களை அகற்றுதல் தொடர்பில் உள்ளக அனுமதிகளை விநியோகித்தல்.
iv. சுங்க அத்தியட்சகர் பெறுமதி மதிப்பீட்டாளர்கள் ஆகியோரினால் சுங்கப் பிரகடனத்தினைச் செய்முறைப்படுத்தல்.
v. கொள்கலன் சாலையிலுள்ள முழுக் கொள்கலன் பொருட்களையும் மற்றும் குத இல்லங்களிலுள்ள சில்லறைப் பொருட்களைக் கொண்ட கொள்கலன்களை வெளியாக்கல்.
vi. தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதியாளர்களுக்கு விரைவாக வெளியாகக்கூடிய வசதிகளை வழங்குதல்.

தன்னியக்கச் செயலாக்கமானது, தாமதமின்றி சுங்கப்பிரகடனங்களை செயலாக்கம் செய்யும் வகையில் இறக்குமதியாளர்களுக்கு வசதியளிக்கும் நோக்கில் "அஸிகுடா வேல்ட்" ஊடாக தற்போது முழுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. சுங்கப் பிரகடனம் தொடர்பான அனைத்து விபரங்களும் தற்போது "அஸிகுடா" முறைமை மூலம் நீள அறையில் (2ஆம் மாடி) பெறப்படுகின்றன. இது நேரடி வர்த்த இடைப்பரிமாற்ற வசதிகளைப் பயன்படுத்தி தமது சுங்கப்பிரகடனத்தை தமது அலுவல்களிலிருந்து நேரடியாக இடுவதற்கு உதவுகிறது. பொருள் வகைப்படுத்தல் விடயங்கள் மாத்திரம் சுங்க அத்தியட்சகர்/ பெறுமதி மதிப்பீட்டாளர்களைக் கொண்ட சிறந்த பணியாட்தொகுதியினர் மூலம் கைமுறையினால் மேற்கொள்கொள்ளப்படுகின்றன.

இப்பணிப்பகத்தின் ஏனைய குறிக்கோள்கள்

i. இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் வெளியாக்குதலுக்கு வசதியளித்தல்.
ii. பிணைப்படுத்தப்படவிருக்கும் பொருட்களுக்கு வசதியளித்தல்.
iii. பொருட்களை உரியவாறு வகைப்படுத்துவதனூடாக அரசிறை ஒழுக்குகளை/ வெளிநாட்டு நாணய மாற்று இழப்புக்களைக் குறைத்தல்.
iv. சுங்கக் கட்டளைச்சட்டம் மற்றும் தொடர்புபட்ட பிற சட்டங்களுக்கிணங்க அமுல்படுத்தல் செயற்பாடுகளை ரீடீ கிளையூடாக மேற்கொள்ளல்.

v. இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் அரசுக்குரிய அரசிறையை மதிப்பிட்டு அவற்றைச் சேகரித்தல்.

vi. நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்கிணங்க, தீர்வைத் தள்ளுபடி தொடர்பிலான கருத்திட்டப் பொருள் வெளியாக்கலுக்கு வசதியளித்தல்.

vii. சலுகை அங்கீகாரமுடையோர்/ சட்ட ரீதியான இறக்குமதியாளர்களது பொருள்/ வாகனங்களை விரைவாக வெளியாக்குவதற்கு வசதியளித்தல்.

viii. தற்காலிக சுங்கப் பிரகடனங்களுக்கு எதிரான பொருட்களை வெளியாக்கல் தொடர்பில் பல்வேறு அரச திணைக்களங்கள்/ பிற அமைப்புகள்/ பொதுமக்கள் ஆகியோருக்கு வசதியளித்தல். அரச கொள்கைக்கிணங்க தீர்வை மற்றும் வரி தொடர்பான விலக்களிப்பு மற்றும் நிறுத்தி வைத்தல்/ தீர்வை தள்ளுபடி ஆகியன வழங்கப்படுகின்றன.

ix. மட்டுப்படுத்தப்பட்டவை மற்றும் தடைசெய்யப்பட்டவை தொடர்பிலான செயலாக்கத்தில் தாக்கம் செலுத்துதல்.

நீள அறை அலுவலர்கள், அரசுக்கான உரிய அரசிறையினைச் சேகரிக்கும் அதேவேளை, தாமதமின்றி விரைவாக சுங்கப் பிரகடனங்களைச் செயன்முறைப்படுத்தவும் மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் வெளியாக்கத்தையும் உறுதிப்படுத்துகின்றனர். இவ் அலுவலர்கள், பொருட்களை வெளியாக்குவதற்குத் தேவையான இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர், உணவு மற்றும் ஔடதங்கள் அதிகாரசபை, அழகு சாதனங்கள் மற்றும் மருந்துகள் அதிகாரசபை, இலங்கை தர நிர்ணயம், அணுசக்தி அதிகாரசபை, தொலைத்தொடர்பாடல்கள் ஒழுங்குவிதி ஆணைக்குழு போன்ற உள்நாட்டு அதிகாரசபைகளிடமிருந்தான உத்தரவாதப் பத்திரங்கள் மற்றும்/ அல்லது விசேட அங்கீகாரம் தேவையான பொருட்கள் தொடர்பில் கண்காணிப்பாகவும் உள்ள அதேவேளை, இறக்குமதியாளர்களால் நிறைவேற்றப்படவேண்டிய பின்வருகின்ற விடயங்கள் தொடர்பில் விசேட கவனமும் செலுத்துகின்றனர்,

- அனுப்பப்பட்ட பொருட்களின் வெளியாக்கல் கோரிக்கைக்கான அதனைக் கொண்டுவரும் கப்பலில் இருந்தான அங்கீகாரம்
- முறைமையில் பாவிக்கப்பட்ட சரியான குறியீட்டு இலக்கங்களைப்ப பயன்படுத்தி அனுப்பு பொருட்கள் பற்றிய முழு விபரம்
- இயைபு முறைப் பெயரேட்டின் அடிப்படையில் அமையப்பெற்ற சுங்க இறக்குமதிகள் இறுப்புப் பட்டியலில் உள்ளவாறு சரியாக பொருட்களை வகைப்படுத்தல்
- அனுப்பு பொருட்களின் உண்மையான பரிமாற்றுப் பெறுமதியை பிரகடனப்படுத்தல்.
- விதிக்கத்தகு நாணய வகையினை (நாணய மாற்று விகிதம்) பயன்படுத்தி பெறுமதிகளை பிரகடனப்படுத்தல்.
- அனுப்பு பொருட்களுக்கான பெறுமதியை (வெளிநாட்டு நாணயமாற்று) ஏற்றுக்கொள்ளப்பட்ட/ அனுமதிக்கப்பட்ட வங்கியூடாக மேற்கொள்ளல்.
- ஏற்புடையவாறான, தேவையான அதிகாரமளிக்கப்பட்ட ஆவணங்கள், அனுமதிப் பத்திரங்கள், உத்தரவாதப்பத்திரங்கள், மற்றும் சான்றிதழ்கள் போன்றவற்றினது இணைத்தல்

மேற்கூறப்பட்ட விடயங்கள் யாவும் ஒழுங்குமுறையில் இருப்பின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பொருள் வெளியாக்கலுக்கான சுங்கப்பிரகடனங்களை செய்முறைப்படுத்தக்கூடும்.

இப்பணிப்பகமானது 04 பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது.

அ) 'டி' கிளை
ஆ) நீள அறை
இ) மோட்டார் வாகனப் பிரிவு
ஈ) கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் தொடர்பான ஆவண செய்முறைப்படுத்தல் பிரிவு
உ) ஆவணம் கையாளும் நிலையம்

"டி" கிளை

டி - கிளையானது இப்பணிப்பகத்தின் செயலகமாகக் கருதப்பட முடியும். ஆரம்பத்தில் சுங்க கட்டுப்பாட்டாளர் நாயகம் 200 ஆண்டுகளுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட வேளையில் இவரின் கீழ் விடயம் ஏ, விடயம் பீ மற்றும் இன்னும் அறியப்பட்ட நான்கு விடயங்களைக் கையாளுவதற்காக நான்கு இலிகிதர்கள் பணியாற்றியிருந்தனர். காலப்போக்கில் விடயம் ஏ பிரிவானது முன்னர் நிருவாகக் கிளையெனப்பட்ட தற்போதைய மனித வள முகாமைத்துவப் பணிப்பகமாக விருத்தியடைந்துள்ளது. விடயம் சீ இலிகிதர்கள் துறைமுக அறவீடுகளைக் கையாண்டு வந்ததோடு, இதுவே பின்னர் இலங்கைத் துறைமுக அதிகாரசபையாக மாறியது. தற்போது இது தனியொரு அமைப்பாகத் திகழ்கிறது. பழைய டி கிளையானது திறைசேரிக்கும் சுங்கத்திற்கும் வரலாற்று ரீதியான ஒருங்கிணைப்பினைப் பேணியிருந்ததோடு, தீர்வைத் தள்ளுபடி மற்றும் விலக்களிப்புகளை வழங்குதல், பொருள் பட்டியல்களைப் பெறுதல் போன்ற அத்தகைய செயற்பாடுகளை இன்னும் அதன் அசல் நாமத்தில் மேற்கொண்டு வருகிறது.

'டி' கிளையானது இறக்குமதியாளர்களுக்கு/பொதுமக்களுக்கு வசதிகளை வழங்கும் வகையில் பல்வேறு கூறுகளாக்கப்பட்டுள்ளன.

01. டி ஆர் எ பிரிவு
02. வங்கி உத்தரவாதக் பிரிவு
03. தீர்வை விலக்களிப்புக் பிரிவு
04. தொகையான சரக்கினை கண்காணிக்கும் பிரிவு
05. காணே பிரிவு
06. கப்பற் சரக்குப்பட்டியல் பிரிவு
07. விசாரணைக் பிரிவு
08. மோட்டார் வாகன சலுகை அனுமதியை ஆய்வு செய்து நீக்கம் செய்யும் பிரிவு/சுங்க பிரதிப் பணிப்பாளரின்(டி) தலைமையில்

டி கிளையினால் கையாளப்படுகின்ற ஒருசில முக்கியமானதும் பிரசித்தி பெற்றதுமான தொழிற்பாடுகள்

1. நிதி அமைச்சினால் வழங்கப்படும் தீர்வை விலக்களிப்புகள் தொடர்பான விடயங்களை பதிவு செய்தலும் தீர்வையற்றவை எனும் அடிப்படையில் அத்தகைய பொருட்களை வெளியாக்க வசதியளித்தலும்.
2. பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அரசிறைக் காப்புக் கட்டளைக்கிணங்க தீர்வை விலக்களிப்புகளையும் சலுகைகளையும் வழங்குதல்.
3. வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சினால் வினியோகிக்கப்படும் வெளியாக்கல் சான்றிதழின் அடிப்படையில் ராஜதந்திரி உத்தியோகத்தர்களது தனிப்பட்ட பொதி மற்றும் அலவலக பொருட்கள் என்பவற்றினை வெளியாக்க அனுமதித்தல்.
4. பல்வேறு வர்தத்க உடன்படிக்கையின் கீழ் இறக்கமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் தீர்வை இலவசம் அல்லது முன்னுரிமை விகிதங்கள் எனும் அடிப்படையில் வழங்குதல்.
5. நிதி, திட்டமிடல் அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கிணங்க தாமதக் கொடுப்பனவின் கீழ் அரச நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பொருட்களை வெளியாக்க வசதியளித்தல்.
6. பல்வேறு காரணங்களின் விளைவாக உடனடியாக பூர்த்தி செய்ய முடியாதிருக்கும் சுங்கப் பிரகடனங்களை தற்காலிக அடிப்படையில் அல்லது நிகழ்வொன்றுக்காக இறக்குமதி செய்யப்பட்டு அந்த நிகழ்வு முடிவுற்றதும் அத்தகைய பொருட்களை மீள ஏற்றுமதி செய்ய வசதியளித்தல்.
7. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தீர்மானிக்கப்பட்டவாறாக தேவைப்படுகின்ற கருத்திட்ட பொருட்களை மீள் எற்றுமதி தொடர்பில் பதிவினை மேற்கொள்ளுதலும் கண்காணித்தலும்.
8. கப்பற் சரக்குப் பட்டியல்களை பெறுதல் மற்றும் கப்பல் முகவர்களால் சமர்ப்பிக்கப்பட்டவாறாக அவை தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
9. தற்காலிக சுங்கப்பிரகடனங்கள் விடயத்தில் வங்கி உத்தரவாதங்கள்/கூட்டுறவு உத்தரவாதங்களை பாதுகாத்தலும் சுங்கப்பணிப்பாளரினால் (பிரகடனங்கள்) தீர்மானிக்கப்பட்டவாறான பிற விடயங்களை பாதுகாத்தலும்.
10. கண்காணிப்பு நோக்கங்களுக்காக சி.பி.டி கானே அல்லது எ.ரி.எ கானே திட்டத்தின் கீழ் தற்காலிகமாக இறக்கமதி செய்யப்படும் வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை பதிவு செய்தல்.
11. குவியலாக கொண்டுவரப்படும் பொருட்களை கண்காணித்தல் மற்றும் மேலதிக அறவீடுகளை அறவிடவேண்டின் அதனை அறவிடல்.
12. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட தீர்வை விலக்களிப்புக்கு இணங்க வழங்கப்பட்ட தீர்வை விலக்களிப்பு தொடர்பாக அறிக்கைகள் தயாரித்தல்.
13. இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் /சுங்க ஒழுங்கு விதிகள் தொடர்பிலான மீறுகைகளை கண்டுபிடித்தல் மற்றும் எதனோல் மற்றும் மோட்டார் வாகனத்தினது வெட்டப்பட்ட பாகங்களது கண்டுபிடிப்பு போன்றவற்றிற்கு சுங்கக் கட்டளைச்சட்டத்தின் எற்பாட்டிற்கு அமைய நடவடிக்கை எடுத்தல்.
14. அரச சார்பான மற்றும் அரச சார்பற்ற முகவர்களுடன் கூட்டிணைப்பினை ஏற்படுத்தல்.

நீள அறை

வரலாற்று ரீதியில், உண்மையாகவே சுங்க நிருவாகத்தின் ஒரு நீள அறையாக இது காணப்பட்டதோடு, இந்நவீன காலத்திலும் கூட இது ஒரு நீள அறையாகவே காணப்படுகிறது. இது ஆசியாவிலுள்ள அனேக பிரித்தானிய காலணித்துவ நாடுகளிலும் மற்றும் டென்மார்க், நெதர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள மிகவும் பழைமை வாய்ந்த சுங்க அமைப்புகளிலும் இது பொதுவான சிறப்பம்சமொன்றாகவுள்ளது. சுங்கமானது பிரதானமாக அரசிறை தொடர்பிலான அரச நிறுவனமாகவிருப்பதனால் நீள அறையின் முக்கித்துவம் பிரதானமானதாகும். இதன் ஒட்டுமொத்த இலக்குகள் சமூகப் பாதுகாப்புக் கடப்பாடுகளைப் பேணுவதற்காக இருந்த போதிலும், உரிய அரசிறையினைச் சேகரிப்பதற்கான முன்னுரிமையானது குறைவடைந்ததில்லை.

சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவானது சுங்கத் தீர்வையினை விதிப்பதற்கு சுங்கம் அதிகாரம் கொண்டுள்ளது எனவும் 47 ஆம் பிரிவானது பெறப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட பொருட்களது உண்மையானது சரியானதுமானதொரு பிரகடனம் செய்வதற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களது உரிமையாளர்கள் வேண்டப்படுகின்றனர். மற்றும் அத்தகைய பொருட்கள் தொடர்பில் செலுத்தத்தகு (தீர்வை போன்றன) சகல தீர்வைகளும் செலுத்தவும் வேண்டப்படுகிறது.

மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த பிற சகல கப்பல் சரக்குகள் தொடர்பிலான இறக்குமதியாளர்களால் சுங்கப் பிரகடனங்கள் (கஸ்டெக் எனவழைக்கப்படுகிறது) சமர்ப்பிக்கப்படும் இடம் சுங்க நீள அறையாகும். மோட்டார்

வாகனங்கள் தொடர்பிலான சுங்கப் பிரகடனங்களது செய்முறையானது முழுமையாக மோட்டார் வாகனத்தினப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

சுங்கமானது சுங்கத் தீர்வைகளை மட்டுமல்லாது இதர பல்வேறு வரிகளையும் சேகரிக்கின்றன. அதாவது ;

பெறுமதி சேர் வரி
துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு
தேசக் கட்டுமான வரி
விசேட பண்ட அறவீடு
உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி
செஸ் வரி

பிற அரச நிறுவனங்கள் சார்பில் அறவிடப்படும் செஸ் வரி 05 கூறுகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. அவை,

ஏ பிரிவு - 01 ï 44 ஆம் இயைபுமுறை குறியீடு
பீ பிரிவு - 45 ï 73 ஆம் இயைபுமுறை குறியீடு
சீ பிரிவு - 74 ï 84 ஆம் இயைபுமுறை குறியீடு
டீ பிரிவு - 85 ï 97 ஆம் இயைபுமுறை குறியீடு 9மோட்டார் வாகனங்களுக்கானவை தவிர)
ஈ பிரிவு - உணவுப் பொருட்கள், மருந்து, தீர்வை விலக்களிப்புப் பொருட்கள், குவியலிலான பொருட்கள் போன்றவை,

சுங்கப் பிரகடனங்களைச் சமர்ப்பித்தல்

சுங்கக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 47 இன் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக சுங்கப்பிரகடனங்களது 5 பிரதிகளை (உத்தரவாதப் பிரதி, விநியோகப் பிரதி, புள்ளிவிபரவியல் பிரதி, நணயமாற்றுப் பிரதி, குழுக்கள் பிரதி) இறக்குமதியாளர்கள் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், சுங்கப் பிரகடனம் பின்வரும் துணை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1. ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டு

2. விநியோகக் கட்டளை

3. பொருள் விலைப்பட்டியல் (என்.எப்.ஈ. அடிப்படையில் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்த்து வங்கி மூலம் கையெழுத்திட்டு முத்திரிரை குறிக்கப்பட்டிருத்தல்)

4. இயைபு முறைக் குறியீட்டு வகைப்படுத்தலுக்குத் தேவைப்படும் ஏதேனும் தொழில்நுட்பத் தகவல்

5. பொருளுக்கான உற்பத்தி செய்யப்பட்ட நாட்டை நிருபிப்பதற்கான ஆவணங்கள்

6. மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் இறக்குமதி செய்யப்படவிருப்பின், அது தொடர்பில் தேவையான இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரம், இலங்கை தர நிர்ணயச் சான்றிதழ் மற்றும் CDDA போன்ற அனுமதிப் பத்திரம்/ உத்தரவுப் பத்திரம்.

7. இரண்டு பிரதிகளில் பூரணமாக நிரப்பப்பட்ட பெறுமதிப் பிரகடனம்

8. வரவுக் கடிதம், தந்தி மூலமான பரிமாற்றம் போன்ற கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது நிரூபனம்

9. பொதிகள் பற்றிய பட்டியல்

10. ஏதேனும் விசேட சான்றிதல் (ராஜதந்திரிகள், தீர்வைத் தள்ளுபடி போன்றன)

தனியானதொரு சுங்கப்பிரகடனம் மூலம் அதிகமான பொருட்கள் பதியப்பட்டு போதும் மற்றும் பல்வேறு இயைபு முறைக் குறியீடுகள் மூலம் வகைப்படுத்தப்பட்டுகின்ற சந்தர்ப்பத்திலும், சம்பந்தப்பட்ட பிரிவானது பொருள்களினடிப்படையில் அல்லது விதிக்கத்தகு அதிகூடிய தீர்வை மற்றும் பிற அறவீடுகள் குறித்து தீர்மானித்தல் வேண்டும்.
சுங்கக்கட்டளைச் சட்டத்தின் கீழான பிரிவு 12, 43 மற்றும் அட்டவணை ï ஆ ஆகியன, பொருட்களை இறக்குமதி செய்யும் வேளையில் ஏதேனும் பிற சட்டத்தின் கீழ் அமுலில் உள்ள சகல மட்டுப்படுத்தப்பட்டவைகள் மற்றும் தடைசெய்யப்பட்டவைகளை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு சுங்கத்தை வேண்டுகின்றன. இவ்விசாலமான ஏற்பாடுகள் காரணமாக, தற்போது அமுலிலுள்ள 33 இற்கும் மேலான

சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் கட்டளைச்சட்டங்களை சுங்கம் அமுல்படுத்த வேண்டியுள்ளது. இவற்றில், முதன்மையும் பிரதானமுமாகவிருப்பது 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டமாகும்.

மோட்டார் வாகனப் பிரிவு

இப்பிரிவின் பிரதான தொழிற்பாடானது இறக்குமதி செய்யப்பட்ட சகல மோட்டார் வாகனங்களுக்குமான சுங்கப் பிரகடனங்களைச் செய்முறைப்படுத்துதலாகும். சுங்கமானது ஏறக்குறைய 55 வீதம் அரச வரி வருமானங்களைச் சேகரிக்கின்றன. அவற்றில் 27 வீதமானவை மோட்டார் வாகனங்களது வரி மூலமே பெறப்படுகிறது. இந்த தனியொரு கூறானது கணிசமான பங்களிப்பினை வழங்குவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அசிக்குடா எனும் மென்பொருளானது தற்போது எக்சஸ் வலையமைப்பில் தொழிற்படுவதோடு, இதனைத் தனியார் வங்கிகளுடன் இணைத்து வாகனங்களை இறக்குமதி செய்தல் தொடர்பில் அனுப்பப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியை சுங்கத்தினால் பரீட்சிக்க முடிவதோடு, அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களைப் பதிவுசெய்வதற்கான வசதியினை வழங்கும் வகையில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் இணைப்பினையும் வழங்குகிறது. இதன் மூலம் சுங்கத்துடன் தொடர்பற்ற முறையிலான மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்வதைத் தடுப்பதற்கு ஏதுவாகவிருக்கும்.

சுங்கப் பிரகடனங்கள் செயன்முறைப்படுத்தப்படும் போது இப்பிரிவானது பின்வரும் விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தும்:

அ. அன்பளிப்பு வாகனங்கள் மற்றும் அதிகூடிய காலத்தைக் கொண்ட வாகனங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம்.
ஆ. அரச அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முதலீட்டுச்சபை அதிகாரிகள் ஆகியோருக்கான இறக்குமதி உத்தரவுப் பத்திர சலுகைகளும் நிபந்தனைகளும்.
இ. வுதிவற்றோர் நாணயக் கணக்கினை வைத்திருப்போர் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்படும் உத்தரவுப் பத்திரம்.
ஈ. டீ.பீ.எல். மற்றும் அரச சார்பற்ற அமைப்பு ஆகியவற்றுக்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் விநியோகிக்கப்படும் தீர்வை இலவசச் சான்றிதழ்கள்.
உ. கருத்திட்டங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் தொடர்பிலான தற்காலிக சுங்கப்பிரகடனம்

பின்வரும் விடயங்கள் சரியாக இருப்பதை உறுதிப்படுத்தல்,

அ. பதிவுச் சான்றிதழ்
பரிசோதனைச் சான்றிதழ்
விலைப்பட்டியல்
வாகன சாலைகளில் அவற்றைப் பரிசோதனை மேற்கொள்கின்ற மதிப்பீட்டாளரின் பரிசோதனை அறிக்கை
என்பவற்றுக்கிணங்க பொருட்கள் சரியாக விபரிக்கப்பட்டுள்ளமை

ஆ. வாகனங்களின் காலம் சரியாக மதிப்பிடப்பட்டுள்ளமை
இ. குறித்த வாகனம் தொடர்பில் முகவர்களது பெறுமதி சரியாக கொடுக்கப்பட்டுள்ளது.
ஈ. விலைப்பட்டியலுக்கு இணங்க நாணயங்கள் சரியாகப் பதிப்பட்டுள்ளமை.
உ. பிரகடனப்படுத்தப்பட்ட வாகனம் சரியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை.
ஊ. கப்பல் கட்டணங்கள் சரியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை,
எ. பிரகடனப்படுத்தப்பட்ட மேலதிக விடயங்களுடன் பரிசோதனைச் சான்றிதழ் இணங்குதல்.
ஏ. சலுகை தொடர்பிலான இறக்குமதிகளுக்கு உரிய உத்தரவாதப் பத்திரம் வழங்கப்படுதல், இதன் போது, வாகன வெளியாக்கலுக்கான அனுமதி சுங்கப்பிரதிப் பணிப்பாளரால் (மோட்டார் வாகனம்) வழங்கப்படல் வேண்டும்.

கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் ஆவணம் செய்முறைப்படுத்தல் கூறு

திணைக்களத்தின் மறுசீர் திருத்தம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒரு பகுதியாகவிருந்த பிணைகள் பிரிவானது, பிணைப்படுத்தல் மற்றும் பிணையிலிருந்து எடுத்தல் தொடர்பிலான சுங்கப் பிரகடனங்களைச் செய்முறைப்படுத்தலானது இப்பிரிவின் பிரதான தொழிற்பாடாகும். எனினும், இங்கே கைத்தொழில் மற்றும் சேவைகளுக்கான வேறானதொரு பணிப்பகம் உள்ளன. தொடர்புபட்ட சுங்கப் பிரகடனங்களது செய்முறையானது பிரகடனப்படுத்தல் பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆவணமாக்கல் நிலையம்

1. பொருட்களின் தொடர்புபட்ட ஆவணங்கள் சுங்க அத்தியட்சகரால் பரிசோதிக்கப்பட்டன.
2. விநியோகப் பிரதி மற்றும் DO ஆகியன சுங்க அதிகாரியினால் ஒப்பமிடப்பட்டன.
3. முழுக் கொள்கலன்களை விடுவிக்கும் இடமானது DO இற்கு எதிராக சோதிக்கப்பட்டு உதவிச் சுங்க அத்தியட்சகரால் அது கையொப்பமிடப்பட்டது.
4. இலங்கை துறைமுக அதிகாரசபை அனுமதி இலக்கம், லொறி இலக்கம் மற்றும் பொருள் சுமக்கும் பெட்டியின் இலக்கம் என்பன உதவிச் சுங்க அத்தியட்சகரினால் முறைமைக்கு பதியப்பட்டன.
5. உதவிச் சுங்க அத்தியட்சகரினால் வாயில் அனுமதி விநியோகிக்கப்பட்டது.
6. பிரதம சுங்கப் பரிசோதகரினால் தினமும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

2013 ஆம் ஆண்டுக்காலத்தின் போது பணிப்பகத்தின் செயலாற்றுகை

1) "அஸிகுடா வேல்ட்" எனப்படுகின்ற தன்னியக்க முறைமையூடாக வர்த்தகத்திற்கான வசதியளிப்பானது, சரக்கு வெளியாக்கத்தை விரைவுபடுத்தும் வகையில் இதுவரை இறக்குமதியால் வெற்றிகரமாகப் பெறப்பட்டுள்ளது.

2) "அஸிகுடா வேல்ட்" ஊடான தரவுப் பெறுகையானது தற்போது அலுவலகத்தின் வேலைப்பளுவைக் குறைத்துள்ள அதேவேளை, அதிகாரிகளது வினைத்திறன் மற்றும் பயனுறுதிமிக்க செயற்பாடுகளை விருத்திசெய்துள்ளது.

3) இப்பணிப்பகத்தின் கைமுறைப் பதிவேட்டுப் பேணுகைத் தொழிற்பாடானது புதிய ஏற்பாடுகளினால் நீக்கப்பட்டுள்ள அதேவேளை, தகவல்களை ஒன்றுசேர்த்தல் தொடர்பான நேரவரை மற்றும் அதன் தரம் ஆகியன தற்போது அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இலகுவாக்கப்பட்டுள்ளன.

4) 2013 இல் இப் பணிப்பகத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா. 328,807,310,194.25/- ஆகவுள்ள அதேவேளை, அரசின் மொத்த தீர்வையாக ரூபா. 56,643,360,709/- சேகரிக்கப்பட்டுள்ளது. இவ் அறவீடுகள் தவிர்ந்த ரூபா. 121,505,988 + ரூபா. 16,709,117 + ரூபா. 1,068,684 ஆகிய தொகைகள் முறையே அபராதம்/ பறிமுதல்/ மற்றும் மேலதிக அறவீடுகள் ஆகியன 2013 இல் "டீ" கிளையினால் சேகரிக்கப்பட்டுள்ளன.

5) தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதியாளர்களுக்கான ''விரைவான வெளியாக்க முறைமை'' ஐ அறிமுகம் செய்தல்.

6) ''இலத்திரனியல்'' பொருட்பட்டியல் முறைமையானது தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கப்பல் முகவர்கள் தமது பொருட்பட்டியலை, கப்பல் வாரியாக பத்திரங்களாகச் சமர்ப்பிக்காது, இணையம் ஊடாக சுங்கத்திற்கு சமர்ப்பிக்கின்றனர். இம்முறைமையானது தற்போது திணைக்களப் பயனாளர்களுக்கு வெற்றிகரமாக உதவி வருகிறது.

7) வாகனச் சலுகை அனுமதிப் பத்திரங்கள் ''டி'' கிளையின் சுங்கப் பிரதிப் பணிப்பாளரினால் இலத்திரனியல் முறை மூலம் நீக்கப்பட்டுவருகின்றன.

# கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் பணிப்பகம்

அறிமுகம்

சுங்கத்திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்கள் மீதான வரி விதித்தலாகும். குறித்த சில சூழ்நிலைகளின் கீழ் இவ்வரி விதிப்புச் செயன்முறையானது பிணையிடல் தொடர்பான செயற்பாடு மூலம் குறித்த காலப்பகுதிக்கு தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது. சுங்க நடைமுறையில் பிணையிடல் என்பது விசேடமாக குறித்த நோக்கத்திற்காக குத இல்லம் ஒன்றில் தீர்வை விதிக்கத்தகு இறக்குமதிப் பொருட்களைப் பாதுகாத்தல் எனப் பொருட்படுமென்பதோடு, அத்தகைய குத இல்லம் பிணையிடப்பட்ட குத இல்லம் எனப்படுகிறது.

ஆரம்ப காலத்தில், இப்பிணையிடல் திட்டமானது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை தீர்வையின்றி தமக்குத் தேவையேற்படும் வரை வர்த்தகர்கள் குயின்ஸ் குத இல்லத்தில் வைத்துப் பாதுகாக்க விரும்பும் வர்த்தகர்களுக்கான வசதியை வழங்குவதையே பிரதான இலக்காகக் கொண்டிருந்தது. சில வேளைகளில் வர்த்தகர்கள் நிதி ரீதியான காரணங்களுக்காக பொருட்களைப் பிணையிடுவதற்கு இணங்கினர். பின்னர் இத்திட்டமானது வரிகள் செலுத்தாது இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கும் அத்தகைய மூலப்பொருட்களைப் பயன்படுத்தி ஏற்றுமதி நோக்கிலான முடிவுப் பொருட்களைத் தயாரித்து ஏற்றுமதி செய்வதற்குமாக தயாரிப்பாளர்களை அனுமதிக்கும் வகையில் விரிவாக்கப்பட்டது. இதன் மூலம் வரிகளுக்கான கடப்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்படும் அதேவேளை, நாட்டுக்கான பெறுமதி மிக்க அன்னியச் செலாவணியை ஈட்டுவதற்கும் வழியேற்படுகிறது. இந்த அடிப்படை எண்ணக்கருவினால், பல்வேறு கைத்தொழில் துறைகளுக்கான அபிவிருத்திக்கு வித்திடும் வகையில் பல முன்னேற்றங்கள் காணப்பட்டன. தற்போது இது நாட்டின் கைத்தொழில் துறை மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கானதொரு உந்து சக்தியாகக் காணப்படுகிறது. இவ் அனைத்தையும் விட சர்வதேச வர்கத்தத மாநாட்டின் முன் நாட்டினைக் கொண்டுசென்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இப்பணிப்பகமானது, குறிப்பிட்ட நடைமுறைகளின் கீழ் வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைகளின் தேவைப்பாடுகளுக்கான வெளியாக்கத்தினை இலகுபடுத்தும் நோக்கில் பாதுகாப்பு/ பிணையிடலின் பேரில் தற்காலிகக் களஞ்சியப்படுத்தலுக்கான பொருள் இறக்குமதி தொடர்புடைய சுங்க தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது. மேலும் விசேடமாக, இலங்கை முதலீட்டுச் சபை போன்ற தொடர்புபட்ட வரிசை அதிகாரங்களுக்கிடையில் பொருத்தமான ஒருங்கிணைப்போடு இலங்கையில் இறக்குமதி தொடர்பான சம்பிரதாயப் போக்கின் வகைப்படுத்தலுக்கான பாதையினைக் கண்டுகொள்ளும் நோக்கில் உற்பத்தி செய்கை/ ஏற்றுமதிக் கைத்தொழில் துறையினை ஊக்குவிக்கிறது.

பிரதான தொழிற்பாடுகள்

1. சுங்கப் பிணைப்படுத்தப்பட்ட குத இல்லங்களை முகாமை செய்தல்.
2. ஏற்றுமதிச் செய்முறைக்கான தற்காலிக இறக்குமதி மற்றும் தீர்வைத் தள்ளுபடித் திட்டம் போன்ற ஏற்றுமதி இலகுபடுத்தல் திட்டங்களை முகாமை செய்தல்.
3. தீர்வையற்ற கடைகளுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளை முகாமைசெய்தல்.
4. முதலீட்டுச் சபை வியாபார நிறுவனங்களால் இறக்குமதி/ ஏற்றுமுதி செய்யப்படும் பொருட்களை வெளியாக்குவதில் முதலீட்டுச் சபையுடன் கூட்டிணைப்பினை பேணுதல்.
5. குத இல்லங்கள், களஞ்சியக் கட்டுப்பாடு, சரக்குக் கட்டுப்பாடு மற்றும் முதலீட்டுச் சபையின் இறக்குமதிகள்/ ஏற்றுமதிகள் ஆகியவற்றுக்கான தகல் தொழில்நுட்ப முறைகளைப் பேணுவதில் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பப் பணிப்பகத்துடன் தொடர்பினைப் பேணல்.
6. ிதீர்மானமற்ற பரிபாலனம்ம் தொடர்பிலான சுங்கப் பிரகடனச் செய்முறையில் பிரகடனங்கள் பணிப்பகத்துடன் தொடர்பினைப் பேணல்.

தொழிற்துறை மற்றும் சேவைகள் பணிப்பகத்திலுள்ள பிரதான கிளைகள்

I. ஆவணமாக்கல் கிளை
II. கருத்திட்ட அலகு
III. கண்காணிப்பு மற்றும் மீளளிப்புக் கிளை
IV. முதலீட்டுச்சபைக் கைத்தொழில் ஒருங்கிணைப்புப் பிரிவு
V. தபால் மதிப்பீட்டுக் கிளை (கொழும்பு)

ஆவணக்கிளை

செய்முறைப்படுத்தப்பட்ட சுங்கப்பிரகடனங்களது எண்ணிக்கை

| | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| (அ) தலைமை அலுவலகத்திலான சுங்கப்பிரகடனங்களது மொத்த எண்ணிக்கை | 88,096 | **95,397** | 110,865 |
| (ஆ) இன்பக் கிளையிலிருந்தான சுங்கப்பிரகடனங்களது மொத்த எண்ணிக்கை | 6,030 | 4,618 | 5,154 |

கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் பிரிவிலான அறவீடுகள்

| | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| அரசிறை சேகரிப்பு (ரூபா மில்லியன்) | 15,466 | **15,783** | 21,211.9 |
| சோதனைக்கட்டணம் (ரூபா மில்லியன்) | 7.0 | 7.3 | 8.08 |

கருத்திட்டப் பிரிவு

பிணைப்படுத்தப்பட்ட சுங்க குத இல்லங்களது தற்போதைய நிலை (2013)

| | | அரச குத இல்லம் | தனியார் குத இல்லம் | தயாரிப்பிலான ï குத இல்லம் | சீனி குத இல்லம் | ப.உ..வராத குத இல்லம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| **i** | வருட ஆரம்பத்திலான குத இல்லங்களது எண்ணிக்கை | 6 | 49 | 6 | 4 | 8 |
| **ii** | இவ்வருட காலப்பகுதியிலான புதிய அங்கீகாரங்களது எண்ணிக்கை | - | 2 | - | - | - |
| **iii** | மாற்றுதல்களது எண்ணிக்கை (மீள் பிணை) | - | 2 | - | - | - |
| **iv** | வருட இறுதியிலான குத இல்லங்களது எண்ணிக்கை | 6 | 49 | 6 | 4 | 8 |

| | | சேவை பிணைமுறிகள் | தனியார் பிணைமுறிகள் | தீர்வையற்ற கடைகள் | ஏம்.சீ.சீ குதம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| **i** | வருட ஆரம்பத்திலான குத இல்லங்களது எண்ணிக்கை | 13 | 76 | 53 | 07 | **222** |
| **ii** | இவ்வருட காலப்பகுதியிலான புதிய அங்கீகாரங்களது எண்ணிக்கை | - | 4 | 3 | - | **9** |
| **iii** | மாற்றுதல்களது எண்ணிக்கை (மீள் பிணை) | 1 | 2 | 2 | - | **7** |
| **iv** | வருட இறுதியிலான குத இல்லங்களது எண்ணிக்கை | 12 | 78 | 54 | 7 | **224** |

ப.ச.வி. நிலையத்திலுள்ள தீர்வையற்ற கடைகளிலான விற்பனைகள் தொடர்பிலான விபரங்கள்

| | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| சீ ட்றான்ஸ் டியுடிபிறி சொப் (ஐ.அ.டொ) | 1,349,906/- | 1,144,855/- | 1,246,289/- |
| சிலோன் போட் சேவிசஸ் லிமிடட் (ஐ.அ.டொ) | 647,200/- | இல்லை | இல்லை |
| ஏஸ்.ரீ.சீ ஜெனரல் ட்றேடிங் லிமிடட் (ஐ.அ.டொ) | 703,444/- | 1,161,806/- | 1,588,401/- |
| ஏடிசன் எலக்ட்றிகல் டியுடிபிறி பிறைவட் லிமிடட் (ஐ.அ.டொ) | இல்லை | இல்லை | இல்லை |
| மொத்தம் (ஐ.அ.டொ) | 2,407,578/- | 2,306,661/- | 2,834,690/- |

ஏ.மு.த.இ 1, ஏ.மு.த.இ 4 மற்றும் ஐ.பீ.ஜீ திட்டங்கள் (2012)

I. செயற்படுத்துனர்கள்

| | ஏ.மு.த.இ 1 | ஏ.மு.த.இ 4 | ஐ.பீ.ஜீ |
|---|---|---|---|
| i. ஆண்டின் தொடக்கத்திலிருந்த செயற்படுத்துபவர்களின் எண்ணிக்கை | 927 | 493 | 215 |
| ii. இவ் ஆண்டுக்காலப்பகுதியில் இணைக்கப்பட்ட செயற்படுத்துபவர்களின் எண்ணிக்கை | 74 | 24 | 10 |
| iii. ஆண்டின் இறுதியிருந்த செயற்படுத்துபவர்களின் எண்ணிக்கை | 1001 | 517 | 225 |

கண்காணிப்பு மற்றும் நிதி மீளளிப்புக் கிளை

பாதுகாக்கப்பட்ட வருமானம்

| | 2013 |
|---|---|
| | உத்தரவாதங்களின் எண்ணிக்கை |
| ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கி உத்தரவாதம் | 1929 |
| உரிமை கோரப்பட்ட வங்கி உத்தரவாதம் | 1613 |
| பூர்த்திசெய்யப்பட்ட வங்கி உத்தரவாதம் | 1468 |
| ஏற்றுக்கொள்ளப்பட்ட தனிப்பட்ட உத்தரவாதம் மற்றும் கூட்றவு உத்தரவாதம் | 148 |

முதலீட்டுச்சபைக் கைத்தொழில் ஒருங்கிணைப்புக் கிளை

முதலீட்டாளர்களின் எண்ணிக்கை

| | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| ஆண்டின் தொடக்கத்திலிருந்த முதலீட்டாளர்களது எண்ணிக்கை | 190 | 214 | 293 |
| இவ் ஆண்டுக்காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட புதிய முதலீட்டாளர்கள் | 24 | 79 | 70 |
| ஆண்டின் இறுதியிலிருந்த முதலீட்டாளர்களது எண்ணிக்கை | 214 | 293 | 363 |

| | 2012 | 2013 |
|---|---|---|
| முதலீட்டுச் சபை வியாபாரங்களிலிருந்தான வருமானம்(ரூ.மில்) | 9,984 | 9226.09 |
| உடன்படிக்கை ரத்துச்செய்யப்படதன் காரணமாக முதலீட்டுச் சபை வியாபாரங்களிலிருந்து அறவிடப்பட்ட தீர்வை (ரூ.மில்) | 37.0 | 14.9 |

முதலீட்டுச் சபைக்கான சுங்கத்தின் ஒருங்கிணைப்புக் கிளை

| | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| ஆண்டின் தொடக்கத்திலிருந்த வழக்குகளது எண்ணிக்கை | 51 | 51 | 51 |
| இவ் ஆண்டுக்காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட வழக்குகளது எண்ணிக்கை | 1 | - | - |
| இவ் ஆண்டுக்காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்ட வழக்குகளது எண்ணிக்கை | 3 | - | - |
| நிலுவையிலுள்ள புலனாய்வு வழக்குகளது எண்ணிக்கை | 48 | 45 | 45 |
| ஆண்டின் இறுதியில் பூர்த்தியாகாத புலனாய்வு வழக்குகளது எண்ணிக்கை | - | 1 | 1 |
| | - | | |
| நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளது எண்ணிக்கை (ஆண்டின் இறுதியில்) | - | - | - |
| அறவீடுகள் (ரூபா) | | | |
| விசேட சேமிப்புகள் | - | - | - |
| அபராதம் / பறிமுதல்கள் | 88,552,987 | - | |
| விற்பனை வரும்படிகள் | | 527,500 | - |
| பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது பெறுமதி (ரூபா) | | - | |
| மொத்தம் (ரூபா) | **88,552,987** | **527,500** | **-** |

பிணைகள் பற்றிய புலனாய்வுக் கூறு


கண்டுபிடிக்கப்பட்ட மீறுகைகள், மேற்கொள்ளப்பட்ட அறவீடுகள் மற்றும் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொர்பிலான விடயங்கள்

| | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| ஆண்டின் தொடக்கத்திலிருந்த வழக்குகளது எண்ணிக்கை | 619 | 569 | 574 |
| இவ் ஆண்டுக்காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட வழக்குகளது எண்ணிக்கை | 12 | 29 | 59 |
| இவ் ஆண்டுக்காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்ட வழக்குகளது எண்ணிக்கை | 62 | 7 | 10 |
| பூர்த்தியாகாத புலனாய்வு வழக்குகளது எண்ணிக்கை | 569 | 574 | 611 |
| ஆண்டின் இறுதியில் பூர்த்தியாகாத புலனாய்வு வழக்குகளது எண்ணிக்கை | 3 | 1 | 4 |
| நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளது எண்ணிக்கை (ஆண்டின் இறுதியில்) | 2 | இல்லை | இல்லை |
| அபராதம் / பறிமுதல்கள் | 750,000 | 14,229,764 | 266,043,829 |
| பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது பெறுமதி | 234,720 | 37,637,847 | - |

அஞ்சல் மதிப்பீட்டுக் கிளை

2013 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட வருமானம (ரூபா)

| கொழும்பு | கண்டி | காலி | திருகோணமலை | யாழ்ப்பாணம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 52,292,746 | 6,823,048 | 4,734,594 | 1,854,348 | 2,674,711 | **68,379,447** |




| | **PA(**பீ.ஏ) | குவியல்களாக | மின்னியல் அஞ்சல் சேவை | மொத்தம் |
|---|---|---|---|---|
| பீ.ஓ.டீ களது எண்ணிக்கை | 29939 | 845 | 14555 | **45339** |
| பொதிகளது எண்ணிக்கை | 35112 | 904 | 16731 | **52747** |
| பெறுமதி (ருபா) | 122030724.5 | 3591269 | 316562072 | **442184065** |
| மொத்த வரிகள் (ருபா) | 17803593 | 292175 | 40229291 | **58314927** |

# சரக்குப் பரிசோதனைகள் பணிப்பகம்

அறிமுகம்

கடல் மார்க்கமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை குறித்த பொருள் உரிமையாளருக்கு விடுவிப்பதற்கு முன்னர் அவற்றைப் பரிசோதித்தல் இப் பணிப்பகத்தின் பிரதான பொறுப்பாகும். இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பில் உரிய வருமானம் அறவிடப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் தொழில்நுட்பம், பௌதீக ரீதியான மதிப்பீட்டு முறையினை உபயோகித்து சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் பிற தொடர்புபட்ட சட்டம் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட, தடைசெய்யப்பட்டவை தொடர்பில் கண்டிப்பான இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்குமாகவே இச்சோதனைகளும் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. சட்ட ரீதியான வியாபார இலகுபடுத்தல் முறையில் இப்பணிப்பகத்தின் பொறுப்பு பிரதானமானதொன்றாகும்.

கடல் மார்க்க சரக்குப் பரிசோதனையானது, வீட்டுப் பாவனைக்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் அதேபோன்று முதலீட்டுச் சபை, ஏற்றுமதிச் செயன்முறைக்கான தற்காலிக இறக்குமதி மற்றும் சுங்கப் பிணைப்படுத்தப்பட்ட திட்டம் போன்றவற்றின் கீழான ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் செயற்பாட்டுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டுள்ளது. கடல்மார்க்க சரக்குகளானது முழுக் கொள்கலன் சுமை கொண்டவை, குறைந்த கொள்கலன் சுமை கொண்டவை மற்றும் பெருந்தொகைச் சரக்கு எனும் வகையில் கொண்டுவரப்படுகின்றன.

முழுக்கொள்கலன் சரக்கில் நடுத்தர மற்றும் உயர் இடர் சோதனைக்காக துறைமுகத்திற்கு வெளியே கிறேலைன்-1, கிறேலைன்-2 எனும் இரு கொள்கலன் சாலைகள் செயற்படுவதுடன் மூன்றாம் கொள்கலன் சாலையான வரிசை கொள்கலன் சாலை (ஆர்.சி.ரி)யில் குறைந்த இடர் கொண்ட கொள்கலன்கள் சோதனைக்குட்படுத்தப்படுகின்றன. சில்லறைக் கொள்கலனில் அடங்கிய பொருட்களானது துறைமுகத்திற்குள்ளேயே இரண்டு பரிசோதனை நிலையங்களிலும் துறைமுகத்திற்கு வெளியேயான களஞ்சிய சாலையில் நிறுவப்பட்டுள்ள ஒரு பரிசோதனை நிலையத்திலும் சோதனையிடப்படுகின்றன. முதலீட்டுச் சபையின் கீழ் செயற்படுகின்ற வியாபார நிலையங்களால் இறக்குமதி செய்யப்படும் முழுக் கொள்கலன் சரக்கு சோதனைக்காகவென மத்திய வகைப்படுத்தல் சாலை செயற்படுகின்றது ஆனால் இது சுதந்திர வர்த்தக வலயத்திற்கு வெளியே அமையப்பெற்றதாகும். துறைமுகத்திற்குள்ளே இரண்டு எக்ஸ்ரே கதிர் இயந்திரங்களும் துறைமுகத்திற்கு வெளியேயான சாலையில் ஒரு எக்ஸ்ரே கதிர் இயந்திரமும் நிறுவப்பட்டுள்ளது.

பிரதான தொழிற்பாடுகள் :


1. இறக்குமதியாளர்களால் பிரகடனப்படுத்தப்பட்டவை சரியானதா என்பதை ஒப்பீட்டுப் பார்ப்பதற்காக சகல இறக்குமதிப் பிரகடனங்களையும் நுட்பமாக ஆராய்தல்.
2. வித்தியாசமான பரிசோதனை மட்டங்களின் கீழ் பல்வேறு பரிசோதனைச் சாலைகளில் பரிசோதனைக்கான பொருட்களை அனுப்புதல்.
3. சோதனையில் சரக்குத் தெரிவு மாதிரி அடிப்படையில் இடர் முகாமைத்துவத்தை அமுல்படுத்தலும் சரக்கினை விடுவித்தலும்.
4. உரிய வருவாய் சேகரிப்பை உறுதிப்படுத்தும் வகையில் இலக்குப் பொருட்களை பௌதீக ரீதியாக சோதனை செய்தல்.
5. பொருட்கள் தொடர்பான பிரகடனங்களின் இணக்கப்பாட்டு முரண்பாட்டினைக் கண்டுபிடித்து அவற்றைத் தடுப்பதற்கான பௌதீக ரீதியான பரிசோதனை மேற்கொள்ளல்.
6. மட்டுப்படுத்தப்பட்ட, தடைசெய்யப்பட்ட பொருட்களின் நகர்வு தொடர்பில் பிற எல்லைக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளின் பயன்பாட்டினை உறுதிசெய்வதற்காக சரக்கினை பரிசோதனை செய்தல்.
7. மறைத்துவைக்கப்படுகின்ற, பிரகடனப்படுத்தப்படாத பொருட்களை கண்டுபிடிப்பதற்கான எக்ஸ் ரே கதிர் இந்திரத்தையும் மற்றும் வெளியாக்கத்தை விரிவுபடுத்துவதற்காக இலகுபடுத்துகைக் கருவியொன்றையும் பயன்படுத்தல்.


பொதுவான விருத்திகள்


சரக்கு வெளியாக்கல் செயன்முறையினை இலகுபடுத்தும் வகையிலும் மற்றும் விநியோகப் பிணைப்பிலான தாமதத்தைக் குறைக்கும் வகையிலும் துறைமுகத்தினுள் நிறுவப்பட்டுள்ள எக்ஸ் - கதிர் ஊடுபுகு இயந்திரத்தில் முழுமையான அலுவலா்களும் நியமிக்கப்பட்ட சகல வசதிகளுமுடைய அலுவலகமொன்று நிறுவப்பட்டுள்ளது. எக்ஸ் - கதிர் ஊடுபுகவிடும் இவ்வியந்திரங்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ள உயர் இடர் சரக்குக் கொள்கலன்களை சோதனையிடுவதற்காகப் பயன்படுத்தும் அதேவேளை, மறுமுனையில் சரக்கு வெளியாக்கலில் மிகவும் குறைந்த தலையீட்டுடன் விரைவாக, குறைந்த இடர் சரக்குக் கொள்கலன்களை விடுவிப்பதற்கானதொரு இலகுபடுத்தல் கருவியாக இது உபயோகிக்கப்படுகிறது.


முதலீட்டுச் சபையின் கீழ் செயற்படுகின்ற கைத்தொழிற்சாலைகளுக்கு சேவைகளை வழங்கும் நோக்கில் ஒறுகொடவத்தையில் அமையப்பெற்றுள்ள மத்திய வேறுபடுத்தல் சாலையில் அவா்களது கடல் மாா்க்கச் சரக்குகளை வெளியாக்க முழு நேரமும் நேரிடுகின்றன. முதலீட்டாளா்களது வளாகத்திலான சோதனை மற்றும் முதலீட்டுச் சபையினால் சிபாரிசு செய்யப்பட்ட, தெரிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கு பச்சை வாயில் வெளியாக்கல் வழங்குதல் போன்ற வசதிகள் விரிவாக்கப்பட்டுள்ளன.

| விபரம் | | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| பரிசோதனை நிலையங்களில் பதியப்பட்ட சுங்கப்பிரகடனங்களது (வீட்டுப் பாவனை ï முழுக் கொள்கலன் மற்றும் பலரது பொருட்களைக் கொண்ட கொள்கலன்) எண்ணிக்கை | | 226,584 | 222,131 | 189,617 | 175,062 |
| பரிசோதனைகளது வகை | அம்பர் | 114,257 | 153,647 | 138,360 | 140,624 |
| | விபரம் | 12,834 | 12,791 | 15,036 | 18,748 |
| | அதிகூடிய இடர் சரக்கு | 4,416 | 5,956 | 3,329 | 2,257 |
| | சிவப்பு | 9,145 | 1,576 | 1,868 | 6,217 |
| | ஏனையவை (இன்பக், ஏற்றுமதி நோக்கிலான தற்காலிக இறக்குமதி, போன்றவை..) | 13,725 | 7,749 | 6,240 | 7,216 |
| வெளியாக்கப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை (வீட்டுப் பாவனை) | | 200,314 | 236,103 | 245,714 | 261,165 |
| பச்சை வாயில் ஊடாக விடுவிக்கப்பட்ட கொள்கலன்களது (வீட்டுப் பாவனை) எண்ணிக்கை | | | | 24,784 | 29,446 |
| நுட்பமாக பரிசோதனை செய்யப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை | | 9,758 | 12,627 | 14,238 | 24,985 |
| முதலீட்டுச் சபை வியாபாரம் தொடர்பில் அனுப்பப்பட்ட பொருட்களது வெளியாக்கல் (வெளிநிலை வலயங்கள் - முழுக் கொள்கலன் மற்றும் பலரது பொருட்களைக் கொண்ட கொள்கலன்) | | 27,968 | 58,362 | 59,010 | 58,065* |
| வெளியாக்கப்பட்ட கொள்கலன்களது(இறக்குமதி)எண்ணிக்கை (முதலீட்டுச் சபை ï வெளிநிலை வலயங்கள்) | | | | 27,446 | 24,765 |
| வெளியாக்கப்பட்ட கொள்கலன்களது(ஏற்றுமதி)எண்ணிக்கை (முதலீட்டுச் சபை ï வெளிநிலை வலயங்கள்) | | | | 17,316 | 19,260 |
| கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் | | 325 | 436 | 572 | 222 |
| மேலதிக சுங்கப் பிரகடனங்கள் தொடர்பிலான அறவீடுகள் (ரூபா மில்) | | 113 | 506.3 | 487 | 715.6 |
| அபராதங்கள் தொடர்பிலான அறவீடுகள் (ரூபா மில்) | | 55.8 | 62.4 | 67 | 49.1 |
| பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது பெறுமதி (ரூபா மில்) | | 7.8 | 30.5 | 2.1 | 7.2 |


சுங்கப் பிரகடனங்கள் மற்றும் கொள்கலன்கள் என்பவற்றின் ஒப்பீட்டாய்வு –
2010 தொடக்கம் 2013 வரை
400,000
200,000
0
2010
2011
2012
2013
பரிசோதனை நிலையங்களில் பதியப்பட்ட சுங்கப்பிரகடனங்களது (வீட்டுப் பாவனை ï முழுக் கொள்கலன் மற்றும் பலரது பொருட்களைக் கொண்ட கொள்கலன்) எண்ணிக்கை
வெளியாக்கப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை (வீட்டுப் பாவனை)
நுட்பமாக பரிசோதனை செய்யப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை
முதலீட்டுச் சபை வியாபாரம் தொடர்பில் அனுப்பப்பட்ட பொருட்களது வெளியாக்கல் (வெளிநிலை வலயங்கள் - முழுக் கொள்கலன் மற்றும் பலரது பொருட்களைக் கொண்ட கொள்கலன்)


அறவிடப்பட்ட அரசிறை ஒப்பீட்டாய்வு
2010 தொடக்கம் 2013 வரை
1,000.0
100.0
10.0
1.0
2010
2011
2012
2013
பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது பெறுமதி (ரூபா மில்)
அபராதங்கள் தொடர்பிலான அறவீடுகள் (ரூபா மில்)
மேலதிக சுங்கப் பிரகடனங்கள் தொடர்பிலான அறவீடுகள் (ரூபா மில்)


பரிசோதனை வகை (வீட்டுப் பாவனை)
11%
1%
4%
4%
80%
அம்பர்
விபரம்
அதிகூடிய இடர் சரக்கு
சிவப்பு
ஏனையவை (இன்பக், ஏற்றுமதி நோக்கிலான தற்காலிக இறக்குமதி, போன்றவை..)


2013ஆம் வருடத்தில் வெளியாக்கப்பட்ட இறக்குமதி அனுப்பு பொருட்கள்
100,000
10,000
1,000
100
10
1
கிரேனலைன்
எச் ஆர் சி
ஜெ சீ ரீ
கைட்பீர்
பீ வீ கியு
வீட்டுப் பாவனை தொடர்பில் பதியப்பட்ட சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை

# பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகம்

அறிமுகம்

பயணிகள் தொடர்பிலான சேவைப் பணிப்பகமானது கொழும்பு துறைமுகத்தினூடான உள்வருகை மற்றும் வெளிச்செல்லுகை ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களின் போதான பயணிகள் மற்றும் பொதிகள் தொடர்பான பயன்மிக்க கட்டுப்பாட்டிற்குப் பொறுப்பாகவுள்ளது.

பிரதான தொழிற்பாடுகள்

1. உள்வரல் மற்றும் வெளிச்செல்லுகை தொடர்பான பயணிகள் செயன்முறை மற்றும் பொதிகளின் வெளியாக்கத்திற்கு வசதியளித்தல்.
2. மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியைத் தடுத்தல் மற்றும் அரசிறையினை பாதுகாத்தல்,
3. சமூக-பொருளாதார, கலாசார மற்றம் மக்களின் சுற்றுச் சூழல் சார்ந்த நலன்களைப் பாதுகாத்தல்.
4. பயணிகள் உடன் வராத பொதிகளடங்கிய குத இல்லங்களை கண்காணித்தலும் கட்டுப்பாட்டின் கீழ் வைத்தலும்.

2013 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பொதிப் பிரிவின் மொத்த அறவீடுகள்

| | அபராதம் | மேலதிக நேரம் | தீர்வையும் வரிகளும் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பொதி அலுவலகம் (கருமபீடம்) | 11,065,325 | | 42,573,011 | 29,729,888 |
| பொதி அலுவலகம் (விற்பனை) | 19,250 | | 665,136,372 | 147,424,507 |
| பொதி அலுவலகம் (புதிய நுகே வீதி) | 2,282,203 | | 36,470,100 | 57,216,749 |
| லக்சிறிசேவா | 465,799 | 2,650,231 | 21,734,979 | 59,476,157 |
| ட்றான்ஸ்கோ | 578,665 | 2,278,260 | 25,117,111 | 38,335,317 |
| மிட்கோ | 816,212 | 2,713,097 | 15,135,441 | 25,417,831 |
| ட்றைகோ (கொழும்பு) | 1,330,202 | 3,275,349 | 61,641,685 | 74,096,225 |
| சிலோன் சிப்பிங் லைன்ஸ் (கொழும்பு) | 1,100,663 | 2,951,439 | 39,802,554 | 63,200,748 |
| உப மொத்தம் | **17,658,319** | **13,868,376** | **907,611,253** | **939,137,948** |
| | | | | |
| ட்றைகோ (காலி) | 478,740 | 2,403,485 | 11,589,572 | 14,471,797 |
| ட்றைகோ (குருநாகல) | 504,600 | 5,082,093 | 19,774,079 | 25,360,772 |
| சிலோன் சிப்பிங் லைன்ஸ் (கண்டி) | 254,026 | 4,051,540 | 11,702,715 | 16,008,281 |
| மத்தள விமான நிலையம் | 11,540,052 | | 17,317,104 | 28,857,156 |
| உப மொத்தம் | **12,777,418** | **11,537,118** | **60,383,470** | **84,698,006** |
| | | | | |
| ப.ச.விமான நிலையம் | 234,789,421 | 7,770,894 | 255,556,208 | 498,116,523 |
| | | | | |
| மொத்தம் | **234,789,421** | **7,770,894** | 255,556,208 | **498,116,523** |

# ஏற்றுமதிகள் பணிப்பகம்

அறிமுகம்

இப் பணிப்பகமானது, ஏற்றுமதி நோக்கிலான ஏற்றுமதிகள் மற்றும் மீள் ஏற்றுமதிகள் ஆகியவற்றின் வெளியாக்கத்தின் போது அவற்றின் நடைமுறைகளை இலகுபடுத்தி, நேரடி வர்த்தக உள்ளீட்டினை அறிமுகம் செய்தல் மற்றும் மாற்றியேற்றுகை மூலம் சர்வதேச சட்டரீதியான சரக்கு பரிமாற்றச் செயற்பாட்டினை அனுசரித்தல் அகியவற்றின் மூலம் வசதியேற்பாடு செய்து உதவுகின்றது. மேலும் நாட்டின் காலாசார, சுற்றாடல் மற்றும் சமூகம் சார்ந்த நலன்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது.

பிரதான தொழிற்பாடுகள்

01. இப் பணிப்பகமானது துறைமுகம் மற்றும் விமான நிலையம் ஆகியவற்றினூடாக நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் சமூகமளிக்கின்றது.
02. நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற அனைத்து ஏற்றுமதிப் பண்டங்களுடனும் சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களையும் கையாள்கின்றது.
03. சுங்க நோக்கங்களுக்காகவும் மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காகவும் ஏற்றுமதிச் சரக்குகளை பரிசோதித்தல்.
04. ஏற்றுமதிப் பண்டங்கள் மீதான ஏற்றுமதித் தீர்வை, செஸ் மற்றும் கட்டணங்களை சேகரித்தல்
05. கொழும்பிலும் மற்றும் அதன் புறநகர்ப் பிரதேசங்களிலும் அமைந்து கொள்கலன் சரக்குச் சேவை நிலையங்களை முகாமைசெய்தல்.
06. எம்.சீ.சீ. குதயில்லங்களை பராமரித்தல்.
07. தற்காலிக இறக்குமதி/ஏற்றுமதிச் செயற்பாட்டிற்கு வசதியளித்தல்.
08. மீள்செலுத்துகைக் கோரிக்கையை அங்கீகரித்தல்.
09. ஏற்றுமதிச் சான்றிதழ் வழங்கல்.
10. தீர்வை தள்ளுபடிக்கான ஆவணங்களை சான்றுப்படுத்தல்.
11. இலவச மீள் ஏற்றுமதிச் சான்றிதழைப் பதிவுசெய்தல்.
12. உற்பத்தி தொடர்பான விதிமுறைகள் தொடர்பில் வர்த்தகத் துறைக்கான ஏற்றுமதிச் சான்று வழங்குதல்.
13. மாற்றியேற்றுதல் செயற்பாடுகளுக்கான வசதியேற்பாடளித்தல்.
14. தேசிய வர்த்தகம் தொடர்பன புள்ளிவிபரங்களை வழங்குதல்.
15. நாட்டின் சமூக-பொருளாதார, கலாசார மற்றும் சுற்றாடல் சார்ந்த நலன்களைப் பாதுகாத்தல்.
16. ஏனைய அரச முகவராண்மைகள் மற்றும் தனியார்த் துறையினர்கள் போன்றோர் உள்பட அனைத்து பங்குதாரர்களுடனுமான ஒத்துழைப்பினை விருத்தி செய்தல்.
17. அனைத்து வியாபரச் செயன்முறைகள் தொடர்பான வினைத்திறன் மற்றும் பயன்களை அடைவதற்கு தொடர்ச்சியாக பங்காற்றுகின்ற முறைமைகள் மற்றும் நடைமுறைகளை அமுல்படுத்தல்.
18. ஏற்றுமதி வர்த்தகத்தை இலகுவாகி வசதியளிக்கும் நோக்கில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் அதிகூடிய பாவனையினை மேற்கொள்ளல்.

ஏற்றுமதிகள் வருவாய் எண்கள் (ரூபா)

| | ஏற்றுமதி அலுவலகம் - கொழும்பு 2013 | விமானச் சரக்கு ஏற்றமதி அலுவலகம் - கட்டுநாயக 2013 | மொத்தம் |
|---|---|---|---|
| ஏற்றுமதி அபிவிருத்திச் சபை செஸ் வரி | 2,030,740,267 | - | 2,030,740,267 |
| ஏற்றுமதிக் கடமைகள் (சீ.பீ.ஓ) | 20,987,104 | | 20,987,104 |
| செஸ் வரி - இறப்பர் | 515,697 | | 515,697 |
| செஸ் வரி - தேயிலை | 726,936,515 | | 726,936,515 |
| செஸ் வரி ï தெங்கு | 1,272,299,142 | 98,678 | 1,272,397,820 |
| பரிசோதனைக் கட்டணம் | 41,300,000 | 8,539,561 | 49,839,561 |
| உரிமைப் பங்கு | 34,541 | - | 34,541 |
| * இறக்குமதித் தீரவை (1/10) | 1,171,058 | - | 1,171,058 |
| * து.வி.அ. அறவீடு (1/10) | 516,721 | - | 516,721 |
| பிற | 4,941,806 | - | 4,941,806 |
| அபராதம் | 4,882,921 | 2,469,338 | 7,352,259 |
| பறிமுதல்கள் | 27,400,000 | - | 27,400,000 |
| மேலதிகக் கட்டணம் | 12,203,575 | 34,904,657 | 47,108,232 |
| கப்பலேற்றுச் சான்றிதழ் கட்டணங்கள் | 80,000 | - | 80,000 |
| கணனிக் கட்டணங்கள் | 21,543,000 | 17,254,750 | 38,797,750 |
| மொத்தம் | 4,166,552,347 | 63,266,984 | 4,227,819,331 |

* மீள் ஏற்றுமதியின் போது அறவிடப்பட்டவை.

**1.** <u>சமர்ப்பிக்கப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை</u>

| | |
|---|---|
| ஏற்றுமதி அலுவலகம் | - 84,460 |
| விமானச் சரக்கு | - 70,284 |
| சிறிலங்கள் காகோ | - 1,712 |
| மொத்தம் | **- 156,456** |

**2.** <u>குழுப் பரிசொதனை மனுக்கள்</u>

| | |
|---|---|
| பரிசோதனைகளது எண்ணிக்கை | - 11,895 |

**3.** <u>சேகரிக்கப்பட்ட பரிசோதனைக் கட்டணம் (ரூபா)</u>

| | |
|---|---|
| ஏற்றுமதி அலுவலக அறவீடு (மே/ப) | - 41,300,000 |
| விமானச் சரக்கு அறவீடு (மே/ப) | - 8,539,561 |
| மொத்தம் | **- 49,839,561** |

**4.** சேகரிக்கப்ட்ட கணனிக் கட்டணங்கள் (ரூபா)

| | |
|---|---|
| ஏற்றுமதி அலுவலகம் | - 21,543,000 |
| விமானச் சரக்கு | - 16, 230,750 |
| சிறிலங்கன் எயா லைன் | - 1,024,000 |
| மொத்தம் | **- 38,797,750** |

**5.** சேகரிக்கப்ட்ட ஏற்றுமதி வரிகள் (ரூபா)

| | |
|---|---|
| ஏற்றுமதித் தீர்வை | - 20,987,104 |
| உரிமைப் பங்கு | - 34,541 |

செஸ் வரி (ரூபா) **:**

| | |
|---|---|
| அ) தெங்கு அபிவிருத்தி அதிகார சபை செஸ் வரி | - 127,299,142 |
| ஆ) தேயிலைச் சபை செஸ் வரி | - 726,300,919 |
| இ) தேயிலை மருத்துவ உதவி செஸ் வரி | - 635,596 |
| (ஈ) இறப்பர் செஸ் வரி | - 515,514 |
| உ) இறப்பர் மருத்துவ உதவி செஸ் வரி | - 183 |
| ஊ) ஏற்றுமதி அபிவிருத்திச் சபை செஸ் வரி | - 2,030,740,267 |
| எ) இறக்குமதித் தீரவை (1/10) | - 1,171,058 |
| ஏ) து.வி.அ. அறவீடு(1/10) | - 516,721 |

மேலதிக நேரக் கொடுப்பனவு (ரூபா)

| | |
|---|---|
| ஏற்றுமதி அலுவலகம் | - 1,131,800 |
| விமானச் சரக்கு | - 33,663,830 |
| சிறிலங்கன் எயா லைன் | - 1,240,827 |
| கொள்கலன் சாலை | - 11,071,775 |
| மொத்தம் | - **47,108,232** |

**8.** நடைமுறைக் கணக்குகள்

| | |
|---|---|
| நடைமுறைக் கணக்கு வைத்திருப்பவர்களது எண்ணிக்கை | - 46 |
| செயற்படுத்தப்படும் நடைமுறைக் கணக்குகளது எண்ணிக்கை | - 35 |
| காலப்பகுதியிலான சேமிப்பு (ரூபா) | - 1, 644,452,956 |
| இக்காலப்பகுதியில் பற்றுவைக்கப்பட்ட மொத்தத் தொகை(ரூபா) | - 1,529,139,316 |

**9.** வேண்டுகோளின் பேரில் விநியோகிக்கப்பட்ட எப்.ஆர்.ஐ.சிக்ளது எண்ணிக்கை - 671

**10.** விநியோகிக்க்பட்ட கப்பலேற்றுச் சான்றிதழ்களது எண்ணிக்கை - 320

**11.** சேகரிக்கப்பட்ட கப்பலேற்றுச் சான்றிதழ் கட்டணங்கள் (ரூபா) - 80,000

**12.** கப்பல்கள்/விமானங்கள் விடயம் தொடர்பிலான சரிப்படுத்துகை (ரூபா)

| | |
|---|---|
| ஏற்றுமதி அலுவலகம் (அபராதம்) | - 4,882,921 |
| விமானச் சரக்கு இல்லம் (அபராதம்) | - 2,469,338 |
| மொத்தம் | - **7,352,259** |

**13.** கப்பல் தொடர்பிலான சரிப்படுத்துகை - 13,280

**14.** இறக்கி ஏற்றல்

| | |
|---|---|
| சேமிப்புகளது எண்ணிக்கை (கொள்கலன்கள்) | - 995,750 |
| கப்பலேற்றப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை | - 1,279,523 |

# பயணிகள் சேவை (கட்டுநாயக்க) பணிப்பகம்

அறிமுகம்

இலங்கைச் சுங்கத்தின் புதிய சீரமைப்பில் பயணிகள் சேவைப் பணிப்பகமானது அரசிறை மற்றும் சேவைகள் கொத்தணியின் கீழ் செயற்படுகின்றது. தற்போது இப்பணிப்பகமானது அமர்த்தப்பட்டுள்ள நிரந்தர அலுவலர்களைக் கொண்டு சுங்கப் பணிப்பாளர் ஒருவரின் தலைமையின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கின்றது. சுங்கப் பிரதிப் பணிப்பாளரின் கீழான அலுவலர்களைக் கொண்ட பிறிதானதொரு குழு, முழு நேரத் தொழிற்பாடுகளைக் கவனிக்கும் வகையில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நிருவாகத்தினை நிலைநாட்ட வேலைக்கிரமப்படுத்தப்பட்ட அலுவலராக கடமைகளை நிறைவேற்றுகின்றனர்.

இப்பணிப்பகமானது விமானச் சரக்குப் பகுதிகள் தவிர்ந்த பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் கட்டுப்பாடு, கண்காணிப்பு என்பவற்றினைக் கொண்டுள்ளது. திணைக்களத்தின் பல்வேறு எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் வருகை மற்றும் செல்லுகை ஆகிய இரு எல்லைப்பகுதிகளில் சுங்க அலுவலர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

முதலான குறிக்கோள்கள்

- விமானப் பயணிகளது வருகை, செல்லுகைகள் தொடர்பில் வசதியளித்தல்.
- சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் பிற தொடர்புபட்ட சட்டங்களின் கீழ் நிலைநாட்டப்பட்டுள்ள அமுல்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- விமானப் பயணங்களுடன் தொடர்பான எல்லை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தலும் கண்காணித்தலும்.
- விமானச் செயற்பாட்டுக் கட்டுப்பாட்டில் குறிப்பிடத்தக்கதொரு விதிமுறையினை நிறைவேற்றல்.
- அரசிறை ஒழுக்குகள்/ வெளிநாட்டு நாணயமாற்று ஒழுக்குகளைக் குறைத்தல் மற்றும் அத்தகைய தடுப்புகள் தொடர்பில் உரிய நடவடிக்கையினை எடுத்தல்.
- பாதுகாப்பு அமைச்சு, தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இலங்கை தர நிர்ணய நிறுவகம், அழகு சாதரப் பொருட்கள் மற்றும் மருந்துகள் அதிகாரசபை, இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை போன்ற நிறுவனங்கள் மற்றும் ஏனைய அதிகாரசபைகளது ஒழுங்குவிதிகள் மற்றும் பிற சட்டங்களால் சுங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அமுல்படுத்தல்.
- விமான நிலைய வளாகங்களுக்கிடையிலான பிற நிறுவனங்களான குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம், விமானம் மற்றும் விமானச் சேவைகள், தொற்றுநோய்த் தடுப்புத் திணைக்களம், குற்றப் புலனாய்வுத் திணைக்களம், பொலிஸ் போதைப் பொருள் பணியகம் போன்ற பிற அரச நிறுவனங்களுடன் தொடர்பினைப் பேணல்.

இப்பணிப்பகத்தின் குறிக்கோள்கள் பல்வேறுபட்ட தரங்கள் மூலம் பல்வேறு மட்டங்களில் நிறைவேற்றப்பட்டன.

பிரதான தொழிற்பாடுகள்

1. வெளிச்செல்லுகை மற்றும் உள்வருகை பயணிகள் மற்றும் அவர்களது பொதிகளின் வெளியாக்கத்தினை இலகுபடுத்தல்.
2. பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் மிகவும் முக்கியமான நபர்களது வெளியாக்கத்திற்கு வசதியளித்தல்.
3. விமானப் பணியாட்கள் மற்றும் விமானங்கள் இலங்கையை விட்டு வெளிச்செல்லல் மற்றும் வருகையினைச் செயன்முறைப்படுத்தல்.
4. பயணிகள் பொதி தொடர்பில் தீர்வையற்ற சலுகைகளை வழங்கும் அதேவேளை அத்தகைய வசதிகளை கண்காணித்தலும் மற்றும் அதனைத் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பில் நடவடிக்கையெடுத்தல்.
5. ஏ.ரீ.ஏ. கானே, உத்தரவாதங்கள் மற்றும் விசேட சேமிப்புகள் தொடர்பில் பொருள் விடுவித்தல்.
6. சுங்கம்/ தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினால் அனுமதிக்கப்பட்ட இரத்தினக்கல்/ ஆபரணம் மற்றும் பொதிகளைப் பாதுகாத்தல்.
7. வருகை தரும்/ வெளிச்செல்லும் பயணிகளால் பிரகடனப்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு நாணயமாற்றுப் பிரகடனங்களை சோதனை செய்து அங்கீகரித்தல்.
8. பயணி வெளிச்சென்ற பின்னர் அவருடன் வராத பொதிகளை வெளியாக்குவதற்கு அவரால் அதிகாரமளிக்கப்பட்டவாறாக அதிகாரத் தத்துவத்தை வழங்குதல் தொடர்பில் பொதிச் சலுகையினை குறிப்பீடு செய்தல்.
9. சந்தேகத்தின் பேரில் அல்லது தேவையேற்படும் போது பயணியுடன் வரும் பொதிகளை சோதனை செய்தல்.
10. அவசியமேற்படும் போது நபர்களைச் சோதனையிடல்.
11. குற்றங்களைக் கண்டுபிடித்தல் மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட சுங்க விடயங்கள் மீது புலனாய்வுகளையும் விசாரணைகளையும் மேற்கொள்ளல்.
12. வெளியே செல்லும் விமானங்களுக்கு விடுவிப்பு வழங்கல்.
13. வர்த்தக நோக்கம் கருதிய பொருட்களைக் கொண்டுவருகின்ற பயணிகளிடமிருந்து தீர்வைகளையும் பிற வரிகளையும் சேகரித்தல்.

## 2013 ஆம் ஆண்டுக் காலத்திலான செயலாற்றுகை

(அ) நகர்வு எளிதாக்கல் - வருகை மற்றும் செல்லுகை பயணிகள் மற்றும் அவர்களது பொதி

2013 ஆம் ஆண்டின் புள்ளிவிபரங்களுக்கு இணங்க, பயணி செய்முறையானது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் ஓரளவு வளர்ச்சியினைக் காட்டக்கூடியதாகவுள்ளது. மொத்த பயணிகள் தொடர்பில் வருகையானது 3.2 மில்லியனுக்கு மேலாகவும் மற்றும் செல்லுகையானது 3.2 மில்லியனாகவுமிருந்தன.

அத்தகைய பயணிகளது வருகை நோக்கத்திற்கு இணங்க, பல்வேறு வகைகளில் வகைப்படுத்த முடிந்துள்ளது. அதாவது, இலங்கையர்கள், வெளிநாட்டு உல்லாசப் பயணிகள், இறங்கியேறல் பயணிகள், இரு நாட்டுப் பிரஜைகள், இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகள், சர்வதேச வியாபாரிகள், உத்தியோகபூர்வமானவர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் ஏனையவை என வகைப்படுத்த முடியும்.

(ஆ) சமூகப் பொருளாதார, கலாசார மற்றும் தேசத்தின் சுற்றுச்சுழல் உயிரினங்களின் நலன்களைப் பாதுகாத்தல்.

இப்பணிப்பகமானது, சுயமாகப் பயிற்சி பெற்ற சில நபர்களாலும், சமூக, பொருளாதார, கலாசார மற்றும் சுற்றுச் சூழல் உயிரின/ தேசத்தின் சுற்றாடல் நலன் போன்றவற்றுக்கு கழங்கம் ஏற்படுத்தும் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனம் திறம்பட முடியடிக்கப்பட்டுமுள்ளது.

தாவர மற்றும் விலங்கின உயிர்ப் பல்வகைமையினைக் கருத்திற்கொள்ளும் போது, இலங்கை உலகிலேயே உயிர்ப் பல்வகைமைக்கு பிரசித்தி பெற்றுள்ள நாடாக அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் மதிப்பிட முடியாத மரபுரிமை வளங்களுடன் செழிப்பு மிக்க நாடாகவுமுள்ளன. நாட்டின் கலாசார விழுமியங்களும் வரலாறும் அளவிட முடியாத தொல்பொருளியல் பெறுமதியுடனான பொருட்கள் தொடர்பில் சுட்டிக்காட்டுகின்றன. இதன் மூலம் அவதானிக்கத்தக்க விடயம் யாதெனில், தேசத்தின் அக்கறை கொண்ட இவ்வகைப் பொருட்களை கள்ளக்கடத்தலில் ஈடுபட்டு சர்வதேச ரீதியில் தீய வழியில் இலாபம் சம்பாதிப்பதை இலங்கை ஏலவே வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளது. விமான நிலையமானது எல்லைக் கடப்பு நிலையமாகவிருக்கும் அதேவேளை, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பணி புரியும் சுங்க அலுவலர்கள், விமான நிலையமூடாக பயணிக்கும் பயணிகள் மற்றும் அவர்களுடனான பொதிகள் தொடர்பில் கண்காணிப்பினை மேற்கொண்டு மேலே கூறப்பட்ட வகையின் கீழ் பொருட்களை எடுத்துச்செல்வதைப் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்கதொரு பங்கினை நிறைவேற்றியுள்ளனர்.

அத்தகைய முயற்சிகளை முறியடிக்கும் ஒரு கருவியாக, வெளிச்செல்லும் பகுதியில் அத்தகைய விசேட பயிற்சி பெற்ற அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுங்கத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட ஒருசில முக்கிய விடயங்கள் வருமாறு ;

- பழங்கால குற்றி நாணயங்களை நாட்டை விட்டு வெளியே கடத்த முயற்சித்தமை
  இலங்கையைச் சேர்ந்த பயணி ஒருவர் மிகவும் பண்டைய காலத்து குற்றி நாணயங்கள் 736ஐ சட்ட ரீதியற்ற முறையில் விமான நிலையத்தின் வெளிச்செல்லும் வாயிலில் கொண்டு செல்ல முயற்சித்த போது சுங்க அலுவலர்களால் அவை கைப்பற்றப்பட்டன.
- இலங்கையிலிருந்து 53.6 கி.கி. நிறையுடைய வல்ல பட்டா வினை கடத்த முற்பட்ட போது சுங்கத்தினால் பறிமுதல் செய்யப்பட்டமை.

(இ) சட்ட ரீதியற்ற போதைப் பொருள்/ மருந்துகள் மற்றும் விலையுயர்ந்த இரசாயனப் பொருட்களது கண்டுபிடிப்பு.

சட்ட ரீதியற்ற மருந்துகளைக் கண்டுபிடிப்பதன் மூலம் சமூகத்தினைப் பாதுகாக்கும் வகையில் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் இது தொடர்பில் விமான நிலையத்தில் ஹிரோயின் தொடர்பாக நான்கு கண்டுபிடிப்புகள் எமது புலனாய்வு அலுவலர்களால் கண்டுபிடிக்கப்பட்டதுடன் அவற்றின் நிறை 32,537கிராமுமாகும்.

மேற்படி கண்டுபிடிப்புகளுக்கு, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய அலுவலர்களுடன் சுங்கத் திணைக்களத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவில் விசேட பயிற்சி பெற்ற அலுவலர்களும் உறுதுணையாகவிருந்தனர்.

(ஈ) ஏனைய தடைசெய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களது கண்டுபிடிப்பு.

இந்த வகையின் கீழ் அடையாளப்படுத்தப்பட்ட பொருட்கள் வருமாறு;

- இயற்கையான மலர்களும் பழங்களும்
- உயிர்வாழ் தாவரங்கள்
- மிருகங்கள் (செல்லப்பிராணிகள்)
- அனுமதிப்பத்திரம் தொடர்பிலான பொருட்கள் (அழகுசாதனப் பொருள் மற்றும் மருந்துகள் அதிகாரசபை, இலங்கை தர நிர்ணயம், தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, பாதுகாப்பு அமைச்சு, தொற்றுநோய்த் தடுப்பு திணைக்களம் போன்ற நிறுவனங்களிடமிருந்தான அனுமதியினை பெற நாடியுள்ளவை).

இக்காலப் பகுதியில் உரிய அனுமதியின்றி கொண்டுவரப்பட்ட அத்தகைய பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

(உ) பணம் கடத்தலுக்கு எதிரான மற்றும் தங்கம், இரத்தினக்கல், மற்றும் ஆபரணம் கடத்தல் போன்றவற்றுக்கு எதிரான நடவடிக்கை.

சுங்கத்தின் அயராத உழைப்பின் காரணமாக வெளிநாட்டு நாணயம், தங்கம் மற்றும் விலையுயர்ந்த கற்கள் போன்றவற்றினது கடத்தல் தொடர்பில் பாரிய கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. கண்டுபிடிக்கப்பட்ட 22 விடயங்களிலிருந்து 78 மில்லியன் பெறுமதிமிக்க வெளிநாட்டு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், 05விடயங்களிலிருந்து 174 மில்லியன் பெறுமதியான தங்கமும், 87 மற்றும் 13.8 மில்லியன் பெறுமதியான பெறுமதிமிக்க கற்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

இப்பணிப்பகத்தின் செயலாற்றுகை

| | ஜனவாரி | பேப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜுன் | ஜுலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நொவம்பர் | டிசம்பர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 20 | 19 | 14 | 24 | 18 | 26 | 27 | 25 | 34 | 18 | 19 | 39 | **283** |
| பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது பெறுமதி(ரூபா) | 31,359,801 | 30,589,651 | 12,368,980 | 7,647,641 | 2,570,501 | 3,555,520 | 8,851,820 | 6,195,984 | 46,440,681 | 44,746,813 | 27,571,432 | 34,884,750 | **316,783,574** |
| பறிமுதல் செய்யப்பட்ட நாணயங்களது பெறுமதி(ரூபா) | 6,957,121 | 21,757,838 | இல்லை | 3,080,754 | 7,288,744 | இல்லை | 7,219,153 | 1,984,519 | 3,391,574 | 7,263,240 | இல்லை | இல்லை | **78,942,943** |
| பறிமுதல் செய்யப்பட்ட தீர்வையற்ற பொருட்களது பெறுமதி(ரூபா) | இல்லை | இல்லை | இல்லை | 44,512 | இருக்கவில்லை | இல்லை | 190,417 | 82,460 | 273,775 | இல்லை | இல்லை | இல்லை | **591,164** |
| பறிமுதல் செய்யப்பட்ட இரத்தினக்கற்கள் பெறுமரி | இல்லை | 1401155 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | 1,639,675 | 597,402 | இல்லை | 185,200 | இல்லை | **13,823,432** |
| பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தின் பெறுமரி | 17,103,498 | 3,432,000 | 10,808,500 | 12478137 | 1,441,500 | 1,804,520 | 890,000 | 7,380,000 | 36,052,000 | 11,050,000 | 26,897,857 | 34,825,000 | **174,163,012** |
| பறிமுதல் செய்யப்பட்ட வெள்ளியின் பெறுமதி(ரூபா) | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | 426,250 | இல்லை | 505,800 | இல்லை | இல்லை | இல்லை | **932,050** |
| பறிமுதல் செய்யப்பட்ட புகையிலை தயாரிப்புகளது பெறுமதி(ரூபா) | 100,000 | 288,000 | இல்லை | 636,000 | 0 | 275,000 | 126,000 | இல்லை | 4,908,000 | 2,205,300 | 100,000 | இல்லை | **8,638,300** |
| கண்டுபிடிக்கப்பட்ட போதைப் பொருட்களது அளவு | 1970 கிராம் | 1018 கிராம் | 10.056 கி.கி | இல்லை | இல்லை | 1510 கிராம் | இல்லை | இல்லை | இல்லை | 24,000,000 | இல்லை | இல்லை | |
| கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய பொருட்களது பெறுமதி(ரூபா) | 1,387,479 | 308000 | 60,480 | 1,409,000 | 153,351 | ,476,000 | 0.00 | 3,142,450 | 712,130 | 228,273 | 388,375 | 59,750 | **9,325,288** |
| மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளது எண்ணிக்கை | 13 | 9 | 7 | 13 | 13 | 18 | 16 | 13 | 27 | 16 | 15 | 20 | **180** |
| கண்டுபிடிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களது எண்ணிக்கை | 3 | 122 | 1240 | 150 | 1889 | 26 | 11 | 33 | 19 | 15 | 21 | 68 | **3,597** |
| பறிமுதல் செய்யப்பட்ட சிகரெட்டுகளது எண்ணிக்கை | 35 | 144 | 310 | 280 | 0 | 55 | 63 | 89 | 1374 | 448 | 149 | 526 | **3,473** |
| கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய பொதிகளது எண்ணிக்கை | 50 | 18 | nil | nil | 0 | 0 | 2 | 13 | 0 | 3 | 13 | 24 | **123** |

# அரசிறை மற்றும் சேவைகள் (கட்டுநாயக்க) பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்கமானது கட்டுநாயக, பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தின் விமானச் சரக்குச் சாலையில் அமையப்பெற்றுள்ளது. இப்பணிப்பகமானது உரிய அரசிறையினை சேகரிப்பதற்கான பொறுப்பினை கொண்டுள்ளதுடன் சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் பிற தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழ் அமுல்படுத்தப்படும் எல்லைக் கட்டுப்பாட்டு ஒழுங்கவிதிகளை உறுதிப்படுத்தி விமானம் மூலம் இறக்குமதி செய்யப்படுகின்ற சரக்குகளை வெளியாக்க வசதியளிக்கின்றன.

இலங்கைச் சுங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் சேவைகளை வழங்கும் நோக்கில், ஸ்ரீலங்கன் விமான சேவைகள் (பிறை) லிமிடட் ஆனது விமானச் சரக்குத் தளத்தில் பாரியளவில் பொருட்களைக் கையாள்கின்ற முகவராக தொழிற்படுவதுடன் எஸ்.எல்.எப்.எப்.ஏ. கார்கோ சேவிசஸ் லிமிடட் மற்றும் எக்ஸ்போ ஏவியேசன் லிமிடட் என்பன சரக்குத் தளம்-11 இல் பிற பொருட்களைக் கையாள்கின்ற முகவர்களாகவும் சுயமாகக் கையாள்கின்ற சேவைகளை வழங்குபவர்களாகவும் செயற்படுகின்றனர். கூரியர் சரக்கினை மிக விரைவாக வெளியாக்கும் வகையில் எம்/எஸ் டீ.எச்.எல். (பிறை) லிமிடட் மற்றும் எம்/எஸ் கொழும்பு கார்கோ எக்ஸ்பிரஸ் (பிறை) லிமிடட் ஆகியவற்றில் செயற்படுத்தப்படுகின்ற பிணைப்படுத்தப்பட்ட களஞ்சிய சாலைகளில் முன்னுரிமை அடிப்படையில் கவனம் செலுத்தப்படுகின்றது.

பிரதான தொழிற்பாடுகள்

1. விமானம் மூலம் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் வரிகள் மற்றும் கட்டணங்களை மதிப்பிடலும் சேகரித்தலும்.
2. பொருள் பிரகடனங்களை செய்முறைப்படுத்தலும் வெளியாக்க அனுமதித்தலும்.
3. கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் பணிப்பகத்தின் கீழ் செயற்படுகின்ற பல்வேறு ஏற்றுமதி நோக்கிய வசதியளித்தல்கள் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை வெளியாக்கல் செய்வதற்கான அங்கீகாரத்தை வழங்கல்.
4. இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வியாபாரங்களுக்காக அனுப்பப்பட்ட இறக்குமதிப் பொருட்களை வெளியாக்குவதற்கான அங்கீகாரத்தை வழங்குதல்.
5. பழுதடையக்கூடிய பொருட்கள, கூரியர் சரக்கு, இராஜதந்திரிகளின் பொருட்கள் மற்றும் அஞ்சற் பொதி போன்றவை அடங்கலாக விமானம் மூலம் இறக்குமதி செய்யப்படும் அவசரப் பொருட்களை விரைவாக வெளியாக்கும் வகையில் முழு நேரமும் செயற்படல்.
6. திரும்பி வருகின்ற பயணிகளது அவர்கள் உடன் வராத பொதிகளை பல்வேறு பயணிகள் உடன் வராத பொதி இல்லங்களுக்கு மாற்ற வசதியளித்தல்.
7. முதலீட்டுச் சபை, முதலீட்டுச் சபை சாராத, கூரியர் மற்றும் பழுதடையக் கூடிய பொருட்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட இறக்குமதிச் சரக்குகள் சுங்கப் பிரகடனங்களைச் செய்முறைப்படுத்தலும் மற்றும் ஏற்றுமதக் கப்பல் ஏற்றுகைக்காக வெளியாக்கல் அனுமதியினை வழங்குதலும்.

செயலாற்றுகை – 2013 (இறக்குமதிகள்)

| தொடர் இல. | விபரம் | குறியீடு | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | இறக்குமதித் தீர்வை | CID | 1,658,791,901.00 |
| 2 | பெறுமதி சேர் வரி | VAT | 3,049,586,717.00 |
| 3 | துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு | PAL | 2,837,016,997.00 |
| 4 | சமூக பாதுகாப்பு அறவீடு | SRL | 50,001.00 |
| 5 | விசேட பண்ட அறவீடு | SCL | 332,609,167.00 |
| 6 | ஒன்றினைக்கப்பட்ட அறவீடு | CON | 29,431,011.00 |
| 7 | மேலதிக அறவீடு | CIS | |
| 8 | உற்பத்தி வரி | XDO | 2,149,829.00 |
| 9 | உற்பத்தி வரி (எரிபொருள்) | XDP | |
| 10 | தேசக் கட்டுமான வரி | NBT | 1,324,269,518.00 |
| 11 | இறக்குமதி செஸ் வரி | EIC | 583,578,183.00 |
| 12 | கணனிக் கட்டணம் | COM | 24,523,350.00 |
| 13 | பரிசோதனைக் கட்டணம் | EXM | 29,512,247.00 |
| 14 | மேலதிகக் கொடுப்பனவு | OVP | 1,035,371.00 |
| 15 | மேலதிக நேரக் கட்டணங்கள் | OTC | 59,631,749.00 |
| 16 | முத்திரை பொறியிடல்(சீல்) கட்டணம் | SEL | 661,350.00 |
| 17 | அபராதம் | PTY | 43,530,204.00 |
| 18 | சரிபார்த்தல் கட்டணம் | VCS | 6,481,743.60 |
| 19 | நானாவிதங்கள் | MISC | 641,770.00 |
| 20 | விசெட சேமிப்புகள் | SPD | |
| 21 | ஏனையவை ( திருத்தப்பட்ட பதிவு தொடர்பிலான அபராதம்) | AMD | 106,246.00 |
| | மொத்தம் | | 9,983,607,354.60 |
| 22 | பெறப்பட்ட சுங்கப் பிரகடனங்கள் | | 80,141 |
| 23 | தீர்வை மற்றும் பிற அறவீடு செலுத்தப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை | | |
| 24 | பிணையிடல், இன்பக் மற்றும் ஏற்றுமதி நோக்கிலான தற்காலிக இறக்கமதி போன்றவை தொடர்பில் அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை | | 2,719 |
| 25 | முதலீட்டுச் சபையில் அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை | | 104,116 |
| | என்றபோட்டில் அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை | | 126 |
| 26 | ஏஸ்.ஆர் விண்ணப்பங்களது எண்ணிக்கை | | 364 |
| 27 | ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை | | 153 |
| | விலக்களிப்பு 19அ இன் கீழ் அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை | | 1,205 |
| 28 | இறக்கி ஏற்றலின் கீழ் அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்களது எண்ணிக்கை | | 3,430 |
| 29 | வெளிநாட்டு ராஜதந்திரிகளது பொருட்களது எண்ணிக்கை | | 444 |
| 30 | கானே திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை | | 71 |
| 31 | வங்கி உத்தரவாதத்தின் கீழ் (விமானச் சரக்கு சாலை, டி.எச்.எல், சிசி)அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை | | 117 |
| 32 | ISAFTA/SAFTA இன் கீழ் அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை | | 212 |
| 33 | தனிப்பட்ட உத்தரவாதத்தின் கீழ் (விமானச் சரக்கு சாலை, டி.எச்.எல், சிசி) அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை | | 278 |
| | மொத்தம் | | 193,376 |

2013ஆம் வருட அரசிறை இலக்குகளது சாரம்சம்

| | |
|---|---|
| இவ் வருடத்திற்கான அரசிறை இலக்கு (ரூபா மில்) | 11,491 |
| இவ் வருடத்தில் ஈட்டப்பபட்ட உண்மையான அரசிறை (ரூபா மில்) | 9,984 |
| ஈட்டப்பட்ட இலக்கு ï விகிதத்தில் | 86.89% |
| இவ் வருடத்தில் ஈட்டப்பபட்ட உண்மையான அரசிறை (ரூபா மில்) | 9,984 |
| 2012 ஆம் வருடத்தில் ஈட்டப்பபட்ட உண்மையான அரசிறை (ரூபா மில்) | 9,389 |
| இவ் வருடத்தில் அதிகரித்த அரசிறை - விகிதத்தில் | 6.34% |

# கூட்டுறவுக் கொத்தணி

# கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பணிப்பகம்

அறிமுகம்

கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பணிப்பகமானது, பிரதானமாக கொள்கை, இறுப்புப் பட்டியல் தொடர்பான விடயங்கள் மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்புடையதாகவுள்ளது. இதன் விரிவான இலக்குகளும் குறிக்கோள்களும் பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடப்படலாம்.

01. திணைக்களக் கொள்கைகளை வகுப்பதில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு உதவியாகவிருப்பதோடு அத்தகைய கொள்கையினை உரிய பணிப்பகங்களால் அமுல்படுத்தப்படுவதற்கான நடைமுறைக்கு மாற்றுவதற்கு உதவுதல், மேலும் அத்தகைய தீர்மானங்களை அறிந்து கொள்ளவும் அவற்றின் இணக்கப்பாட்டிற்கும் அலுவலர்களுக்கு அறிவித்தல்.

02. துறைசார் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் வேண்டுகின்ற போது,

   (i) பொருளாதார அபிவிருத்தி/ வியாபார கொள்கைகள், அத்துடன்

   (ii) அத்தகைய கொள்கைகளை இறுப்பு தொடர்பிலான நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு மாற்றுதல்

   போன்ற விடயங்களில் அவர்களுக்கு உதவியாகவிருத்தல்;

03. அமுல்படுத்தல் மற்றும் தகவல் தெரிவிப்பு நோக்கில் இறுப்பு நடவடிக்கைகளை அலுவலர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறிவித்தல்.

04. சகல இறுப்புகளுடன் தொடர்புபட்ட விசாரணைகளுக்கு சமூகமளித்து இறுப்புடன் தொடர்புபட்ட சர்ச்சைகளைத் தீர்த்து வைப்பதோடு, தேசிய சுங்க இறுப்புப் பட்டியலினை மிகவும் அண்மைய இற்றைப்படுத்தல் நிலையில் வைத்திருப்பதனை உறுதிப்படுத்தல்.

05. பொதுமக்களுக்களின் இணக்கப்பாட்டினை மேம்படுத்தவதற்காக அவர்களுக்குத் தேவையான தகவலினை திணைக்கள உதவி கருமபீடம் ஊடாக கிடைக்கச் செய்வதனை உறுதிப்படுத்தல்.

06. உலக சுங்க அமைப்பகம், அதனது பிராந்திய அலுவலகங்கள் மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகளிலும் (உலக வர்த்தக அமைப்பகம் மற்றும் MEAs க்கான செயலகங்கள்) மற்றும் இருபக்க, பல்பக்க வியாபார பேச்சுவார்த்தைகளிலும் இலங்கைச் சுங்கம் சார்பில் பிரதிநிதித்துவப்படுத்தல்.

07. திணைக்கள நோக்கெல்லையினை அடைவதற்காக, உலக சுங்க அமைப்பகத்தின் சிபாரிசுகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை தனது கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கேற்ப அமைத்துக் கொள்ளல்.

பிரதான தொழிற்பாடுகள்

1. திறைசேரியினால் முறைப்படுத்தி வெளியிடப்பட்ட இறுப்புக் கொள்கைத் தீர்மானங்களை திணைக்களக் கட்டளைகள் ஊடாக அமுல்படுத்தல்.
2. சுங்கக் கொள்கைத் தீர்மானங்களை திணைக்களக் கட்டளை ஊடாக முறைப்படுத்தலும் அமுல்படுத்தலும்
3. இறக்குமதி இறுப்பு வழிகாட்டியினை இற்றைப்படுத்தலும் பராமரித்தலும்
4. அலுவலர் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி தேசிய இறக்குமதி இறுப்பு வழிகாட்டியினை புத்தக வடிவிலும் இறுவெட்டு வடிவிலும் வெளியிடுதல்.
5. இயைபு முறைமையிலான தேசிய உப பிரிவுகளை உருவாக்குதல் மற்றும் இறுப்புக் கொள்கை முறைப்படுத்தலில் தேவை எழும்போது திறைசேரிக்கு உதவுதல்.
6. திணைக்களத்தின் வருடாந்த செயற்திட்டத்தினைத் தயாரித்தல்.
7. திணைக்களத்தின் பணிப்பகங்களது முன்னேற்ற மீளாய்வு மூலம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினைத் தயாரித்தல்.
8. உலக சுங்க அமைப்பகம், உலக சுங்க அமைப்பக ஆசிய ï பசுபிக் அலுவலகம், உலக வர்த்தக அமைப்பு, ஏனைய சர்வதேச அமைப்புகள் மற்றும் அதிகாரபூர்வ தொடர்பு மற்றும் தொடர்புபட்ட விடயங்களுக்கு சமூகமளிப்பதன் மூலமான நிறுவனங்கள் என்பவற்றுக்கு தொடர்புகொள்ளல் மையமாகச் செயற்படல்.
9. ஏனைய சுங்க நிர்வாகங்களுடன் சுங்க பரிபாலன சபை மற்றும் பரஸ்பர நிர்வாக உதவி உடன்படிக்கைகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட விடயங்களுக்குச் சமூகமளித்தல்.
10. முன்னுரிமை வியாபார உடன்படிக்கைகள் மற்றும் தீர்வையற்ற வியாபார உடன்படிக்கைகள் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட விடயங்களுக்குச் சமூகமளித்தல்.
11. பொருள் வகைப்படுத்தல் குழு, வியாபார இலகுபடுத்தல் குழு மற்றும் இடர் முகாமைக் குழு ஆகியவற்றினது காரியதரிசி தொழிற்பாடுகளில் பங்கேற்றல்.
12. இறுப்பு, வியாபார மற்றும் வெளியாக்கல் நடைமுறைகள் போன்றவற்றுடன் தொடர்புபட்ட விடயங்கள் மீது ஆராய்ச்சியினை மேற்கொள்ளல்.
13. நடைமுறைக் கையேட்டினைத் தயாரித்தலும் அதனை இற்றைப்படுத்தலும்.
14. நாணய மாற்று விகிதங்கள் அறிவித்தலை தயாரித்து வெளியிடல்
15. பொது மக்கள் தொடர்பு மற்றும் சுங்க தகவல் நிலையம் தொடர்பில் கவனித்தல்.
16. வருடாந்தம் உலக சுங்க தின விழாவினை ஏற்பாடு செய்தல்.

சுங்க இறுப்புப் பட்டியல்

இலங்கை சுங்கமானது சர்வதேச வர்த்தகம் தொடர்பில் விதிக்கப்பட்ட சகல வரிகளையும் சேகரிப்பதற்கான பொறுப்புகளைக் கொண்டுள்ளது. 2013 ஆம் ஆண்டுப் பகுதியில் சுங்கத் திணைக்களமானது இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் தொடர்பில் இறக்குமதித் தீர்வை மற்றும் ஏற்றுமதித் தீர்வை, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி, இறக்குமதி செஸ் வரி, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவிடு, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு, பெறுமதி சேர் வரி, தேசக் கட்டுமான வரி, சமூகப் பொறுப்பு அறவீடு போன்றவற்றினை அறவிட்டுள்ளது. ஏற்றுமதித் தீர்வை மற்றும் ஏற்றுமதி செஸ் வரி என்பவை ஏற்றுமதி செய்யப்படும் ஒரு சில பொருட்கள் தொடர்பில் செலுத்தப்படுகின்றது. இது தவிர, விசேட வியாபாரப் பண்ட அறவீடானது ஒரு சில தெரிவு செய்யப்பட்ட அத்தியாவசிய நுகர்வுப் பண்டங்கள் மீது குறித்த காலத்தில் செலுத்த வேண்டியதாகும். இப் பல்வேறு வகை வரிகளின் விளைவாக, சுங்க இறுப்புப் பட்டியலில் விபரிக்கப்பட்ட ஒவ்வொரு பண்டமும் வித்தியாசமான வரிகளைக் கொண்டுள்ளன. ஆகையால் சுங்க இறுப்பானது ஒரு சிக்கலான ஆவணமாகவுள்ளது. மேலும், இருபக்க அல்லது பல்பக்க வர்த்தக ஒப்பந்த நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற ஒருசில தெரிவு செய்யப்பட்ட பண்டங்கள், பிரயோகிக்கத்தகு முன்னுரிமை தீர்வை வீதங்களைக் கொண்டுள்ளன. இம் முன்னுரிமை வீதங்களும் இறுப்புப் பட்டியலில் சிக்கல் தன்மைகளை அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளன. மேலும் பொதுவான இத்தீர்வை வீதமானது, விகிதமாகவும் குறிப்பிடத்தக்க இரு மடங்கு தொகையாகவும் உள்ள போதிலும் சிக்கல் நிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக, சகல வருமானங்களுக்கும் பண்டங்களுக்கும் விதிக்கத்தகு சகல வீதங்களையும் நினைவில் வைப்பது பொது மக்களுக்கும் அதேபோல் அலுவலர்களுக்கும் மிகவும் கடினமானதாகும். எனவே கடந்த தசாப்தத்தில் சுங்கத் திணைக்களமானது வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் உடனடியாக, பண்டங்கள் மீதான சகல வரி வகைகளையும் மற்றும் வரி வீதங்களையும் ஒரு கையேட்டில் ஒன்றுசேர்த்து வருடாந்த இறுப்புக் கையேட்டில் வெளியிட்டிருந்தது. வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் தாமதமின்றி இறுப்புக் கையேட்டினை தொகுத்தல் மற்றும் வெளியிடுதல் என்பன இப் பணிப்பகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பாரியதொரு பணியாகும்.

திணைக்கள சுற்று நிருபங்கள்

ஒரு கொள்கை தீர்மானம் மற்றும் விரிவுபடுத்தல் நடைமுறைகளில் நேரிடுகின்ற மாற்றங்களை அறிவிப்பதற்கு அல்லது புதிய நடைமுறைகளை அல்லது திணைக்களத் தொழிற்பாடுகளுடன் அடங்கிய கையேட்டு நடைமுறையிலுள்ள மாற்றங்களை அறிவிப்பதற்கான தேவை எழும் போது திணைக்களக் கட்டளைகள் அடிக்கடி விநியோகிக்கப்படுகின்றது. இதன் விளைவாக, திணைக்கள கட்டளைகளானது ஒரு பிரதான அலுவலகச் செய்தி மூலமாகவிருக்கின்றது. கொள்கை கருதுகோள்கள் உரிய பணிப்பகங்களால் வரையப்பட்டு, அவ் உள்ளடக்கத்தின் நடைமுறை மற்றும் சுற்றுநிருபங்களிலான விரிவாக்கலுடனான முரண்பாடுகளை இல்லாமல் செய்தல், மற்றும் இறுதியாக சுற்றுநிருபங்களைத் தயாரித்தல் மற்றும் அதனை அலுவலக மாதிரிக்கு உட்படுத்தல் போன்றவற்றுக்காக இப் பணிப்பகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதன் பின்னர் சுங்கப் பணிப்பாளரின் அங்கீகாரத்தினைப் பெற்று இப்பணிப்பகத்தினால் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது. வெளியிடுதல் அடங்கலாக சகல செயன்முறைகளும் நீண்ட நேரமெடுக்கின்றதும் சோர்வடையச் செய்கின்றதுமான செயற்பாடாகவுள்ளன. ஆனால் இப் பணிப்பகமானது, முக்கியமான மற்றும் அவசரமான விடயங்களை அலுவலர்களுக்கு முதன் முதலில் தெரியப்படுத்துவதன் காரணமாக இப் பணிப்பகமானது எவ்வித தாமதமுமின்றி சுற்றுநிருபங்களை விநியோகிப்பதற்கு பாடுபடுகின்றது.

வரி விதிப்பில் அத்தியாவசியப் பகுதியாக செயற்படும் அரசிறைக் காப்புக் கட்டளையானது பிறிதொரு வகை சுற்றுநிருபமாகும். வரிகள் மற்றும் தீர்வைகளில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களை, அவை அமுலாகும் திகதி மற்றும் நேரத்திலிருந்து புதிய விகிதத்தில் வரி மற்றும் தீர்வைகளை அறவிடுவதற்காக அதிகாரிகளுக்கு முன்னதாகவே அறிவிக்கும் நோக்கில் இயலுமானளவு குறுகிய காலத்திற்குள் (பொதுவாக அதே கடமை நாளில்) தயாரிக்கவும் அச்சிடவும் மற்றும் வெளியிடப்படவுமுள்ளன. பொதுத் திறைசேரியினால் மேற்கொள்ளப்படுகின்ற இம்மாற்றங்களும், மேலும் இச்சுற்றுநிருபங்களும் வரி விதிப்பில் முக்கிய பங்களிப்பினைச் செலுத்துகின்றன.

நாணய மாற்று விகித சுற்றுநிருபங்கள்

பெரும்பாலும் சகல இறகுமதிகளது பெறுமதியானது வெளிநாட்டு நாணயங்களில் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதுடன், அப் பெறுமதியானது சுங்கத்தினால் இலங்கை ரூபாவின் பெறுமதிக்கு மாற்றுவதன் மூலம் கையாளப்படுகிறது. வங்கிகள் மற்றும் நாணய மாற்று நிலையங்களில் நாளுக்கு நாள் மாறுகின்ற நாணய மாற்று விகிதங்களைப் போலல்லாது, சுங்கத் திணைக்களம் வேலை புரியும் ஒரு வாரத்திற்கு விதிக்கத்தகு வாராந்த சம மதிப்பு விகிதங்கள் மூலம் விதிக்கின்றது. மத்திய வங்கியினால் வாராந்தம் வெளியிடப்படும் நாணயமாற்று விகிதமானது ஒவ்வொரு வாரத்தின் இறுதித் தினம் வரை அமுலில் இருப்பதுடன் புதிய விகிதமானது மறுநாள் திங்கட்கிழமையில் இருந்து அமுலுக்கு வரும். மேலும் இவை இப் பிரிவினால் சுற்று நிருபமாக வெளியிடப்படுவதோடு, இச்சுற்றுநிருபமானது சகல அதிகாரிகளுக்கும் மற்றும் வரி விதிக்கப்படுகின்ற வர்த்தகர்களுக்கும் மிகவும் அத்தியவசிய வழிகாட்டியாகும்.

சர்வதேச விவகாரங்கள்

கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பணிப்பகமானது சுங்கத்துடன் தொடர்புபட்ட வெளிநாட்டு விவகாரங்களுக்கு பொறுப்பாகவுள்ளது. உலக சுங்க அமைப்பகத்திற்கும் ஆசிய, பசுபிக் பிராந்திய அலுவலகத்திற்கும் இடையில் தொடர்பினைப் பேணுவதே வெளிநாட்டு விவகாரங்கள் வகையினுள் உள்ளடங்கும் பிரதானமானதொரு தொழிற்பாடாகும். உலக சுங்க அமைப்பகத்தினால் அடிக்கடி அதிகார பூர்வமான அறிவிப்பு / அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படுவதுடன், அவைகளுக்குப் பொருத்தமான பதில்களையும் பணிப்பகம் வழங்கியுமுள்ளது. இலங்கைச் சுங்கத்தினால் வகைப்படுத்தல் சர்ச்சைகளை தீர்க்க முடியாத பட்சத்தில், அத்தகைய சர்ச்சைகளை உலக சுங்க அமைப்பகத்திற்கு ஆற்றுப்படுத்துகிறது. இயைபுமுறைப்படுத்தப்பட்ட பொருட் குறியீட்டிலான மாற்றங்களானது உலக சுங்க அமைப்பகத்தினால் அறிவிக்கப்படுவதுடன், அவற்றை பணிப்பகம் ஏற்றுக் கொள்கின்றது.

இது தவிர, பிராந்திய இருபக்க மற்றும் பல்பக்க வியாபார ஒப்பந்தங்களின் எல்லையினுள் எழுகின்ற சுங்க பரஸ்பர ஒருங்கிணைப்பினைக் கையாளுவதற்கான பொறுப்புகளை இப் பணிப்பகம் கொண்டுள்ளது. தற்போது, இலங்கையுடன் இருபக்க வியாபார தோழனாக முதலில் இருப்பது இந்தியாவாகும். இரண்டாவதாக பாகிஸ்தான் இடம்பிடித்துள்ளது. இந்தியா - இலங்கை பல் பக்க சுங்க பரஸ்பர உதவிச் செய்பாடுகளானது தற்போது ஒரு சிறந்த ஸ்தாபிப்புத் திட்டத்திற்குள் வளர்ச்சியடைந்துள்ளதுடன், பாகிஸ்தான் சுங்கத்துடனான புரிந்துணர்வு ஒருங்கிணைப்புகளை வளர்ப்பதற்கான ஒருங்கிணைப்புப் பொறிமுறையானது தற்போது உருவெடுக்க ஆரம்பித்துள்ளது. பாகிஸ்தானுடனான இருபக்க ஒருங்கிணைப்புகளை அனுசரித்து பேணுவதற்கான 10 ஆவது தொழில் நுட்பக் குழுக் கூட்டமானது 2010 ஆகஸ்டில் இஸ்லாமாபாத்தில் சிறப்பாக நடைபெற்று முடிந்தது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுடனான இரண்டு இருபக்க ஒப்பந்தங்களிற்கு மேலதிகமாக ஈரான், ஈராக், வியட்நாம், மெக்ஸிக்கோ போன்ற நாடுகளுடன் சுங்க ஒருங்கிணைப்பு பொறிமுறைகளை ஸ்தாபிப்பதற்கான சாத்தியப்பாட்டினை இலங்கை கொண்டுள்ளது.

## சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகள்

| | |
|---|---|
| SAARC | சார்க் பிராந்திய புகையிரதவழி உடன்படிக்கை மற்றும் மோட்டார் வாகன உடன்படிக்கை |
| SAFTA | தெற்காசிய சுதந்திர வர்தத்க உடன்படிக்கை |
| SAPTA | தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை |

## திணைக்கள தொழில் நுட்பக் குழுக்கள்

கொள்கைத் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பணிப்பகமானது பின்வரும் இரண்டு பிரதான தொழில்நுட்பக் குழுக்களுக்கு செயலக மற்றும் விநியோக உதவிகளை வழங்கியுள்ளது.

(1) சுங்க பொருள் குறியீடு மற்றும் வகைப்படுத்தல்கள் குழு, மற்றும்
(2) வியாபார வசதியாக்கல் குழு

ஓவ்வொரு செவ்வாய்க் கிழமையும் ஒன்றுகூடுகின்ற பொருள் வகைப்படுத்தல் குழுவானது சகல பொருள் வகைப்படுத்தல் பிரச்சினைகள் மற்றும் சர்ச்சைகளை நிர்வாகிக்கின்ற அதேவேளை, 2013ஆம் ஆண்டில் அத்தகைய வகைப்படுத்தல் அமர்வுகளது எண்ணிக்கை 33 ஆகும்.

## திட்டமிடல் செயற்பாடுகள்

இவ் வகைக்குள் இரு பிரதான தொழிற்பாடுகள் உள்ளடங்குகின்றன. அவை வருடாந்த செயல் திட்டத்தினை மீளாய்வு செய்தல் மற்றும் அடுத்துவரும் வருடத்திற்கான செயல் திட்டத்தினை தீர்மானித்தல் என்பனவாகும். மேலும் திணைக்களத்தின் பிரதான பூர்வாங்க வேலைகளின் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தலும், வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளை தயாரித்தலும் மற்றுமொரு பொறுப்பாகும்.
இப்பணிப்பகத்தின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றான, பிற தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் மேற்கொள்ளப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பிலான சகல விடயங்களும் இப் பணிப்பகத்தினால் கையளிக்கப்படுகின்றன (உதாரமாக ஏனைய நாடுகளின் சுங்க அமைப்பகங்கள்)

## ஆராய்ச்சி செயற்பாடுகள்

இப் பணிப்பகமானது, பிற பணிப்பகங்களின் மாதாந்த செயலாற்றுகை அறிக்கைகளை சேகரிப்பதுடன் நிர்வாகத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றதுடன் இப்பணிப்பகத்தினால் புரியப்படுகின்ற பிரதானமானதொரு விடயம் அரசிறை பகுப்பாய்வு செய்வதுமாகும்.

## 2013 ஆம் ஆண்டில் செயலாற்றுகை

இப்பணிப்பகமானது 2013ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வெளிநாட்டு நாணயமாற்று வீதங்கள் தொடர்பிலான 52 சுற்று நிருபங்களையும் மற்றும் 85 திணைக்களக் கட்டளைகளையும் வினியோகித்துள்ளது.

2013ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட திணைக்களக் கட்டளைகள் பின்வருமாறு :

- பெறுமதி சேர் வரி திருத்தங்கள் - 04
- உற்பத்தி வரித் திருத்தங்கள் - 06
- துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டு திருத்தங்கள் - 01
- விசேட பண்ட அறிவீட்டு திருத்தங்கள் - 09
- செஸ் அறவீட்டுத் திருத்தங்கள் - 07
- அரசிறைக் காப்புக் கட்டளை - 03
- தேச கட்டுமான வரி திருத்தங்கள் - 01

2013 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் விநியோகிக்கப்பட்ட திணைக்களக் கட்டளைகள்

| திணைக்களக் கட்டளை இல | திகதி | தொடர்புபட்டவை | விடயம் |
|---|---|---|---|
| 841 | 01.01.2013 | பொது | சுங்கத்தின் தரத்தினை விருத்தி செய்தல் |
| 842 | 10.01.2013 | இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் | HCFCs மற்றும் குளிரூட்டிகளது கலப்புகளை கொண்ட HCFCs என்பவற்றினை இறக்கமதி செய்வதற்கான வரடாந்த கொட்டா முறை ஒன்றினை அமுல்படுத்தல் |
| 843 | 16.01.2013 | வசதிகளை இடைநிறுத்தல் | சுங்க வசதிகளை இடைநிறுத்தல் |
| 844 | 09.01.2013 | சமூக பாதுகாப்பு | சுங்கத் திணைக்கள ஊடக பேச்சாளர் |
| 845 | 22.01.2013 | செஸ் வரி | இறக்குமதிகள் மீதான ஏற்றுமதி அபிவிருத்திச் சபை செஸ் வரி |
| 846 | 22.01.2013 | செஸ் வரி | இறக்குமதிகள் மீதான ஏற்றுமதி அபிவிருத்திச் சபை செஸ் வரி |
| 847 | 30.01.2013 | உற்பத்தி வரி | விமான நிலைய பயணிகள் போக்குவரத்துகளது மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி வரி |
| 848 | 08.02.2013 | பெ.சே.வரி | இலங்கையில் தயாரிக்கப்பட்ட மருந்துகளை பொதி செய்தல் தொடர்பிலான பெறுமதி சேர் வரிகளது விலக்களிப்பு |
| 849 | 12.02.2013 | சமூக பாதுகாப்பு வரி | சமூக பாதுகாப்பு வரி திருத்தம் |
| 850 | 14.02.2013 | நாணயம் | இலங்கை நாணயங்களது ஏற்றுமதி மற்றும் இறக்குமதி |
| 852 | 20.02.2013 | மாதிரிகள் | ஏற்றுமதி வியாபார மாதிரிகளது பெறுமதி வரையறைகளை அதிகரித்தல் |
| 853 | 01.03.2013 | எதனோல் | எதனோல் இறக்குமதிகளை தடைசெய்தல் |
| 854 | 01.03.2013 | பெறுமதி மதிப்பிடல் | மோட்டார் வாகனம் மீதான பெறுமதி மதிப்பிடல் உப குழு |
| 855 | 01.03.2013 | மேலதிக நேரம் | மேலதிக நேர குழு முடிவு |
| 856 | 06.03.2013 | விசேட செயலணி | விசேட செயலணி மற்றும் கண்காணிப்புப் பணிப்பகம், விசேட செயலணியாக மீள்பெயரிடல் |
| 857 | 21.03.2013 | ஆகக்கூடிய சில்லறை விலை | ஆகக் கூடிய சில்லறை விலைக்கான சேவை வழங்குனர் ஒருவராக, டிசிகினேடட் குளேபல் ட்றான்ஸ்போட்டேசன் பிறைவட் லிமிடட். |
| 858 | 08.04.2013 | உற்பத்தி வரி | ஈதைல் அல்ககோல் மீதான உற்பத்தி வரி விதித்தல் |
| 859 | 18.04.2013 | இறக்குமதிகள் | மோட்டார் வாகன இறக்குமதிகளை இலகுபடுத்தல், சுங்க விசாரணைக்கிணங்க |
| 860 | 07.05.2013 | சமூக பாதுகாப்பு வரி | சமூக பாதுகாப்பு வரி திருத்தம் - உருளைக்கிழங்கு |
| 861 | 08.05.2013 | மத்திய புலனாய்வுப் பணிப்பகம் | சுங்க புலனாய்வு மற்றும் விசாரணை |
| 862 | 09.05.2013 | பயணிகள் உடன்வராத பொதிகளடங்கிய குத இல்லம் | கொழும்பு காகோ எக்ஸ்பிறஸ் ஊடாக பயணிகள் உடன்வராத பொதிகளை வெளியாக்கல் |
| 863 | 07.06.2013 | சமூக பாதுகாப்பு வரி | சமூக பாதுகாப்பு வரி திருத்தம் |
| 864 | 21.06.2013 | இறக்குமதிகள் | கப்பலேற்றலுக்கு முன்னரான சான்றிதழ் - மோட்டார் வாகனம் |
| 865 | 21.06.2013 | தங்கம் | தங்கம் மீதான சுங்கத் தீர்வையினை விதித்தல் |
| 866 | 21.06.2013 | தங்கம் | தங்கம் மீதான மேலதிகக் கட்டணம் |
| 867 | 11.07.2013 | சமூக பாதுகாப்பு வரி | சமூக பாதுகாப்பு வரி ï பெரிய வெங்காயம் |
| 868 | 31.07.2013 | சமூக பாதுகாப்பு வரி | கறுவா ஏற்றுமதிகளுக்கான தரநிர்ணய மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் |
| 869 | 31.07.2013 | இரத்தினக்கல் | விசேட திட்டத்தின் கீழ் வெளிச் செல்லும் பயணிகளாலான இரத்தினக்கற்களது ஏற்றுமதி |
| 870 | 31.07.2013 | உற்பத்தி வரி | உற்பத்தி வரித் திருத்தம் மற்றும் 02/2013ஆம் இலக்க அரசிறை காப்புக் கட்டளை |
| 871 | 31.07.2013 | உற்பத்தி வரி | ஈதைல் அல்ககோல் மீதான உற்பத்தி வரி திருத்தம் |

| | | | |
|---|---|---|---|
| 872 | 02.08.2013 | சமூக பாதுகாப்பு வரி | சமூக பாதுகாப்பு வரி ï சீனி |
| 873 | 02.08.2013 | இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் | போக்குடனான அல்லது பொக்குடன் அல்லாத மோட்டார் வாகன பிறேம்கள் |
| 874 | 05.08.2013 | மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் | 01/2010 ஆம் இலக்க மோட்டார் வாகன அனுமதிப்பத்திர சுற்றுநிருபத்துக்கான திருத்தம் |
| 875 | 08.08.2013 | பால்மாவு | டி.சி.டி உடனான பாலில் அசுத்தத்தன்மை |
| 876 | 13.08.2013 | பொதுவானவை | நிதிச் சட்டம் - 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வர்த்தக சக்கர ஒழுங்கு விதிச் சட்டம் |
| 877 | 19.08.2013 | இறக்குமதிகள் | உணவு கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் - போத்தலில் அடைக்கப்பட்ட அருந்தும் பானம் |
| 878 | 19.08.2013 | பால்மாவு | டி.சி.டி உடன் அசுத்தமாக்கப்பட்ட பால் பவுடர்கள் தொடர்பிலான இறக்குதமி பரிசோதனைத் திட்டம் |
| 879 | 23.08.2013 | சமூக பாதுகாப்பு வரி | உருளைக் கிழங்கு மற்றும் வெங்காயம் தொடர்பிலான சமூக பாதுகாப்பு அறவீட்டுத் திருத்தம் |
| 880 | 27.08.2013 | சி.டி.டி.எ | மருந்துகளை பதிவுசெய்தல் தொடர்பிலான சான்றிதழினை ரத்துச் செய்தல் |
| 878A | 27.08.2013 | பால்மாவு | டி.சி.டி உடன் அசுத்தமாக்கப்பட்ட பால் பவுடர்கள் தொடர்பிலான இறக்குதமி பரிசோதனைத் திட்டம் |
| 881 | 11.09.2013 | CSD's | கொள்கலன் பாதுகாப்பு உபகரணங்களை அனுமதித்தல் |
| 880A | 16.09.2013 | மேலதிகமானவை | 880ஆம் இலக்க திணைக்களக் கட்டளை மீதான திருத்தம் |
| 854C | 25.09.2013 | | மோட்டார் வாகன பெறுமதி உப குழு |
| 882 | 25.09.2013 | செஸ் வரி | இயைபு முறைத் தலைப்பு 25.05 மிதான ஏற்றுமதி செஸ் வரி |
| 883 | 26.09.2013 | பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு பணிப்பகம் | இணக்கப்பாடு மற்றும் வசதியளிதத்ல் பணிப்பகம் |
| 884 | 09.10.2013 | மருந்தாக்கங்கள் | நிகோபோல்ட் என்பவற்றின் சுங்க வெளியாக்கல் |
| 885 | 23.10.2013 | தகவல், தொழில் நுட்ப மற்றும் தொடர்பால் நிதியம் | மேலதிக நேரம்é தகவல், தொழில் நுட்ப மற்றும் தொடர்பால் நிதியம் என்பவற்றுக்கான திருத்தங்கள் |
| 886 | 29.10.2013 | சுங்க வசதிகளை இடைநிறுத்தல் | ரணதுங்க மோட்டர்ஸ் நிறுவனத்தின் மீதான சுங்க வசதிகளை இடைநிறுத்தல் |
| 869A | 12.11.2013 | பொதி | வதிவற்ற பயணிகள் வெளிச்செல்லும் போதான இரத்தினக்கற்களது ஏற்றுமதி |
| 887 | 19.11.2013 | சமூக பாதுகாப்பு வரி | உருளைக் கிழங்கு மற்றும் வெங்காயம் தொடர்பிலான சமூக பாதுகாப்பு அறவீட்டுத் திருத்தம் |
| 866A | 21.11.2013 | | தங்கத்தின் மீதான மேலதிகக் கட்டணத்தினை அகற்றல் |
| 888 | 21.11.2013 | சமூக பாதுகாப்பு வரி | சமூக பாதுகாப்பு வரி திருத்தம் |
| 889 | 21.11.2013 | மோட்டார் வாகனம் - பாதீடு 2014 | பாவித்த மோட்டார் வாகனங்களுக்கான பெறுமானத் தேய்வு அட்டவணை |
| 890 | 21.11.2013 | அரசிறைக் காப்புக் கட்டளை ï பாதீடு 2014 | 03/2013 ஆம் இலக்க அரசிறைக் காப்புக் கட்டளை |
| 891 | 21.11.2013 | உற்பத்தி வரி ï பாதீடு 2014 | உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) |
| 892 | 21.11.2013 | செஸ் வரி ï பாதீடு 2014 | இறக்குமதிகள் தொடர்பிலான செஸ் வரி விகிதங்கள் |
| 893 | 21.11.2013 | செஸ் வரி (எற்றுமதி) ï பாதீடு 2014 | ஏற்றுமதி தொடர்பிலான செஸ் வரி விகிதங்கள் |
| 894 | 23.11.2013 | துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு ï பாதீடு 2014 | ஏற்றுமதி தொடர்பிலான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு |
| 890A | 27.11.2013 | மேலதிகமானவை | 03/2013ஆம் இலக்க அரசிறைக் காப்புக் கட்டளைக்கான திருத்தம் |
| 892A | 27.11.2013 | மேலதிகமானவை | செஸ் வரித் திருத்தம் - பாதீடு 2014 |

| | | | |
|---|---|---|---|
| 895 | 27.11.2013 | இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் | இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்தி தேவைப்பாடுகள் |
| 896 | 27.11.2013 | முந்திரிகை | விமான நிலையம் ஊடாக முந்திரிகைக் கொட்டையினது இறக்குமதி |
| 897 | 27.11.2013 | ப.ச.விமான நிலையம் | வெளிச் செல்லும் பயணிகளது தனிப்பட்ட ஆபரணம் |
| 898 | 06.12.2013 | வசதிகளை இடைநிறுத்தல் | ஹூஸ் இன்டசெஷனல் நிறுவனத்தின் சுங்க வசதியினை இடைநிறுத்தல் |
| 899 | 09.12.2013 | ப.ச.விமான நிலையம் | வெளிச் செல்லும் பயணிகளது தனிப்பட்ட ஆபரணம் (897 இல்லாதொழித்தல்) |
| 900 | 19.12.2013 | ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் | தளபாட மரங்களது விதைகள் மற்றும் பிற வன தயாரிப்புகளது ஏற்றுமதிக்கான அனுமதிகள் |
| 901 | 26.12.2013 | சக்தி தரும் பானம் | சக்தி தரும் பானங்களை வெளியாக்குவதற்கான தேவைப்பாடுகள் |
| 902 | 31.12.2013 | தே.க.அறவீடு ï பாதீடு 2014 | தே.க.அறவீட்டுக் கட்டணங்கள் ï பாதீடு 2014 |
| 903 | 31.12.2013 | பெ.சே. வரி ï பாதீடு 2014 | பெ.சே. வரி மாற்றங்கள் ï பாதீடு 2014 |
| 905 | 31.12.2013 | விமான சரக்கு | விமானச் சரக்கு இல்லத்திலான குத இல்ல செயற்பாடுகளை நிறுவுதல் |

புதிதாக திறக்கப்பட்ட திணைக்களக் கோவைகள்

| திகதி | இலக்கம் | விபரம் |
|---|---|---|
| 02.01.2013 | 713 | பொதுமக்களுக்கான அறிவித்தல் |
| 09.01.2013 | 714 | திரவ வெடி மருந்து தயாரிப்புக்கானதொரு தொழிற்சாலையினை நிறுவுதல் |
| 15.01.2013 | 715 | warnஇறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் வியாபாரிகள் ஆகியோருக்கான பத்திரிகை அறிவித்தல் |
| 31.01.2013 | 716 | ஆகக் கூடிய சில்லறை விலை அடிப்படையில் இறக்குமதியாளர்கள் செலுத்தும் செஸ் வரிக்கான ஒரு சேவை வழங்கனராக "குளோபல் பார்க்" பதிவு செய்வதற்கான வேண்டுகோள் படிவம் |
| 05.02.2013 | 717 | செயற்திறன் விருத்தித் திட்டம் |
| 19.02.2013 | 718 | இலங்கை மற்றும் கென்னியா ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான இருபக்க வர்த்தக உடன்படிக்கை |
| 19.02.2013 | 719 | 2013ஆம் ஆண்டுக்கான நாட்காட்டி செயற்பாடுகள். சார்க் சுங்க விடயங்கள் தொடர்பிலான மூன்றாவது பயிற்சித் திட்டம் |
| 28.03.2013 | 720 | வானொலி உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்தலுக்கான அனுமதிபப்த்திர தேவைப்பாடுகள் |
| 08.04.2013 | 566 B | சுங்க விடயங்களில் கூட்டிணைப்பு மற்றும் பரஸ்பர உதவி தொடர்பில் இந்தியா மற்றும் இலங்கை நாடுகயுளுக்கிடையிலான உடன்படிக்கை |
| 10.04.2013 | 721 | 2013.01.31 ஆம் இலக்க 1795/35ஆம் இலக்க அதி விசேட வர்தத்மானப் பத்திரிகை |
| 08.05.2013 | 722 | திணைக்கள நடைமுறைக் கையேடு |
| 04.06.2013 | 723 | கப்பலிலிருந்து வெளியிடப்படும் கழிவு எண்ணெய்களை அகற்றல் |
| 13.06.2013 | 724 | பாசல் பேரவையினை அமுல்படுத்தலுக்கான தேசிய கூட்டிணைப்பு குழு கூட்டம் |
| 14.08.2013 | 725 | உலக சுங்க அமைப்பகத்துடனான தொடர்பு |
| 11.09.2013 | 726 | கேகாலை பிளான்டேசன் பீஎல்சி(இறக்குமதி மீதான பெ.சே.வரி) |
| 23.10.2013 | 727 | உலக சுங்க அமைப்பக உயர்தர மின்சார சரக்கு தகவல் தேவைப்பாடுகளது அளவீடு |
| 25.10.213 | 728 | நீர் இணைப்புகள் மற்றும் உதிரிப்பாகங்கள் என்பவற்றினை அடையாளப்படுத்துவதற்காக இயைபு முறைக் குறியீடுகளுக்கான தேசிய உப தலைப்புகளை அறிமுகப்படுத்தல் |

இயைபுபடுத்தப்பட்ட முறைக் குழு, மீளமைக்கப்பட்ட உப குழு தொடர்பிலான உலக சுங்க அமைப்பக கூட்டங்கள்

சுங்கப் பணிப்பாளர் (கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பணிப்பகம்) மற்றும் பொருள் வகைப்படுத்தல் குழுவினது ஏனைய அங்கத்தவர்கள் 2013ஆம் ஆண்டின் மார்ச், ஜுன், செப்டம்பர், நொவம்பர் ஆகிய மாதங்களில் இடம்பெற்ற இயைபுபடுத்தப்பட்ட முறைக் குழு அமர்வில் பங்கேற்றனர். சுங்கப் பணிப்பாளர் (கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பணிப்பகம்) அவர்கள் இயைபுபடுத்தப்பட்ட முறைக் குழுவின் உப தவிசாளராகவும் மற்றும் மீளமைக்கப்பட்ட உப குழுவின் தவிசாளருமாக செயற்பட்டார்.

2013 ஆம் வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கும் வகையில் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்திற்கு முன்மொழியப்பட்ட சர்வதேச உப தலைப்புகள்

உரிய அத்தியாயங்களுக்கு தொடர்புபட்ட பின்வரும் பொருட்கள் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. திரவத்திலான சப்பாத்து மினுக்குகை பிரயோகம்
2. சில்லுவண்டி(வீல்பறோ) மற்றும் பாகங்கள்
3. ஹைபிறிட் டீசல் வாகனங்கள்
4. இளநீர்
5. அச்சிடப்பட்ட பொலிஈதைலின் உலோகத் தகடு

பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் அவர்களால் சமூகமளிக்கப்பட்ட கூட்டிணைப்பு கூட்டங்கள்

1. வர்த்தகத் திணைக்களம்
2. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
3. வெளிநாட்டு விவகாரகள் அமைச்சு
4. சுற்றாடல் அதிகார சபை
5. நிதி அமைச்சு, வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை, அரசிறைக் கொள்கை

நடைமுறைக் கையேட்டினை தயாரித்தல்

சகல பணிப்பகங்களினாலும் தற்போது செய்துகொண்டிருக்கும் பிறிதொரு தொழிற்பாடாக நடைமுறைக் கையேட்டினை தயாரித்தலாகும். இதுவரை பின்வரும் பணிப்பகங்களது நடைமுறைக் கையேடானது பூர்த்தியாகியுள்ளன.

1. சரக்குப் பரிசோதனைப் பணிப்பகம்
2. ஏற்றுமதிப் பணிப்பகம்
3. பெறுமதி மதிப்பிடல் பணிபப்கம்

இப்பணிப்பகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட நிகழ்சிகள்

1. சர்வதேச சுங்க தின கொண்டாட்டம்

திகதி -27.02.2013
இடம் - சுங்க தலைமைக் காரியாலயம்
விடயம் - சுங்க செயலாற்றுகைக்கான வழக்கத்தை மாற்றி புதுமையை புகுத்துதல்
பிரத அதிதி ï திறைசேரிச் செயலாளர் கலாநிதி.பீ.பி. ஜயசுந்தர

சுங்க கூட்டுறவு தொடர்பிலான 9ஆவது சார்க் உப குழு மற்றும் சுங்க விடயங்கள் தொடர்பிலான 3ஆவது பயிற்சித் திட்டங்கள்

திகதி ï 2013 ஜுன் 18 தொடக்கம் 21 வரை
இடம் - மவுன்ட் லெவினியா ஹோட்டல்
பங்கேற்ற நாடுகள் - சார்க் நாடுகள் மற்றும் ஆப்கானிஸ்தான்

3. "இயைபு முறைப்படுத்தப்பட்ட முறை 2012 மற்றும் திருத்தங்கள் " தொடர்பிலான பயிற்சித் திட்டங்கள்

திகதி - 2013 ஜுன் 18,19
இடம் - மவுன்ட் லெவினியா ஹோட்டல்
வளவாளர் - திரு. ஆர்.பீ.டி.ரி. செனவிரத்ன

# தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பணிப்பகம்

அறிமுகம்

இப் பணிப்பகத்தின் குறிக்கோள் யாதெனில், தொழில்நுட்பம் மற்றும் சேவைகளை வழங்கல் மேலும் சுங்கப் பிரகடனச் செயலாக்கத்தை ஆணையிடுதலுடன் தொடர்பிலான வசதிகளை திணைக்களத்திற்கு வழங்குதல் மற்றும் இடையுறா இணையச் சேவையினை தொடர்ந்தும் வழங்கல் போன்றனவாகும். சுங்கப் பிரகடனச் செயலாக்கத்தின் தானியக்கமானது வினைத்திறன்மிக்க மற்றும் பயன்மிக்க சுங்க நிர்வாகம் ஒன்றுக்குத் தேவையான விரைவான, தரமிக்க மற்றும் நம்பகமான தகவல் முறைமைகளை உறுதிப்படுத்துகின்றது. இப்பணிப்பகமானது அனைத்து சுங்கப் பிரகடனங்களையும் துணை ஆவணங்களையும் இலத்திரனியல் முறையில் சமர்ப்பிப்பதனைப் பேணும் வகையிலான மேலும் புதிய வினைத்திறன்மிக்க அம்சங்களையும் கணினி அடிப்படையிலான பழுது காப்பு முறைமைகளையும் நிறுவிவருகின்றது.

பிரதான தொழிற்பாடுகள்

1. தன்னியக்க முறையினை பயன்படுத்தி நிறுவன இலக்குகளை அடைதல்.
2. அசிகுடா அடங்கலாக சகல மென்பாக முறைமைகளது சீரான தொழில்பாட்டினை உறுதி செய்வதற்காக முறைமை வலைப்பின்னல், கணனிப் பாகங்கள் மற்றும் தரவு நிரல்களைத் திறம்படப் பராமரித்தல்.
3. சுங்க முகாமைத்துவம், பிற அரச முகவரகங்கள் மற்றும் ஆர்வமுடையவர்கள் ஆகியவர்களுக்கும் மற்றும் சுங்கத் திணைக்களத்தின் பிரிவுகள், பல்வேறு பிரிவுகளுக்கும் சரியான தகவல்களை உரிய வேளையில் வழங்குவதோடு அறிக்கைகளையும் சமர்ப்பித்தல்.
4. பூகோள முன்னேற்றங்களுடன் இணைந்து செல்லுவதற்கு ஏற்றவாறு அசிகுடா ++, சரக்குக் கட்டுப்பாட்டு முறைமை, தினீத் என்பன அடங்கலான தற்போதைய முறைமைகளை விரிவாக்குவதற்காக மதிப்பீடுகள் மற்றும் பயனளிக்கும் தரமுயர்த்தல்களை மேற்கொள்ளல்.
5. விரும்பிய செயற்பாட்டு இலக்குகளை எய்துவதற்காக தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர்களினது கணனித் திறமைகளையும் தொழில்சார் தரத்தையும் விரிவாக்கல்.
6. சுங்கத் திணைக்களத்தினது பல்வேறு பிரிவுகள் மற்றும் அலகுகளிலுள்ள அலுவலர்களுக்கு அடிப்படை தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் செயற்படுத்தல் தொடர்பான பயிற்சியினை விஸ்தரித்தல்.

செயலாற்றுகை - 2013

- நேரடி வியாபார உட்புகல் வசதி மூலம் தரகர்களுக்கு அசிகுடா வேல்ட் முறைமை வழங்கியமை
- தேயிலை ஏற்றுமதியார்களுக்கும் மற்றும் தேயிலைச் சபையினருக்குமான ஒருங்கிணைந்த தாள் வசதியினை வழங்கியமை
- சுங்க அலுவலகங்களுக்கு அசிகுடா வேல்ட் அமுல்படுத்தப்பட்டமை.
- சுங்க அலுவலகங்களுக்கு ஈ-கொடுப்பனவு வசதி அமுல்படுத்தப்பட்டமை.
- சுகல முதலீட்டுச் சபை அலுவலகங்களுக்கும் அசிகுடா வேல்ட் அமுல்படுத்தப்பட்டமை.
- நீள அறை அதேபோன்று பிணைகள் பிரிவு என்பவற்றிற்கு மின்னியல் மூலமான சரக்குப் பட்டியல் அமுல்படுத்தப்பட்டமை.

| இவ்வாண்டுக்காலப்பகுதியலான செயலாற்றுகை | | |
|---|---|---|
| | அசிகுடா ++ | அசிகுடா வேல்ட் |
| செய்முறைப்படுத்தப்பட்ட சுங்கப் பிரகடணங்களது எண்ணிக்கை | 147,472 | 1,058,589 |
| கையினால் | 103,403 | 112,821 |
| நேரடி வியாபார பரிவர்த்தனை மூலம் | 44,069 | 945,768 |
| | | |
| | | |
| இறக்குமதிகள் | | |
| மொத்த சுங்கப் பிரகடனம் | 124,886 | 508,100 |
| இறக்குமதி - பொதுவானவை (ஜஎம்4) | 78,975 | 264,277 |
| இறக்குமதி - மோட்டார் வாகனங்கள் | 0 | 6336 |
| இறக்குமதி - எளிதாக்குதல் திட்டம் (ஜஎம்5, ஜஎம்6, ஜஎம்7), | 57,916 | 225,601 |
| | | |
| ஏற்றுமதிகள் | | |
| இறக்குமதி - பொதுவானவை | 12,850 | 552,106 |
| | | |
| அறிக்கைகள் | | |
| உள்ளக (புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் சுங்கத்தின் பிற பிரிவுகள்) | 591 | |
| உள்ளகக் கணக்காய்வு | 180 | |
| வெளிநிலை (அரச திணைக்களங்கள்) | 561 | |
| வெளிநிலை (பொலீஸ், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் போன்ற அமுல்படுத்தல் பிரிவுகள்) | 752 | |
| வெளிநிலை (தனிப்பட்ட குழுக்கள்) | 160 | |
| வெப் வெளயீடுகளும் திருத்தங்களும் | | |
| | | |
| நாணய மாற்று வீதம் | 52 | |
| கேள்வு அறிவித்தல் | 38 | |
| இயைபு முறை திருத்தங்கள் | 68 | |
| வெளியீடுகள் | 20 | |
| இவ்வாண்டிலான கண்டுபிடிப்புகள் | | |
| இவ்வாண்டில் பதிவுசெய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 78 | |
| முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 52 | |
| குற்றங்கள் என நிரூபிக்கப்பட்ட மற்றும் அபராதம் விதிக்கப்பட்ட பறிமுதல்களது எண்ணிக்கை | 19 | |
| பறிமுதல்கள் தொடர்பில் சேகரிக்கப்பட்ட பறிமுதல்களது மொத்தத் தொகை(ரூ.) | 36,116,556 | |
| பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது மொத்தப் பெறுமதி(ரூ.) | 498,465 | |
| மேலதிக பதிவுகளாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை(ரூ.) | 235,661 | |
| அறவிடப்பட்ட விற்பனை வரும்படிகள் | - | |
| முடிவுறுத்தப்படாத விடயக் கோவைகளது மொத்த எண்ணிக்கை (2013ஆம் வருடம் மாத்திரம்) | 16 | |

# மத்திய பெறுமான மதிப்பிடல் பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்பகமானது சுங்க அரசிறையைப் பாதுகாக்கும் வகையில் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் அட்டவணை உ இன் கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் பெறுமதிகளைத் தீர்மானிப்பதுடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகளுக்கும் பொறுப்பாகவுள்ளது.

பிரதான தொழிற்பாடுகள்

01 சுங்க நோக்கங்களுக்கான பெறுமதிகளை தீர்மானித்தல்

02 பெறுமதி மதிப்பீட்டு தரவு நிரலைப் பராமரித்தல்.

03 சுங்க நோக்கங்களுக்கான பொருட்கள் தொடர்பில் உலக வர்த்தக அமைப்பின் பெறுமதி மதிப்பீட்டு உடன்படிக்கையினை அமுல்படுத்தல்

பெறுமதி மீளாய்வின் மூலமான மேலதிக அறவீடுகள்
ஜனவாரி – டிசம்பர் 2013

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | - 142 |
| முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | - 84 |
| அறவிடப்பட்ட அபராதங்கள் / பறிமுதல்கள் | - 496,706,508 |
| பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் | - இல்லை |
| மேலதிக பதிவுகளாக அறவிடப்பட்டவை | - 3,033,934,399 |
| விற்பனை வரும்படிகள் | - இல்லை |
| முடிவுறுத்தப்பட்டாத விடயக் கோவைகள் | - 103 |

மேலதிகப் பதிவு தொடர்பிலான அறவீடுகளும் அபராதங்களும்
(2013 ஜனவரி முதல் டிசம்பர் வரை)

| மாதம் | மேலதிகப் பதிவு | அபராதம் | மோத்தம் |
|---|---|---|---|
| ஜனவாரி | 88,349,166 | 26,400,000 | 114,749,166 |
| பெப்ரவி | 83,073,149 | 16,750,000 | 99,823,149 |
| மார்ச் | 54,449,123 | 7,350,000 | 61,799,123 |
| ஏப்ரல் | 86,986,255 | 28,856,498 | 115,842,753 |
| மே | 106,700,905 | 11,180,200 | 117,881,105 |
| ஜுன் | 102,043,682 | 19,350,000 | 121,393,682 |
| ஜுலை | 132,629,674 | 26,025,000 | 158,654,674 |
| ஓகஸ்ட் | 85,934,802 | 13,150,000 | 99,084,802 |
| செப்டம்பர் | 60,193,196 | 11,669,780 | 71,862,976 |
| ஓக்டோபர் | 79,584,685 | 9,210,000 | 88,794,685 |
| நொவம்பர் | 108,686,473 | 11,810,000 | 120,496,473 |
| டிசம்பர் | 76,124,888 | 24,700,000 | 100,824,888 |
| மொத்தம் | **1,064,755,998** | **206,451,478** | **1,271,207,476** |

# விசேட சேவைகள் பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்பகமானது, திணைக்களம் மற்றும் திணைக்களத்துடன் தொடர்புபட்டவர்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்குவதாகும். இந்த வகையில் பொருள் வகைப்படுத்தல், இரசாயன பகுப்பாய்வு, இரத்தினம், பெறுமதிமிக்க உலோகங்கள் மற்றும் ஆபரணங்கள் தொடர்பில் பெறுமதி மதிப்பீடு செய்தல், சுங்க இல்ல முகவர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் இறக்குமதியாளர்களையும் ஏற்றுமதியாளர்களையும் பதிவு செய்தல் போன்ற விடயங்களை இப்பணிப்பகம் கையாளுகின்றன. இப்பணிப்பகத்தின் கீழ் ஐந்து பிரிவுகள் உள்ளன.

பிரதான தொழிற்பாடுகள் :

1. சரக்கு / பொருள் வகைப்படுத்துகை
2. மாணிக்கக்கற்கள், பெறுமதிமிக்க உலோகங்கள் மற்றும் ஆபரணங்களை அடையாளப்படுத்தல், வகைப்படுத்தல் மற்றும் விலை மதிப்பிடல்.
3. சுங்க இல்ல முகவர்களுக்கான உரிமங்களை வழங்கல், மற்றும்
4. இறக்குமதியாளர்கள் மறறும் ஏற்றுமதியாளர்களைப் பதிவுசெய்தல்.

கூட்டுறவுக் கொத்தணியின் கீழான இப்பணிப்பகமானது பல்வேறு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

பொருள் வகைப்படுத்தல் பிரிவு

இப் பிரிவானது இறக்குமதி செய்யப்படும்/ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் அதற்கு மிகவும் பொருத்தமான இயைபுபடுத்தப்பட்ட முறைக் குறியீட்டினை தீர்மானிக்கும் விடயத்தில் உதவுகின்றன. இறக்குமதியாளர்கள்/ ஏற்றுமதியாளர்கள் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு முன்பதாக அல்லது பொருட்களை இறக்குமதி செய்வதற்கு முன்பதாக அத்தகைய பொருட்களுக்கான வகைப்படுத்தல் விதிமுறையினை பெற்றுக்கொள்ள வேண்டின் சுங்க வெப்தளத்திலுள்ள விண்ணப்பப்பத்திரத்தினை பூரணப்படுத்தி இப்பணிப்பகத்துக்கு சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

| | |
|---|---|
| முன்கூட்டிய வகைப்படுத்தல் விதிமுறையினை பெற்றுக்கொள்ளும் வகையில் பெறப்பட்ட விண்ணப்பங்களது எண்ணிக்கை | - 627 |
| விநியோகிக்கப்பட்ட முன்கூட்டிய வகைப்படுத்தல்களது எண்ணிக்கை | - 514 |
| ஆலோசனைக்குள்ளாக்கப்பட்ட வகைப்படுத்தல் பிரச்சினைகளது எண்ணிக்கை | - 792 |
| முடிவுறுத்தப்பட்ட வகைப்படுத்தல் பிரச்சினைகளது எண்ணிக்கை | - 795 |

**சுங்க ஆய்வுகூடப் பிரிவு**

இப்பிவானது, ஏற்றுமதி செய்யப்படும்/இறக்குமதி செய்யப்படும் இரசாயனங்கள் மற்றும் அதனோடு இணைந்த தயாரிப்புகளை அடையாளப்படுத்தல் தொடர்பில் திணைக்கள மற்றும் திணைக்களத்துடன் தொடர்புபட்டவர்களுக்கு உதவும் வகையில் நிறுவப்பட்டதாகும். இரசாயன மாதிரிகள் மற்றும் அதனோடிணைந்த தயாரிப்புகள் அவை சந்தேகத்திற்கிடமாக இருப்பின் அதனை இரசாயன கூடத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. அத்தகைய தயாரிப்புகளது வகைப்படுத்தலுடன் சர்ச்சைகள் எழும்போது இப்பிரிவினரின் அபிப்பிராயத்திற்காக ஆவணங்கள் இப்பிரிவுக்கு அனுப்பிவைக்கப்படும். இப்பிரிவானது ஒரு தொழிற்நுட்ப கூறாகவிருந்துகொன்டு, பல்வேறு பேரவைகள் மற்றும் வெளியாகும் ஒழுங்குவிதிகள் என்பவற்றினை அமுல்படுத்துவதில் பிற தொடர்புபட்டவர்களுடன் கூட்டிணைப்பினை பேணும். இவ்வாண்டுக்காலப்பகுதியில் 488 சுங்கப் பிரகடனங்கள் இப்பிரிவிற்கு அனுப்பப்பட்டதுடன் அவை பூர்த்திசெய்யப்பட்டுமுள்ளன.

இரத்தினக்கல், விலையுயர்ந்த உலோகம் மற்றும் ஆபரணப் பிரிவு

இப்பிரிவானது, இரத்தினம், விலையுயர்ந்த உலோகங்கள் மற்றும் ஆபரணங்கள் என்பவற்றினை சுங்கத்திலிருந்து வெளியாக்கல் தொடர்பில் ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் பயணிகள் போன்றோருக்கு வசதிகளை வழங்குவதுடன் அப் பொருட்களின் பெறுமதியினை கணிப்பிடல் மற்றும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆவணங்களை செய்முறைப்படுத்தல் போன்ற வசதிகளையும் வழங்குகின்றன.

2013 ஆம் ஆண்டிலான செயலாற்றுகை

செய்முறைப்படுத்தப்பட்ட பிரகடனங்களது எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| இறக்குமதிகள் | – | 2,823 |
| ஏற்றுமதிகள் | – | 6,605 |
| மீள்-ஏற்றுமதிகள் | – | 1,221 |

- இறக்குமதிகளது பெறுமதி (ரூபா)

| | | |
|---|---|---|
| சீர்செய்யப்படாத வைரம் | – | 23,238,174,434/= |
| வெட்டி மெருகூட்டப்பட்ட வைரம் | – | 13,241,380,605/= |
| இரத்தினக் கல் | – | 2,492,587,924/= |
| வெள்ளி | – | 148,148,343/= |
| தங்கம் | – | 25,574,696,121/= |
| ஆபரணங்களும் கண்டுபிடிப்பும் | – | 700,996,939/= |
| நுகர்வுப்பொருள் | – | 98,941,762/= |
| மீள் ஏற்றுமதிகள் | – | 5,639,980,010/= |
| மொத்தம் | **–** | **71,134,906,138/=** |

- இறக்குமதிகளின் பெறுமதி

| | | |
|---|---|---|
| இரத்தினக்கல் | – | 17,569,888,209/= |
| வைரமும் ஆபரணமும் | – | 232,162,764/= |
| ஏனைய ஆபரணங்கள் | – | 2,250,874,758/= |
| வைரம் | – | 37,682,262,099/= |
| குஆடா மற்றும் தாதுப்பொருட்கள் | – | 104,628,598/= |
| தங்கம் மீள் ஏற்றுமதி | – | 3,966,701,047/= |
| மொத்தம் | **–** | **61,806,517,475/=** |

சுங்க இல்ல முகவர் பிரிவு

இப்பிரிவானது, இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகங்களில் அல்லது இடங்களில் ஏதேனும் பொருளை அல்லது பொதிகளை அல்லது ஏதேனும் கப்பலினை உள்வர அல்லது வெளியகற்றுவதற்கு சுங்கத்துடன் தொடர்புபட்ட கொடுக்கல்வாங்கள் வியாபாரத்திற்காக சுங்க இல்ல முகவர் அனுமதிப்பத்திர வினியோகம் தொடர்பான விடயங்களை கையாளுகின்றன.

2013 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை

(1) புதிய பதிவுகள்

| | |
|---|---|
| சுங்க இல்ல முகவர் | 94 |
| சரக்கு மேடை உதவியாளர் | 139 |
| தற்காலிக சரக்கு மேடை உதவியாளர் | 436 |

(2) புதுப்பித்தல்கள்

| | |
|---|---|
| சுங்க இல்ல முகவர் | 1,601 |
| சரக்கு மேடை உதவியாளர் | 4,868 |

(3) இரத்துச் செய்யப்பட்டவைகள்

| | |
|---|---|
| சுங்க இல்ல முகவர் | 27 |
| சரக்கு மேடை உதவியாளர் | 436 |

### வரி அடையாளப்படுத்தல் இலக்கம்/ பெறுமதி சேர் வரி பதிவுப் பிரிவு

இப்பிரிவானது, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 115ஆம் பிரிவுக்கிணங்க இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களை பதிவு செய்வதாகும். இப்பிரிவில் பதிவு செய்யப்பட்டவர்கள் தவிர வேறு எவரும் பொருட்களை இறக்குமதி செய்யவோ அல்லது ஏற்றுமதி செய்யவோ இயலாது.

இவ்வாண்டுக்காலப்பகுதியிலான பதிவுகளது எண்ணிக்கை

| | |
|---|---|
| பிரத்தியேக உரிமையாளர்கள் | – 989 |
| பங்குடமை | – 533 |
| வரை.பொறுப்புகள் | – 1,651 |
| துனிப்பட்ட இறக்குமதிகள் | – 6,128 |
| தரும ஸ்தாபனம்/அ.சா.நி | – 181 |
| மொத்தம் | – 9,482 |

# பொருள் விநியோகப் பணிப்பகம்

அறிமுகம்

இப் பணிப்பகமானது அரசாங்கத்தினால் விடுக்கப்படுகின்ற இன்றியமையா கடமையினை மேற்கொள்ளும் வகையில் முக்கியமான பங்களிப்பினைச் செய்து திணைக்களத்தினுள் தனது வகிபாகத்தை வழங்கி வருகிறது. சேவைகள் உள்ளிட்ட அனைத்து அத்தியவசியமான பொருட்களையும், திறன்மிக்க முறையிலும் மற்றும் வெளிப்படையாகவும் திணைக்களத்தின் அனைத்து பணிப்பகங்களுக்கும் விநியோகிப்பதே இப்பணிப்பகத்தின் குறிக்கோளாகும்.

பிரதான தொழிற்பாடுகள்

1. திணைக்களத்தின் சகல தொழிற்பாடுகளை தடையின்றி தொடர்ந்து பேணும் வகையில், உரிய நேரத்தில் தரமான பொருட்களையும் சேவையினையும் வேண்டுகின்ற பிரிவுகளுக்கு வழங்குதல்.
2. திறைசேரி சுற்றுநிரூபங்கள் மற்றும் தேசிய பொருட் கொள்வனவு வழிகாட்டிக்கு இணங்க தெளிவான முறையில் பொருள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல்.
3. உரிய முறையில் களஞ்சியப்படுத்தல் மற்றும் அவற்றினைப் பாதுகாக்கும் வகையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை பொருட் பதிவேட்டில் பதிதல் மற்றும் உரிய களஞ்சியக் கட்டுப்பாடு, திறமையான களஞ்சிய முகாமைத்துவ முறைகள் என்பவற்றை உறுதிப்படுத்தி அனுகூலமான பலன்களைப் பெறுதல்.
4. சுங்கத் திணைக்களத்தினது அசையும், அசையாச் சொத்துக்களை முகாமை செய்தல்.
5. அட்டவணைக்கேற்ப புதிய சுங்கத் தலைமை அலுவலகத்தின் நிர்மானப் பணியின் திருப்திகரமான பூர்த்தி மற்றும் உரிய வளாகங்களது முகாமைத்துவத் திட்ட அமுலாக்கத்தை உறுதிப்படுத்தல்.
6. செயற்பாட்டு நிலையிலுள்ள சுங்கத் திணைக்களத்தின் மோட்டார் வாகனத் தொகுதிகளை பராமரிப்பதில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2013 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை

2013 ஆம் ஆண்டுக்காலத்தின் போது சுங்கத் திணைக்களத்தின் பௌதீக வளங்களை மேம்படுத்துதல் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமான பொறுப்புகள் இப்பணிப்பகத்தின் மீதே முழுமையாக வைக்கப்பட்டிருந்தன. சுங்கத்தின் புதிய தலைமை அலுவலகத்தினை பூரணப்படுத்தும் செயற்பாடுகளுக்கான பொருட்கள் மற்றும் சேவைகள் விநியோகமானது இப்பணிப்பகத்தின் பாரிய கடமைகளுள் ஒன்றாகக் காணப்பட்டது. புதிய கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்திருந்த அதேவேளை, 2011 இல் திணைக்களமானது அதன் புதிய கட்டிடத்திற்கு இடம்பெயர்ந்தமையினால் ஒரு அலுவலக சூழமைவுக்கான மேற்படி தேவைப்பாடுகளை நிறைவேற்றி வைப்பதற்கான மற்றுமொரு அழுத்தத்தையும் இப்பணிப்பகம் எதிர்கொண்டது. இருப்பினும், எதிர்பார்த்த படி 2013 இனுள் சம்பந்தப்பட்ட பொருள் மற்றும் சேவைகள் தொடர்பான தேவைப்பாடுகளை நிறைவுசெய்து வைக்க முடியுமாகவிருந்தது.

2013 ஆம் ஆண்டுக்கால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய பாரிய செயற்பாடுகள்

1. புதிய கட்டடத்தில் சைகை அட்டைகளது நிறுவும் பணி பூர்த்தி செய்யப்பட்டமை.
2. பாதுகாப்பினை விருத்தி செய்யும் வகையில் சிசிரிவி கமரா முறை அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் இது திறப்பட செயற்படுகின்றமை
3. வாகன தரிப்பிட கடவைகளுக்கான நுளைவு கட்டுப்பாட்டு முறை அமுல்படுத்தியமை.
4. அலுவலக பதவியணியினர்கள் மற்றும் திணைக்களததிற்கு வருகைதருபவர்கள், நுளைவு கட்டுப்பாட்டு முறையூடாக கட்டடத்தினுள் நுளைவதற்கான புதிய அலுவலக அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டமை.
5. சுங்க அலுவலர்களுக்கும் மற்றும் திணைக்களத்திற்கு வருகை தருபவர்களுக்குமான சிற்றுண்டிச்சாலை இக் கட்டடத்தின் தரை தளத்திலும் மற்றும் ஒன்பதாவது தளத்தில் பதவி நிலை அலுவலர்களுக்கான சிற்றுண்டிச்சாலை சேவைகள் வழங்கப்பட்டமை.
6. உத்தேசிக்கப்பட்ட சுங்க பொருட்காட்சி நிலையத்தினை நிறுவுவதற்கான சகல தேவைப்பாடுகளும் வழங்கப்பட்டமை.
7. சுங்க தலைமையலுவலகத்துக்கான புதிய தொலைபேசி இலக்கங்கள் உரிய தள இலக்கத்திற்கேற்ப அறிமுகப்படுத்தியமை .

8. தலைமையலுவலக கட்டட பிரதான ஒப்பந்தக்காரருடனான பிரதான கேட்போர் கூட ஆசன வரிசை ஒப்பந்த வேலை பூரணப்படுத்தப்பட்டமை.
9. தலைமையலுவலக கட்டடத்தில் படலமிடப்பட்ட (லெமினேற்பண்ணப்பட்ட) கண்ணாடிகளது மீள்நிறுவுகை பூரணப்படுத்தியமை.
10. கட்டுநாயக்க சுங்க விடுதி, ஹம்பாந்தோட்டை துறைமுக புதிய சுங்க அலுவலகம் மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றக்கு தேவையான பொருட்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டமை.
11. காலி, மத்தள சர்வதேச விமான நிலையம் மற்றும் பிற வெளித்துறைமுகம் என்பவற்றில் அமையப்பெற்றுள்ள சுங்க அலுவலகங்கள் புனர் நிர்மாணம் செய்தமை.

2013ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதும் 2014ஆம் ஆண்டில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டதுமான செயற்பாடுகள்

1. தலைமையலுவலகத்தின் புதிய இரசாயனக் கூடத்திற்குத் தேவையான பொருட்களை வழங்கல் மற்றும் அதனை நிறுவுதல் என்பவற்றுக்கான கொள்வனவினை பூர்த்தி செய்தல்.

2. தலைமையலுவலகத்தின் புதிய தேகப் பயிற்சிச் சாலைக்குத் தேவையான பொருட்களை வழங்கல் மற்றும் அதனை நிறுவுதல் என்பவற்றுக்கான கொள்வனவினை பூர்த்தி செய்தல்.

3. தலைமையலுவலக கட்டடத்தினை வைபவரீதியாக திறந்து வைப்பதற்கு முன்பதாக சகல பதவி நிலை அலுவலர்களுக்கான புதிய சீருடையினை வழங்கும் வகையில் அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெறல்.

மேலே கூறப்பட்ட விடயங்களை நிறைவேற்றும் வகையில் நிதி எவ்வாறு பகிரப்பட்டுள்ளமை பற்றிய சாரம்சம் வருமாறு.

மீண்டெழும் செலவினம் (ரூபா.மில்)

| செலவினம் | **2012** இல் ஈட்டப்பட்டவை | **2013** இல் ஈட்டப்பட்டவை | **2014**இல் மதிப்பீடு |
|---|---|---|---|
| விநியோகங்கள் | 75.4 | 85.9 | 125.0 |
| பராமரிப்பு | 73.0 | 81.8 | 87.5 |
| சேவைகள் | 163.9 | 191.9 | 225.0 |

மூலதன செலவினங்கள

**1.** மூலதன சொத்துக்களது விருத்திக்காக (ரூபா.மில்)

| செலவினம் | **2012**இல் ஈட்டப்பட்டவை | **2013** இல் ஈட்டப்பட்டவை | **2014**இல் மதிப்பீடு |
|---|---|---|---|
| கட்டடங்களும் நிர்மாணங்களும் | 18.0 | 39.4 | 20.0 |
| இயந்திரம் | 4.5 | 6.0 | 5.0 |
| வாகனங்கள் | 1.8 | 2.5 | 3.0 |

**2.** நிலையான சொத்துக்களை கொள்வனவுசெய்வதற்காக (ரூபா.மில்)

| செலவினம் | **2012**இல் ஈட்டப்பட்டவை | **2013** இல் ஈட்டப்பட்டவை | **2014**இல் மதிப்பீடு |
|---|---|---|---|
| வாகனங்கள் | - | 7.4 | - |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 0.9 | 1.3 | 3.0 |
| இயந்திரம் | 1.8 | 2.5 | 4.0 |
| கட்டடம் மற்றும் கட்டமைப்பு நிர்மாணம் | 875.0 | 707.0 | 300.0 |

# மனித வளங்கள் கொத்தணி

# மனித வள முகாமைத்துவப் பணிப்பகம்

அறிமுகம்

மனித வள முகாமைத்துவப் பணிப்பகமானது திணைக்களத்தின் மனிதவள முதலீட்டிலிருந்து அதிகூடிய பயனைப் பெறுவதற்கும் நிதி சார் இடரினைக் குறைத்துச் செயற்படுவதற்கும் அயராது உழைக்கின்றது. எதிர்கால நிலைத்திருப்பினை வெற்றிகரமாகப் பாதுகாப்பதற்கும் மனிதவள முதலீட்டிலிருந்தான கூடிய பயனை அடைவதற்குமாக திணைக்களத்தின் செயல்நுணுக்கத் திட்டங்கள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளைக் கொண்டு திறமையான மற்றும் தகைமையுடைய நபர்களை வேலைக்கமர்த்தி ஒழுங்கமைப்பதன் மூலமும் மேலும் தற்போதைய பணியாளர் தொகுதியினரின் திறனை அதிகரிப்பதன் மூலமும் மேற்படி இலக்கினை அடைவதற்கு எதிர்பார்க்கின்றது. அத்தகைய இலக்குகள் அடையப்பட்டுள்ளதனை உறுதிப்படுத்துவதில், மனிதவள முகாமைத்துவமானது அரசாங்க ஊழியர் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், வியாபார நன்னடத்தை நடைமுறைகள் மற்றும் நிகர செலவுகள் போன்றவற்றைக் கவனத்திற்கொண்டு ஊழியர் ஊக்குவிப்பு, அர்ப்பணிப்பு மற்றும் விளைதிறன் போன்றன முடியுமானவரை அதிகரிக்கப்படும் விதத்தில், திணைக்களத்தின் மனித வள தேவைப்பாடுகளை வினைத்திறன்மிக்க முறையில் அமுல்படுத்துகின்றது.

சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கீழான பதவிநிலை மற்றும் பதவிநிலை சாரா அலுவலர்களுக்கான மனிதவள முகாமைத்துவம் தொடர்பான அனைத்து அம்சங்களுக்குமான இறுதியாக முடிவெடுக்கும் அதிகாரம் பொதுச்சேவை ஆணைக்குழுவையே சார்ந்ததாகும். எனவே, பொதுச் சேவை ஆணைக் குழுவினால் அவ்வப்போது அறிவிப்புச் செய்யப்படுகின்ற ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, செயலாற்றுகை முகாமைத்துவம் ஆகியன தொடர்பிலும், மேலும் தாபனக் கோவை, சுங்கக் கட்டளைச் சட்டம், மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் போன்றவற்றுடன் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பிலுமான விடயங்களை மனிதவள முகாமைத்துவப் பணிப்பகமானது உறுதிசெய்கின்றது.

பொதுச் சேவை ஆணைக்குழுவானது, பதவிநிலை ஊழியர்கள் மற்றும் ஏனைய அனைத்து நிலை ஊழியர்கள் தொடர்பில் தாபனக் கோவையின் தொகுதி II இன் இரண்டாவது அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் (பொதுச் சேவை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்வதற்கான உரிமை) ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், மேலும் இடமாற்றம் செய்வதற்குமான தத்துவத்தை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்குகின்றது.

அதேவேளை, பொதுச்சேவை ஒழுங்குவிதிகளின் நிலையான ஏற்பாடுகளுடன் இணக்கமுறுகின்ற போதிலும், செயற்திறன் மதிப்பீடு மற்றும் பதவியுயர்வுப் பிரமாணம் போன்ற விடயங்கள் உள்ளடங்கலாக திணைக்களத்தின் மனிதவளத் தேவைகளுக்குப் பொருத்தமான மனிதவள முகாமைத்துவத் திட்டத்தை திட்டமிடுவதில் சுங்கமானது நெகிழ்வுத் தன்மையைக் கொண்டுள்ளது.

பிரதான தொழிற்பாடுகள்

மனித வளங்கள் முகாமைத்துவப் பணிப்பகமானது திணைக்களத்தின் நோக்கெல்லையினை நிறைவேற்றுவதற்காக மிகவும் முக்கியமான பங்கினை வகிக்கிறது. இந்த வகையில் இப் பணிப்பகமானது கீழே வருகின்ற உபாயங்கள், அபிவிருத்திக் கொள்கைகள், நியமங்கள், முறைமைகள் மற்றும் நடைமுறைகள் போன்றவற்றை வடிவமைக்கிறது;

1. ஆட்சேர்ப்பு, தெரிவு செய்தல் மற்றும் வளமிடல்
2. ஊழியர் கோவையினைப் பேணல் மற்றும் இரகசியம் பேணல்
3. நிறுவணக் கட்டமைப்பினை வடிவமைத்தல் மற்றும் விருத்திசெய்தல்
4. மீள் கட்டமைப்பு மற்றும் முகாமைத்துவ மாற்றம்
5. செயலாற்றுகை, நன்னடத்தை மற்றும் பழக்கவழக்க முகாமைத்துவம்
6. வாடிக்கையாளர் மற்றும் ஊழியருக்கிடையிலான தொடர்புகள்
7. மனித வளங்கள் (வேலையாட்கள்) பகுப்பாய்வு மற்றும் வேலையாள் நபரது தரவு முகாமைத்துவம்
8. நஷ்ட ஈடு மற்றும் ஊழியர் நலன் முகாமைத்துவம்
9. ஊழியர் ஊக்குவிப்பு மற்றும் மனவுறுதியினைக் கட்டியெழுப்புதல்

இவ்வாண்டுக்காலப்பகுதியிலான சாதனைகள்

ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுக்கான நேர்முகப்பரீட்சை

| நேர்முகப்பரீட்சை செய்யப்பட்ட தரம் | வெற்றிடங்களுக்கா | திகதி |
|---|---|---|
| சுங்கப் பணிப்பாளர் | 01 சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 25.10.2013 |
| சுங்க பிரதிப் பணிப்பாளர் | 04 சுங்கப் பணிப்பாளர்கள் | 28.10.2013 |
| சுங்க அத்தியட்சகர் | 13 சுங்க பிரதிப் பணிப்பாளர்கள் | 17.12.2013 |
| சுங்க பிரதி அத்தியட்சகர் | 27 சுங்க அத்தியட்சகர் | 21.06.2013 |
| சுங்க உதவி அத்தியட்சகர் - தரம் 1 | 74 சுங்க பிரதி அத்தியட்சகர் | 15.08.2013 |
| சுங்கப் பரிசோதகர் - தரம் 11 | 02 சுங்கப் பரிசோதகர் - தரம் 1 | 15.08.2013<br>12.11.2013 |
| சுங்க காவலர் | 42 (ஆட்சேர்ப்புகள்) | 18.11.2013 |

பரீட்சைகள்

| பரீட்சைகள் | பரீட்சார்த்திகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| வினைத்திறன்காண் பரீட்சை | சுங்க உதவி அத்தியட்சகர் தரம் 11 :<br>சுங்கப் பரிசோதகர் தரம் 11(பழயை), சுங்கப் பரிசோதகர் தரம் 11(புதிய) | 10 |

முடிவுறுத்தப்பட்ட விசாரணைகள்

| விசாரணை இல | மனுதாரர் | முடீவு |
|---|---|---|
| SCFR 1427/2012 | டபிள்யு.எம். நாமல் சன்ஜீவ | அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன |
| HRC 1427/2012 | பீ.ஜீ. பிறியதர்ஷினி | அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன |
| HRC 1523/2012 | சுங்கப் பரிசோதகர் பட்டதாரிகள் சங்கம் | அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன |

ஏனைய செயற்பாடுகள்

முழு ஊழியர்களுக்குமான பத்து மாத ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டன.

செயலாற்று ஒப்பீட்டாய்வு

2008

| | |
|---|---|
| பதவியுயர்வுகளுக்கான நேர்முகப்பரீட்சைகளது எண்ணிக்கை | 02 (உ.சு.அ மற்றும் சு.பரி ї 1) |
| பதவியுயர்வுகளதும் ஆட்சேர்ப்புகளதும் எண்ணிக்கை | பி.சு.ப - 4, உ.சு.அ 11 ї 116, பி.சு.பரி இருந்து உ.சு.அ - 10 |
| பரீட்சைகள் திணைக்களத்திடம் வேண்டப்பட்ட தடைகாண் பரிசோதனைகளது எண்ணிக்கை | வேண்டப்பட்டவை ї 09, பரீட்சைகள் திணைக்களம் நடாத்தியது - 05 |
| ஊழியர் ஊக்குவிப்புக் கொடுப்பனவு | இவ்வருடத்திற்கு முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது |

2009

சு.ப ï 4, பி.சு.பரி ï 41 மற்றும் சு.பரி ï 3 ஆம் பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன.. பரீட்சைத் திணைக்களத்திடம் எட்டு தடைகாண் பரிசோதனைகள் வேண்டப்பட்டன. ஊழியர் ஊக்குவிப்புக் கொடுப்பனவு இவ்வருடத்திற்கு முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

2010

| | |
|---|---|
| மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு பரிசோதனைகள் மற்றும் நேர்முகப்பரீட்சைகளது எண்ணிக்கை. | உ.சு.அ II ï 100, சு.பரி II ï 100, சு.கா ï 50 ஆகியவற்றுக்காக வர்த்தமான அறிவித்தல் மூலம் திறந்த போட்டிப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. |
| பதவியுயர்வுகளுக்கான நேர்முகப்பரீட்சைகளது எண்ணிக்கை | சு.ப ï 12, பி.சு.ப ï 32, சு.அ ï 107, பி.சு.அ ï 376, பி.சு.பரி ï 92 ஆகிய வெற்றிடங்களுக்காக ஐந்து நேர்முகப் பரீட்சைகள் |
| பதவியுயர்வுகளதும் ஆட்சேர்ப்புகளதும் எண்ணிக்கை | மே.சு.ப ï 4, சு.ப ï 12, பி.சு.ப ï 76, உ.சு.ப ï 44, சு.அ ï 118, பி.சு.அ ï 70, பி.சு.பரி ï 92 மற்றும் சு.பரி I - 32 |
| பரீட்சைத் திணைக்களத்திடம் வேண்டப்பட்ட வினைத்திறன்காண் பரிசோதனைகளது எண்ணிக்கை | 08. |
| ஊழியர் ஊக்குவிப்புக் கொடுப்பனவு | இவ்வருடத்திற்கு முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது |

## 2011

| | |
|---|---|
| பதவியுயர்வுகளுக்கான நேர்முகப்பரீட்சைகளது எண்ணிக்கை | 05 (மே.சு.ப.ந, சு.ப மற்றும் உ.சு.அ II) |
| ஆட்சேர்ப்புகளுக்கான நேர்முகப்பரீட்சைகளது எண்ணிக்கை | 01 (உ.சு.அ II) |
| பதவியுயர்வுகளதும் ஆட்சேர்ப்புகளதும் எண்ணிக்கை | உ.சு.அ I ï 84 , உ.சு.அ II ï 09(5%), உ.சு.அ II ï 38 (15%). |
| பரீட்சைத் திணைக்களத்திடம் வேண்டப்பட்ட வினைத்திறன்காண் பரிசோதனைகளது எண்ணிக்கை | வேண்டப்பட்டவை 08, நடாத்தப்பட்டவை 06 |
| பரீட்சைத் திணைக்களத்திடம் நடாத்தப்பட்ட ஏனைய பரீட்சைகளது எண்ணிக்கை | திறந்த போட்டிப்பரீட்சை ï 03, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 01 |
| ஊழியர் ஊக்குவிப்புக் கொடுப்பனவு | இவ்வருடத்திற்கு முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது |

## 2012

| நேர்முகப் பரீட்சை இடம்பெற்ற தரம் | வெற்றிடங்களுக்கானது | திகதி |
|---|---|---|
| சுங்கப் பரிசோதகர் தரம் 1 | 50 சுங்க பிரதான பரிசோதகர் | 09-08-2012 |
| சுங்கப் பணிப்பாளர் | 04 மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் | 29-09-2012 |
| சுங்க பிரதிப் பணிப்பாளர் | 07 சுங்கப் பணிப்பாளர் | 16 -11- 2012 |

சுருக்க குறியீடுகள்

மே.சு.ப.நா ï மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம்; சு.ப ï சுங்கப் பணிப்பாளர்; பி.சு.ப ï பிரதி சுங்கப் பணிப்பாளர்; சு.அ ï சுங்க அத்தியட்சகர் ; பி.சு.அ ï பிரதி சுங்க அத்தியட்சகர் ; உ.ச.அ I ï உதவி சுங்க அத்தியட்சகர் தரம் I ; உ.சு.அ II- உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II; பி.சு.பரி ï பிரதான சுங்க பரிசோதகர்; சு.பரி I - சுங்க பரிசோதகர் தரம் I ; சு.பரி II - சுங்க பரிசோதகர் தரம் II ; சு.கா - சுங்க காவலர்

# மனித வள அபிவிருத்திப் பணிப்பகம்

அறிமுகம்

திணைக்களத்தின் முன்னேற்பாட்டிற்கு உதவியாகவுள்ள சிறந்த அடித்தளத்திற்கான மனித வளங்களது மனோநிலை மற்றும் திறன்கள் என்பவற்றினை மாற்ற அடிப்படையாகவிருக்கும் இப்பணிப்பகமானது சுங்கத் திணைக்களத்தின் பிரதானமானதொரு பணிப்பகமாகவுள்ளது.

இப்பணிப்பகமானது 30வருட கால அதிசிறந்த சேவைகளை வழங்கியுள்ளளதுடன் அலுவலர்களது நாளாந்த கடமைகளை உரிய முறையில் மேற்கொள்ளுவதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்தியுள்ளது. தற்போது இப்பணிப்பகம் திருமதி. ஐ.ஜெ. அபேவர்தன அவர்களின் தலைமையின் கீழ் 01 சுங்க பிரதிப் பணிப்பாளர், 03 சங்க அத்தியட்சகர்கள், 02 சுங்க பிரதி அத்தியட்சகர்கள், 04 உதவி சங்க அத்தியட்சகர்கள் மற்றும் பிற அலுவலர்கள் கடமையாற்றுகின்றனர்.

நோக்கு

சுங்கத்தின் அதிசிறந்த பயிற்சியளிக்கும் பிரிவாக இருந்துகொண்டிருக்கம் அதேவேளை மனிதவளங்களை செயற்திறன் மிக்க முறையில் விருத்தி செய்தல்.

செயல் நொக்கு

திணைக்களத்தினது பரிபூரணமான செயற்திறனை பெற்றுக்கொள்ளும் வகையில் திணைக்களத்திலான உயர்நிலை செயற்திறனை கருத்திற்கொண்டு கிடைக்கத்தகு மனித வள திறன்களை விருத்தி செய்தல்

பிரதான தொழிற்பாடுகள்

பணியாட்தொகுதியனருக்கு பயிற்சியளிப்பதே இங்கு அத்தியவசியமான தேவையாகவுள்ளது. இது உள்நாட்டு பயிற்சியையும் கொண்டிருப்பதோடு, சர்வதேச தன்மை குறித்தான சுங்கச் செயற்பாட்டு குறியிலக்கின் கீழான விடயங்கள் தொடர்பில் வெளிநாடுகளிலிருந்தான புலமைப்பரிசில்களையே குறிப்பாகக் கொண்டுள்ளது. உள்நாட்டு பயிற்சியானது திறன் அபிவிருத்தியைக் கொண்டு ஒழுங்கமைக்கப்படுவதோடு, உள்ளார்ந்த திறமைகள் மற்றும் ஆற்றல்களின் அடையாளங்களுடன் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அறிவு மற்றும் விழிப்புணர்வுகளை மேம்படுத்தலுடன் தொடர்புபட்டதாகும். இப்பணிப்பகமானது திணைக்களத்தின் பயிற்சி முறைமையினை அபிவிருத்தி செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டிருப்பதோடு, சுங்க இல்லத்தின் முகவராண்மைகளுக்கான பயிற்சியினை வழங்கும் அதேவேளை, ஏனைய நிறுவனத்திற்கான பயிற்சியையும் சம்பந்தப்பட்ட உதவியையும் வழங்குவதற்கும் சமூகமளிக்கின்றது. மேலும், மனித வள அபிவிருத்திப் பணிப்பகத்தினால் வழங்கப்படுகின்ற வசதிகளுக்கு மத்தியில் பின்வரும் விடயங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

- சுங்கப் பணியாட்தொகுதியினருக்கான நூலக வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- பயிற்சி தொடர்பான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வடிவமைத்து அவற்றை அமுல்படுத்தல்.
- சுங்க இல்ல முகவராண்மைகளுக்கான பயிற்சியளிப்பானது மனிதவள அபிவிருத்தியில் காணப்படுவதோடு பயிற்சியின் நிறைவின் போது அதற்கான பரீட்சையும் உள்ளது.
- பயிற்சி தொடர்பான தேவைப்பாடுகளை வடிவமைத்து பயிற்சித் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு முன்னுரிமையளிக்கும் வகையில் திணைக்களத்தின் பயிற்சித் தேவையினை மதிப்பீடு செய்தல்.
- இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் காவல் துறை அதிகாரிகள் போன்ற வெளித்தரப்பு பங்கேற்பாளர்களுக்கு அவசியமான பயிற்சிகள் தேவைப்படும் பட்சத்தில் வழங்கப்படுகின்றன.
- கற்கைச் சுற்று மேம்பாட்டிற்கான ஆயத்தம் மேற்கொள்ளல் மேலும் உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சி வழங்குநர்களினால் வழங்கப்படுகின்ற பயிற்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் தொடர்பானவற்றைக் கண்காணித்தல்.

- வெளித்தரப்பு நிறுவனங்களுக்கு எங்கள் திணைக்களத்தின் வளவாளர்கள் தேவைப்படும் போதெல்லாம், சுங்க விடயம் சார்ந்த விரிவுரையினை வழங்குவதற்காக அவர்களை தயார் செய்ய வேண்டியுள்ளது.
- சுங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட செயற்பாட்டிலுள்ள பணியாட்தொகுதியினருக்கு அவசியமான பயிற்சியினை வழங்குதல்.
- சுங்கப் பணியாட்தொகுதியினருக்கான அறிவுத் திறன் மற்றும் பனோபாவம் போன்றவற்றை மேம்படுத்தி அவர்களின் தொழில்சார் விருத்திக்கு வழிவகுத்தல்.
- பயிற்சி வாய்ப்புக்கள் பற்றிய தகவலுடன் சம்பந்தப்பட்ட தொடர்பாடல் செயலாக்கம்.
- பயிற்சியினை மதிப்பீட்டாய்வு செய்தல்.

திணைக்களத்தின் பிரதான குறிக்கோள்கள்

- திணைக்களத்தின் தரம் மற்றும் செயற்றிறன் என்பவற்றினை விருத்தி செய்யும் வகையில் அலுவலர்களை சுறுசுறுப்புடன் முன்னோக்கிச் செல்லக்கூடிய குழுவாக தயாரிபடுத்தல்.
- மாற்றமேற்படும் வேளை, அலவலர்களுக்கு செயலாற்றுகையினை விருத்தி செய்யும் வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கற்கை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அலுவலர்களது திறமைகளையும் மனவுறுதிகளையும் விருத்தி செய்தல்.
- புத்திமதியினை பகிர்தல் மற்றும் பரிமாற்றம் செய்வதன் மூலம் சங்கத் திணைக்களத்தின் விரத்தியினை ஊக்கமளித்தல்.
- சுங்க அலுவலர்கள் உயர் கற்கை நெறியினை தொடர்வதற்கான நிதி உதவி அடங்கலான வசதிகளை ஏற்பாடு செய்தல்.
- வேளிநிலை நிறுவனங்கள் மற்றும் திணைக்களத்துடன் தொடர்புடையவர்களுக்கு அலுவலர்கள் தேவைப்பாடுகள் தொடர்பில் பயிற்சியினை வழங்குதல்.
- உறுதியான மனோநிலை மற்றும் சிந்தனை என்பவற்றினூடாக அலுவலர்களது சேவையின் தரத்தினையும் சிறப்பாக கடமையினை செய்யக்கூடிய திறமையினையும் விருத்தி செய்தல்.
- இவ் சகல கடமைகளுக்கும் மேலாக, நல விடயங்கள் தொடர்பான விடயங்கள் அல்லது அலுவலர்களது வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்துதல் அடங்கலான ஏனைய கல்வி நோக்கங்கள் தொடர்பிலும் கேட்போர் கூடத்தினை பயன்படுத்த முடியும் என்பது முக்கியமானதாகும்.

இவ் இலக்கினை எய்தும் நோக்கில் முகாமைத்துவத்தினால் பின்வரும் பதவியணியினர் ஏலவே அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

| தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணினர் | தற்போதுள்ள பதவியணினர் |
|---|---|---|
| சுங்கப் பணிப்பாளர் | 01 | 01 |
| சுங்க பிரதிப் பணிப்பாளர் | 02 | 01 |
| சுங்க அத்தியட்சகர் | 03 | 02 |
| சுங்க பிரதி அத்தியட்சகர் | 08 | 02 |
| சுங்க உதவி அத்தியட்சகர் | 08 | 06 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 03 | 04 |
| மொத்தம் | **25** | **16** |

இவ்வாண்டுக்காலப்பகுதியிலான சாதனைகள்

2013ஆம் வருட பயிற்சித்திட்டம் மற்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழான பிற விசேட பயிற்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு இணங்க, 41 உள்நாட்டு பயிற்சித் திட்டங்களும் 74 வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டதுடன் இப் பயிற்சித் திட்டங்களின் கீழ் பங்கேற்றவர்களது எண்ணிக்கை ஏறக்குறைய 1,655 ஆகும்.

இவ்வாண்டில் பயிற்சி நிகழ்வுகளிலான பங்கேற்பு

அட்டவணை 01 – தரம் வாரியாக

| தரங்கள் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| சுங்கப் பணிப்பாளர் நாயகம் | 4 | 4 |
| சுங்க மேலதகப் பணிப்பாளர் நாயகம் | 8 | 16 |
| சுங்கப் பணிப்பாளர் | 8 | 24 |
| சுங்க பிரதிப் பணிப்பாளர் | 50 | 27 |
| சுங்க அத்தியட்சகர் | 156 | 29 |
| சுங்க பிரதி அத்தியட்சகர் | 903 | 16 |
| சுங்க உதவி அத்தியட்சகர் | | 22 |
| ஏனையவர்கள் | 388 | - |
| மொத்தம் | **1517** | **138** |

அட்டவணை 02 – பயிற்சி நிகழ்வுகளது விபரம்

பயிற்சித் திட்டம் - 2013

உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - மொத்தம் 41

வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - மொத்தம் 74

உள்நாடு

| தரம் | நிகழ்ச்சித் திட்டங்களது எண்ணிக்கை |
|---|---|
| சுங்க அத்தியட்சகர் மற்றும் அதற்கு மேல் | 12 |
| சுங்க உதவி அத்தியட்சகர் மற்றும் அதற்கு மேல் | |
| ஏனையோர் | 10 |
| பங்கேற்பவர்கள் - அட்டவணைப்படுத்தப்பட்டவை | 2049 |
| பங்கேற்றவர்கள் | 1517 |
| | |

வெளிநாடு

| மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் | நிகழ்ச்சித் திட்டங்களது எண்ணிக்கை | |
|---|---|---|
| | அட்டவணைப்படுத்தியவை | இடம்பெற்றவை |
| கருத்தரங்குகள் | 17 | 15 |
| வேலைக்களரிகள் | 7 | 11 |
| நிகழ்ச்சித் திட்டங்கள் | 6 | 6 |
| பயிற்சி நெறிகள் | 7 | 7 |
| கலந்துரையாடல் | 19 | 19 |
| பட்டப்பின்படிப்பு திட்டங்கள் | 6 | 6 |
| மாநாடுகள் | 7 | 7 |
| ஏனையவைகள் | 5 | 3 |

இப்பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்பட்ட மொழி வகுப்புகள்

அட்டவணை 03

| சகல அலுவலர்களுக்குமான மொழிப் பயிற்சி | | மொத்தம் | |
|---|---|---|---|
| | | அட்டவணைப்படுத்தப்பட்டவை | இடம்பெற்றவை |
| தமிழ் மொழி | மட்டம் III | 60 | 40 |
| தமிழ் மொழி | மட்டம் II | 30 | 20 |
| சாதாரண தர இரண்டாம் மொழி ї தமிழ் | | 30 | 28 |

அட்டவணை 04

சுங்க இல்ல முகவர்களுக்கான பாடநெறியும் மற்றும் பரீட்சையும்

| பரீட்சை | பங்கேற்றவர்கள் | சித்திகள் | விகிதம் |
|---|---|---|---|
| 01 | 100 | 41 | 41% |
| 02 | 106 | 56 | 53% |
| 03 | 119 | 70 | 59% |

சுங்க நூலகம்

சுங்கத்தின் நூலகமானது மனிதவள அபிவிருத்திக்கான பிரதானமானதொரு கருவியாகவிருப்பதோடு, இது 2005.01.26 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டதாகும். நூலகத்திற்குப் பொருத்தமானதொரு இடத்தினைத் தெரிவுசெய்தல் கடினமாகவிருந்தமையினால், மனிதவள அபிவிருத்திப் பணிப்பாளரின் குறியிலக்கின் கீழ் இணைந்த அலகொன்றாக இது நிறுவப்பட்டது.

இந்த நூலகம் தொடா்பில் எதிபாராதளவு சாதகமான பதிலளிப்புக்கள் பணியாட்தொகுதியினரிடமிருந்து கிடைத்துள்ளதோடு, தற்போதைய அங்கத்தவா்களின் எண்ணிக்கையானது 1124 பேரை எட்டியுள்ளதுடன் கிடைக்கத்தகு புத்தகங்களின் எண்ணிக்கையானது 5885 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. சுங்க அலுவலா்கள் முகாமைத்துவத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் நஷ்டஈட்டு நிதி ஆகியன நூலகத்திற்கான புத்தகங்கள் கொள்வனவிற்கு உதவியாகவுள்ளன.

திணைக்களத்தின் அனைத்து பணியாளா்களுக்கும் நூலகத்தைப் பயன்படுத்துவதற்கான வசதிகள் காணப்படுவதுடன் அங்கத்தவா் அல்லாதவரும் நூலகத்தைப் பயன்படுத்த முடிகின்றது. புத்தகங்கள் தவிர, பருவகால செய்திப் பத்திரிகைகள் மற்றும் பல்வேறு சஞ்சிகைகளும் கிடைக்கின்றன. திணைக்களக் கட்டளைகள், வெளிநாட்டுப் பயிற்சிகளில் பங்கேற்கின்ற அதிகாரிகளின் அறிக்கைகள் மற்றும் எதிா்கால குறிப்புதவிக்கான திணைக்களத்தின் ஏனைய வெளியீடுகளும் இங்கு கிடைக்கப்பெறுகின்றன.

நிரந்தர நூலகா் இல்லாத போதிலும், நூலகத்தின் தொழிற்பாடுகள் சுமுகமாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

நூலகத்திலுள்ள அங்கத்தவா்களின் எண்ணிக்கையானது அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளமையினால் அதற்கான வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகவுள்ளது (அட்டவணை 03). அத்தகைய வசதிகளாவன,

(அ) ஏனைய பணியாளா்களுடன் பொருத்தமான நூலகா் ஒருவா் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) சிறப்பாக வடிவமைக்கப்பட்ட நூலக மென்பொருள் அறிமுகம் செய்யப்படல் வேண்டும்.

(இ) அதி நவீன வசதியைக் கொண்ட கணினிகளுடனான இணைய வசதி வழங்கப்படல் வேண்டும்

(ஈ) புத்தகங்களை வழங்குதல் மற்றும் மீளப் பெறல் தொடர்பில் ெட்டை முறையினை அமுல்படுத்தல்.

அட்டவணை 05 : நூலக சேவை

(அங்கத்தவர்களின் எண்ணிக்கை 1257)

| விபரங்கள் | **2012** | **2013** |
|---|---|---|
| புதிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 223 | 96 |
| கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை | 479 | - |
| அன்பளிப்பாகப் பெறப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை | 39 | 22 |
| புத்தகங்களது எண்ணிக்கை | - | 5500 |

சுங்கத்தின் நூலகத்தில் மட்டுப்படுத்தப்பட்டளவிலான வளங்கள் காணப்படினும், அதன் பயனர்களிடையே மிகவும் பிரபல்யமிக்கதொரு அலகாக இது சிறந்துவிளங்குகின்றது.

# ஊழியர் சேவைகள் பணிப்பகம்

அறிமுகம்

சீர்திருத்தத்தின் கீழ் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட இப் பணிப்பகமானது திணைக்களத்தின் இலக்குகளை அடைவதில், ஆக்கமிக்க முறையில் ஊழியர் ஒருவர் தனது பங்களிப்பினை வழங்குவதற்கும் பயன்மிக்க முறையில் பங்களிப்புச் செய்வதற்கும் ஏற்றதொரு சூழலை வழங்கும் நோக்கிலேயே அமைக்கப்பட்டது.

<u>பிரதான தொழிற்பாடுகள்</u>

**1.** ஊழியர் மனக்குறைபாடுகள் தொடர்பான முகாமைத்துவம்**:**
- அ. முகாமைத்துவம் மூலம் ஊழியர்களிடையே அதிக திருப்தியை ஏற்படுத்திக் கொள்ளவும் மற்றும் திருப்தியற்ற நிலையை குறைப்பதற்குமாக மனக்குறைபாடு தொடர்பான விடயங்களைக் கையாளுதல்.
- ஆ. தொடர்பினை கட்டியெழுப்பும் நோக்கில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களுடன் முறையான கலந்துரையாடல்களைப் பேணுதல்.
- இ. சச்சரவுக்குரிய விடயங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும் வகையில் பேச்சுவார்த்தைக் குழுக்களை நிறுவுதல் மற்றும் ஊழியர் பிரச்சினைகளை அடையாளங்காண்பதுடன் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கான பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்ளல்.

2. நலன்புரி முகாமைத்துவம் :
- அ. தற்போது வழங்கப்பட்டிருக்கும் சகல நலன்புரி வசதிகளையும் மற்றும் தரமானதொரு நலன்புரிச் சேவையினை வழங்குவதற்கான படிமுறைகளை எடுக்கும் வகையில் அவர்களது தற்போதைய தரங்களை அடையாளங்காணல். சகல மட்டங்களிலுமுள்ள ஊழியர்களுடன் ஆலோசனைகளைப் பெற்று நலன்புரித் திட்டங்களை அடையாளங்கண்டு அவற்றை அமுல்படுத்தல்.

3. ஒழுக்காற்று முகாமைத்துவம் :
- அ. சம்பந்தப்பட்ட அலுவலருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் இருப்பின் அது தொடர்பில் ஆரம்ப விசாரணைகளையும் மற்றும் ஒழுக்காற்று விசாரணைகளையும் மேற்கொள்ளல்.
- ஆ. சுங்க ஒழுக்காற்று நடைமுறை தொடர்பில் ஒன்றாக்கப்பட்ட நன்னடத்தைக் கோவையினை நடைமுறைப்படுத்தல்.
- இ. அலுவலர்கள் நன்னடத்தைக் கோவையைப் பின்பற்றுவதைக் கண்காணித்தல் மற்றும் நன்னடத்தைக் கோவையினை மீறுபவர்களுக்கு எதிராக முடியுமானளவு ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வதன் மூலம் நன்னடத்தைக் கோவையை திறம்பட செயற்படுத்தல்.

**4.** விளைதிறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல் :
- அ. சுங்கத்தின் ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள அலுவலர்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை மேற்கொள்ளல் மற்றும் விளைதிறன் விருத்தியின் தரத்தை எய்தும் நோக்கில் தேசிய விளைதிறன் செயலகத்துடனான ஆலோசனையுடன் தேவைப்படும் நடைமுறைகள் மற்றும் நுட்பங்களை அமுல்படுத்தல்.

- நலன்புரி முகாமைத்துவம்
  2013 ஆகஸ்ட் மாதத்தில் திறக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலையின் மூலம் வழங்கப்படுகின்ற சேவையின் தரத்தை உறுதிப்படுத்தும் வகையில், சகல அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்க பிரதிநிகளுடன் 3 குழுக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன், எடுத்துக் கூறப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் குழுவினால் தெரிவிக்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றும் வகையில் சிற்றுண்டிச்சாலை முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தன.

- ஒழுக்காற்று முகாமைத்துவம்
  இவ் ஆண்டுக் காலத்தில், ஒழுக்காற்று விசாரணைகள் 2 மேற்கொள்ளப்பட்டன. இதில் ஒரு விசாரணை முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், மற்றையது முடிவுறும் நிலையிலுள்ளது. இக்காலப் பகுதியில் முறையிடப்பட்ட 7 விடயங்கள் தொடர்பில் ஆரம்ப விசாணையினை மேற்கொள்வதற்கு விசாணை அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருப்பதுடன், அறிக்கைகளைப் பெறுவதற்கான ஆரம்ப விசாரணை தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன.

- விளைதிறன் விருத்தித் திட்டம்
  அரச துறையில் விளைதிறனை விருத்தி செய்வதற்கான அரச கொள்கையுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இவ் விளைதிறன் விருத்தித் திட்டமானது, இலங்கைச் சுங்கத்தினால் வழங்கப்படும் சேவைகளை திறம்படவும் மற்றும் நற்பயன் அளிக்கும் வகையிலும் அதனை விருத்தி செய்வதற்கானதொரு முறையான அணுகு முறையினை அறிமுகப்படுத்தும் வகையில் தேசிய விளைதிறன் செயலகத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன. இதற்கிணங்க, விளைதிறன் விருத்திக் குழுக்கள் உருவாக்கப்பட்டதுடன், ஒவ்வொரு பணிப்பகத்திலும் விளைதிறன் விருத்திக் குழுவிற்கு தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள செயலமர்வு மற்றும் 3 பயிற்சித்திட்டங்கள் ஊடாக பயிற்றப்பட்டுள்ளனர். மேலும், இது தொடர்பாக 5 பணிப்பகங்கள் (மனித வள முகாமைத்துவம், மனித வள அபிவிருத்தி, ஏற்றுமதிகள், விநியோகங்கள் மற்றும் கணக்குகள்) மாதிரிப் பணிப்பகங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

  இவ்வாண்டுக் காலத்தில் புதிய தளபாடத்தை பதிலீடு செய்தல் தொடர்பிலான மீளமைப்புடன் சுங்கத்திணைக்களத்தை புதிய கட்டிடத்தில் தாபிப்பதற்குத் தேவையான காலம் ஏற்பட்டதனால் இந்நிகழ்ச்சித்திட்ட முன்னேற்றம் அவசியமாகவிருந்தது.

# மாகாணக் கொத்தணி

# அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகம்

அறிமுகம்


இப்பணிப்பகமானது காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மாகம்புர ஆகிய வெளித்துறைமுகங்களிலான சரக்குகள், பயணிகள் உடன் வராத பொதிகள் மற்றும் தபால் பொதிகள் என்பவற்றினை வெளியாக்கும் வகையிலான சேவைளுடன் தொடர்புபட்ட சகல சுங்க தொழிற்பாடுகளையும் முகாமை செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளதுடன் உரிய வருவாயினை சேகரிப்பதனையும் உறுதிப்பதுத்தும் பொறுப்பினையும் கொண்டுள்ளது. இத்திணைக்களமானது ஹம்பாந்தோட்டை, மாகம்புர றுகுணுபுர மஹிந்த ராஜபக்ச துறைமுகத்தில் இறக்குமதி மற்றும் வழிமாற்றல் சரக்கு (மோட்டார் வாகனங்கள்) என்பவற்றின் வெளியாக்கலை அனுமதிக்கும் வகையில் புதிய அலுவகம் 2012 ஜுன் 05ஆந் திகதி திறந்துவைக்கப்பட்டது.

பிரதான தொழிற்பாடுகள்

1. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மீதான உரிய வருவாயினை சேகரித்தல்.
2. நாட்டினது சமூக பொருளாதார பாதுகாப்பினை உறுதிசெய்யும் வகையில் எல்லைக் கட்டுப்பாடுகளை பேணல்.
3. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சரக்குகளை பரிசோதனை செய்தலும் விடுவித்தலும்.
4. பிராந்திய மட்டத்திலான குத இல்லங்களில், பணயிகள் உடன் வராத பொதிகள் மற்றும் தபால் மூலமான பொதிகளை வெளியாக்குவதற்கான வசதியினை வழங்கள்

சேகரிக்கப்பட்ட அரசிறை

| பிராந்தியம் | தீர்வை மற்றும் பிற அறவீடுகள் | ஏனைய கட்டணங்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| காலி | 19,402,229 | 23633846 | 43036075 |
| ஹம்பாந்தோட்டை | 4,215,204 | 4816455.5 | 9031659 |
| திருகோணமலை | 1,787,508 | 14579559.32 | 16367067 |
| யாழ்ப்பாணம் | 2,506,558 | 1073922 | 3580480 |
| | **27,911,499** | **44,103,783** | **72,015,282** |



# பயணிகள் சேவை (மாகாணம்) பணிப்பகம்

அறிமுகம்

மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையமானது 2013 மார்ச் 15ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது. ஹம்பாந்தோட்டையில் அமையப்டிபற்றுள்ள இவ் விமான நிலையத்தின் பிரதான குறிக்கோளானது தென் பிராந்தியத்தினையும் மற்றும் அப்பிரதேச மக்களது வாழ்க்கை முறையினை விருத்தி செய்வதிலானதொரு அபிவிருத்திப் பாகமாகவும் மற்றும் கட்டுநாயகவிலுள்ள பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தினைப் போன்று அதற்கு மாற்று விமான நிலையமென்றாகவும் திகழவைப்பதுமாகும். தற்போது இவ் விமான நிலையத்திலிருந்து ஒரு சில விமானங்கள் செயற்படுவதுடன் எதிர்காலத்தில் அதிக விமானங்கள் அதன் செயற்பாட்டினை மேற்கொள்ளும்.

அரச முகவராக இருந்துகொண்டு, பயணிகளுடனான நற்பண்பு நடத்தையின் மூலம் இவ்விமான நிலையத்தின் தரத்தினை விருத்தி செய்தல் மற்றும் உரிய அரசிறையினை சேகரிக்கும் வகையில் சுங்க ஒழுங்கு விதிகள் மற்றும் பிற தொடர்புபட்ட சட்டங்களை அமுல்படுத்தும் அதேவேளை பயணிகளது பொதிகளை விரைவாக வெளியாக்குதல் என்பன எங்களது கடமையாகும்.

செயலாற்றுகை

1) விமானங்களதும் பயணிகளதும் வருகை /செல்லுகை

| விபரம் | வருகை | செல்லுகை |
|---|---|---|
| | | |
| விமானங்களது எண்ணிக்கை | 765 | 765 |
| பயணிகளது எண்ணிக்கை | 20541 | 21327 |

2) கண்டுபிடிப்புகளது எண்ணிக்கை – 01

3) கண்டுபிடிக்கப்பட்ட மீறுகைகளது எண்ணிக்கை – 01

4) அறவீடுகள்

| அறவீடுகள் | தொகை (ரூபா) |
|---|---|
| அபராதம் | 123,42,757.00 |
| சுங்கத் தீர்வை | 39,10,502.00 |
| து.வி.அ.அறவீடு | 13,65,235.00 |
| பெறுமதி சேர் வரி | 45,46,105.00 |
| தேசக் கட்டுமான அறவீடு | 8,54,837.00 |
| சமூக பாதுகாப்பு அறவீடு | 250.00 |

பதவியணி ஒதுக்கீடு

பதவியணியினர், இணைப்பு 1 இல் உள்ளவாறு இடமாற்ற அடிப்படையில் குறிப்பிட்டதொரு காலத்திற்கு இப்பணிப்பகத்திற்கு அமர்த்தப்படுகின்றனர்.

செயலாற்றுகைக்காக வழங்கப்பட்ட வசதிகள்

அலுவலர்கள் தங்குவதற்காக இரு வீடுகளும் அவர்களது அலுவலக போக்குவரத்திற்காக இரு வாகனங்களும் வழங்கப்பட்டிருப்பதுடன் சுங்கப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு இன்டநெட் வசதியும் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்புகள்

விமான நிலையத்தலில் சுங்க பிரதிப் பணிப்பாளர்கள், சுங்க அத்தியட்சகர்கள் மற்றும் கடமை அலுவலர் ஆகியோருக்கென மூன்று அலுவலக அறைகள் மாத்திரமே காணப்படுகின்றதுடன் உதவி பொறுப்பு அலுவலர்களுக்கென பிறிதொரு அறை இல்லாததன் காரணமாக அவர்கள் தற்போது சுங்க அத்தியட்சகர்களது அறையினையே பயன்படுத்துகின்றனர்.
ஏந்தவொரு அலுவலர்களுக்கும் இளைப்பாற்று அறை எதுவும் வழங்க்கப்பட்டிருக்கவில்லை. வில்லை.

# சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழான பணிப்பகங்கள்

# முறைமைகள் மற்றும் நடைமுறைகள் இணக்கப்பாட்டு கணக்காய்வுப் பணிப்பகம்

அறிமுகம்

இப் பணிப்பகமானது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் நேரடியாகத் தொழிற்படுவதுடன், இலங்கைக் கணக்காய்வாளர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்த அலுவலரால் தலைமை வகிக்கப்படுகின்றது. இப்புதிய பணிப்பகம் உருவாக்கப்பட்டதன் எதிர்பார்ப்புகளானது, ஒழுங்கீனங்கள் அடிக்கடி நிகழ்வதனையும் மற்றும் ஒருமைப்பாட்டிலான தளர்வுகளையும் தடுக்கும் வகையில் முறையான விருத்தியில் செயற்பாட்டு முகாமையாக உதவுதல், மற்றும் உள்ளாக்கப்படும் இடர்களுக்கு ஏற்ப உள்ளகக் கட்டுப்பாடுகளை பராமரித்தலும் விருத்தி செய்தலுமாகும்.

திறமையான முறையில் கணக்காய்வு மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் சகல முக்கிய செய்முறைகளில் வளப் பயபாட்டினை சிக்கனப்படுத்தல் மற்றும் திணைக்களத்தினூடாக சகல பிரிவுகளையும் உள்ளடக்கிய செய்முறைகளை ஆதரித்தல் என்பன இப்பணிப்பகத்தின் நோக்காகும்.

பிரதான தொழிற்பாடுகள்

1. எவ்வேளையிலும் சாத்தியமாகின்ற கணக்காய்வுச் சேவையினை மேம்படுத்துவதன் மூலம் அமைப்பகத்திற்கான இதன் மேலதிக பெறுமதியினை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளகக் கணக்காய்வினை திறமையாக முகாமை செய்தல்.
2. பின்வருவன உள்ளடங்கலாக நிறுவன ஆளுகை, செயற்பாடுகள் மற்றும் தகவல் என்பவற்றில் சூழ்ந்துள்ள கட்டுப்பாடுகளை திறமையான முறையிலும் போதிய வகையிலும் மதிப்பிடல்.
   அ. நிதி மற்றும் செயற்பாட்டுத் தகவலின் ஒருமைப்பாடும் நம்பகத்தன்மையும்
   ஆ. செயற்பாடுகளது நற்பயனளிக்கக் கூடிய தன்மையும் திறமையும்
   இ. சொத்துக்களைப் பாதுகாத்தல்.
   ஈ. சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் உடன்படிக்கைகளுடனான இணக்கப்பாடு.
3. இடர் முகாமையினை விருத்திசெய்வதற்கான இடர் மதிப்பீட்டின் அடிப்படையிலான கணக்காய்வுத் திட்டங்களை வரைதலும் நிறுவன செயற்பாடுகளை விருத்தி செய்தலும்.
4. குறிப்பிடத்தக்க இடர் வெளிப்பாடுகளையும் கட்டுப்பாட்டுப் பிரச்சினைகளையும் மற்றும் தேவைப்படும் அல்லது சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் வேண்டப்படும் பிற விடயங்களை அறிக்கையிடல்.
5. உத்தேசிக்கப்பட்டவாறு செயற்பாடுகள் மற்றும் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை தீர்மானிப்பதற்காக நிறுவப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுன் அதன் விளைவுகள் எந்தளவு முரண்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் அச் செயற்பாடுகள் மற்றும் திட்டங்களை மீளாய்வுசெய்தல்.
6. அடுத்த குறிக்கோளினை நிறைவேற்றுகையில் ஆளுகைச் செயன்முறையினை மேம்படுத்துவதற்கான பொருத்தமான பரிந்துரைகளை மதிப்பீடு செய்து தயாரித்தல்.
7. நிறுவனங்களுக்கிடையே உரிய நடத்தை மற்றும் கீர்த்தியினை மேம்படுத்தல்.
8. திறமையான நிர்வாக செயலாற்று முகாமைத்துவத்தினையும் பொறுப்பினையும் உறுதிப்படுத்தல்.

செயலாற்றுகை

இப்பணிப்பகமானது 2013ஆம் ஆண்டில் 72 கணக்காய்வுகளை மேற்கொண்டுள்ளதுடன் அவை திறம்பட முடிவுறுத்தப்பட்டுமுள்ளன.

# நிதிப் பணிப்பகம்

அறிமுகம்

இலங்கைத் தீவிற்கு வருமானத்தை ஈட்டிக் கொடுக்கின்ற திணைக்களங்களில் மிகவும் பிரதானமானது சுங்கத் திணைக்களமாகும். வருடாந்தம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு பெறப்படுகின்ற மதிப்பீடு மூலம் வருடாந்த வரி சேகரிப்புக்கான இலக்கொன்று இதற்கு வழங்கப்படுகின்றது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் மேற்படி குறிக்கோளினை அடைவதற்கும் மற்றும் வரிகளை நிர்வகிப்பதற்குமாக சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு உதவும் வகையிலான பாரிய பங்கினை ஆற்றுகின்றது.

பிரதான தொழிற்பாடுகள்

01 செலவினம் மற்றும் வரி வருமானம் தொடர்பில் வருடாந்த வரவு செலவு மதிப்பீடுகளை தயாரித்தல்.

02 வரி வருமானம் மற்றும் செலவு பற்றிய விடயங்களை சேகரித்தல், பதிவு செய்தல் மற்றும் அறிக்கையிடல்.

03 வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டினால் ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டின் பிரகாரம் செலவினை முகாமை செய்தல்.

04 திறைசேரி, கணக்காய்வுத் தலைமை அதிபதி மற்றும் ஏனைய அதிகாரக் குழுக்களுக்கு, அவை வேண்டுகின்ற போது, வருமானத்தை மற்றும் ஏனைய நிதிசார் அறிக்கைகளை வழங்கல்.

05 சேமிப்புக் கணக்கு, பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் கைப்பற்றப்பட்ட பொருள் கணக்கு மற்றும் அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு என்பவற்றினை பேணல்

06 வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு, அரசிறைக் கணக்குகள், பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் கைப்பற்றப்பட்ட பொருள் கணக்கு மற்றும் அரச அலுவலர் முற்பணக் கணக்கு என்பவற்றினை தயாரித்தலும் சமர்ப்பித்தலும்.

நிதிப் பணிப்பாளரின் (இ.க.சே.) தலைமையின் கீழ், 100 அரச முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் காசாளரஹ்களின் உதவியுடனான 4 பிரதிப் பணிப்பாளர்களின் (இ.க.சே) கண்காணிப்பின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்படுகின்ற 6 பிரிவுகளின் மூலம் இந் நிதிப் பணிப்பகத்தினால் மேற்படி தொழிற்பாடுகள் ஆற்றப்படுகின்றன.

- வருமானப் பிரிவு
- கொடுப்பனவுப் பிரிவு
- சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுப் பிரிவு
- மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுப் பிரிவு
- வைப்புக் கணக்குகள் மற்றும் நிதியக் கணக்குகள் முகாமைத்துவப் பிரிவு

நிதிப் பணிப்பகமானது திணைக்களத்தின் ஒட்டுமொத்த நிதிசார் முகாமைத்துவ தொழிற்பாட்டினை கண்காணித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்வகித்தல் போன்றவற்றுக்குப் பொறுப்பாகவுள்ளது. மேலும், வங்கி உத்தரவாதங்களை வெளியிடுதல் மற்றும் கண்காணித்தல், கொடுக்கப் பெறுநர் வரியைக் கணிப்பிட்டு அறவிடுதல் மற்றும் இப் பணிப்பகத்திலுள்ள அலுவலர்கள் தொடர்பில் செல்வாக்குச் செலுத்துகின்ற பொதுவான நிர்வாக விடயங்களில் மனித வளப் பணிப்பகத்திற்கு உதவுதல் ஆகியவற்றுக்கும் பொறுப்பாகவுள்ளது.

அட்டவணை 1 **:** வங்கி உத்தரவாதங்கள் விநியோகம் மற்றும் கொடுக்கப் பெறுநர் வரி செலுத்துகை பற்றிய விபரங்கள்

| | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|
| விபரம் | கம்பனிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | கம்பனிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) |
| விநியோகிக்கப்பட்ட வங்கி உத்தரவாதங்கள் | 86 | 289 | 88 | 396.45 |
| விபரம் | 2012.04.01 இருந்து 2013.03.31ஆம் திகதி வரை ( வரி ஆண்டு) | | | |
| | ஊழியர்களின் எண்ணிக்கை 2012.04.01 | தொகை (ரூ.மில்) 2013.03.31 | ஊழியர்களின் எண்ணிக்கை 2013.04.01 | தொகை (ரூ.மில்) 2013.03.31 |
| கொடுப்பனவு பெறுநர் வரி | 2866 | 23,110 | 2534 | 40,218 |

## வருமானப் பிரிவு

வருமானப் பிரிவானது இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையில் பேணப்படுகின்ற பிரதான வருமானக் கணக்குடன் இணைப்பைக் கொண்ட 11 உப சேகரிப்பு வங்கிக் கணக்குகளை வைத்திருப்பதன் மூலம் 41 சேகரிப்பு நிலையங்களினூடாக வருமானத்தைச் சேகரிப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. மேலும் சேகரிக்கப்படுகின்ற வருமானங்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களின் நிதித் தேவையை திறைசேரி நிறைவேற்றும் பொருட்டு தினமும் டீ.எஸ்.ரி. கணக்கிற்கு அனுப்பப்படுகின்றன.

அட்டவணை 2. **:** 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வரிகளின் சாராம்சம்

ரூபா. மில்

| அரசிறைக் குறியீடு | விபரம் | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | ஈட்டப்பட்டவை | இலக்கு | ஈட்டப்பட்டவை |
| 1001.01.00 | இறக்குமதித் தீர்வை | 76,830 | 73,489 | 82,591 | 74,766 |
| 1001.02.00 | ஏற்றுமதித் தீர்வை | 20 | 21 | 20 | 22 |
| 1001.04.00 | துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | 75,211 | 70,111 | 61,004 | 61,516 |
| 1001.05.01 | செஸ் அறவீடு - இறக்குமதி | 29,287 | 29,604 | 37,362 | 33,011 |
| 1001.06.00 | மோட்டார் வாகனச் சலுகை அறவீடு | - | - | - | - |
| 1001.07.00 | பிராந்திய கட்டுமான அபிவிருத்தி அறவீடு | - | 7 | - | 1 |
| 1001.05.02 | செஸ் அறவீடு ï ஏற்றுமதி | 3,120 | 3,136 | 3,120 | 3,087 |
| 1001.08.00 | விசேட பண்ட அறவீடு | 36,608 | 33,666 | 50,106 | 46,705 |
| | மொத்த சுங்க வரி வருமானம் | **221,076** | **210,034** | **234,203** | **219,108** |
| 1002.05.01 | உற்பத்தி வரி ï சிகரெட்டுகள் | 54,924 | 53,529 | 58,222 | 58,534 |
| 1002.05.02 | உற்பத்தி வரி ï மதுபானம் | - | 39 | - | 0 |
| 1002.05.03 | உற்பத்தி வரி – பெற்றோலியம் | **23,000** | **28,466** | **35,849** | **27,131** |
| | உற்பத்தி வரி ï பெற்றோலியம் (இறக்குமதிகள்) | *20,000* | *27,837* | *32,753* | *27,131* |
| | உற்பத்தி வரி ï பெற்றோலியம் (உள்நாடு) | *3,000* | *629* | *3,096* | - |
| 1002.05.04 | உற்பத்தி வரி ï மோட்டார் வாகனம் | 57,510 | 46,496 | 71,906 | 55,517 |
| 1002.05.99 | உற்பத்தி வரி – ஏனையவை | **5,132** | **3,336** | **5,347** | **2,528** |
| | உற்பத்தி வரி ï ஏனையவைகள் - இறக்குமதி | *3,632* | *2,533* | *1,477* | *1,248* |
| | உற்பத்தி வரி ï ஏனையவைகள் - உள்நாடு | *1,500* | *803* | *3,870* | *1,279* |
| | மொத்த உற்பத்தி வரி வருமானம் | **140,566** | **131,866** | **171,325** | **143,710** |
| 1002.01.04 | இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி | 109,487 | 99,469 | 123,888 | 96,591 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1003.10.00 | சமூக பாதுகாப்பு அறவீடு | - | 1 | - | - |
| | *சமூக பாதுகாப்பு அறவீடு - இறக்குமதி* | | *1* | | 0 |
| | *சமூக பாதுகாப்பு அறவீடு – உள்நாடு* | - | - | - | 0 |
| 1002.12.03 | தேச கட்டுமான வரி | 18,823 | 15,667 | 19,721 | 22,443 |
| | மொத்த ஏனைய வரி வருமானம் | 128,310 | 115,138 | 143,609 | 119,035 |
| | மொத்த வரி வருமானம் | 489,952 | 457,037 | 549,136 | 481,852 |
| 2003.02.17 | ஆடைகளது விற்பனை | 100 | 105 | 95 | 92 |
| 2003.02.99 | | | | | |
| 2003.99.00 | பலவகை சில்லறைப் பொருள்கள் | 15,700 | 5,042 | 859 | 2,142 |
| 2003.03.00 | | | | | |
| | மொத்த வரியல்லா வருமானம் | **15,800** | **5,147** | **954** | **2,234** |
| | மொத்த வருமானம் (வரி மற்றும் வரியல்லாதவை) | **505,752** | **462,184** | **550,090** | **484,086** |
| | நிகர வைப்புகள் | | 1,774 | | 1,231 |
| வைப்புகளுடனான மொத்த வருமானம் | | **505,752** | **463,958** | **550,090** | **485,317** |

குறிப்பு ï திறைசேரிக் கணக்குடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளது.

## கொடுப்பனவுப் பிரிவு

கொடுப்பனவுப் பிரிவானது வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் ஒதுக்கப்படுகின்ற நிதிகளுடன் சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளதுடன், விழா முற்பணக் கொடுப்பனவு, அரச ஊழியர்கள் முற்பணக் கணக்கின் கீழான துயரக் கடன்கள் என்பவற்றின் பிரகாரம் செலவினை முகாமை செய்தல் மற்றும் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயாரித்தல்.

அட்டவணை 3 : 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிலான செலவுகளின் ஒப்பீட்டாய்வு

| விபரம் | **2012** | | **2013** | |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்டவை (ரூ.மில்) | உண்மையாக அடையப்பட்டவை (ரூ.மில்) | மதிப்பிடப்பட்டவை (ரூ.மில்) | உண்மையாக அடையப்பட்டவை (ரூ.மில்) |
| மீண்டெழுபவை | 1,393 | 1,392 | 1,497 | 1,495 |
| மூலதனம் | 903 | 903 | 776 | 776 |
| முற்பண 'பீ' கணக்கு | **2011** | | **2012** | |
| | ஊழியர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | ஊழியர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) |
| விழா முற்பணம் | 360 | 1.8 | 341 | 1.7 |
| துயரக் கடன் | 474 | 37.76 | 402 | 27 |
| விசேட மற்றும் துவிச்சக்கரவண்டிக் கடன் | 35 | 0.10 | 15 | 0.3 |

## சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுப் பிரிவு

இப்பிரிவானது சம்பளங்கள் மற்றும் சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்கல் தொடர்பிலான பொறுப்பைக் கொண்டுள்ளது.

அட்டவணை 4. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிலான சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தொடர்பான ஒப்பீட்டாய்வு

| விபரம் | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|
| | ஊழியர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) | ஊழியர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) |
| மொத்த சம்பளக் கொடுப்பனவு | 2,092 | 757.2 | 2058 | 784.30 |
| மொத்த ஓய்வூதியக் கொடுப்பனவு | 224 | 35.54 | 95 | 28.0 |

### மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுப் பிரிவு

இப்பிரிவானது அலுவலக நேரத்தின் பின்னரான காலப்பகுதியில் திணைக்களத்தின் சேவைகளை வேண்டுகின்ற கோரிக்கையாளர்களிடமிருந்து அவை தொடர்பில் மேலதிக செலுத்துகைகளை சேகரிப்பதற்கும் மற்றும் சுங்க மேலதிக நிதியிலிருந்து திணைக்கள ஊழியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவினை வழங்குவதற்கும் பொறுப்பாயுள்ளது.

மேலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்குகள் தொடர்பில் வருடாந்த மதிப்பீடுகள் மற்றும் இறுதிக் கணக்குகள் என்பவற்றினை தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பொறுப்பாயுள்ளது.

1. சுங்க மேலதிக நிதியக் கணக்கு
2. சரக்குப் பரிசோதனைக் கட்டண நிதியக் கணக்கு

அட்டவணை 5. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிலான மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுகள் தொடர்பான ஒப்பீட்டாய்வு

| விபரம் | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|
| | பெறப்பட்டவை (ரூ.மில்.) | செலுத்தப்பட்டவை (ரூ.மில்.) | பெறப்பட்டவை (ரூ.மில்.) | செலுத்தப்பட்டவை (ரூ.மில்.) |
| மேலதிக நேர வேலைக்கான மொத்தக் கொடுப்பனவு | 583 | 431 | 578 | 591 |
| சரக்குப் பரிசோதனைக் கட்டண நிதியம் | 201 | 162 | 229 | 184 |

### வைப்புக் கணக்கு மற்றும் நிதியக் கணக்குகள் முகாமைத்துவப் பிரிவு

மேலே குறிப்பிட்ட நிதியக் கணக்ககள் தொடர்பிலான பெறுவனவுகளை பதிவு செய்தல், செலுத்துகை பற்றுச்சீட்டுகளை சான்றுபடுத்துதல், செலுத்துகைகளை பதிவு செய்தல், மற்றும் அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக கீழ்க்குறிப்பிட்ட கணக்குகளுக்கான வருடாந்த மதிப்படுகளையும் வருடாந்த இறுதிக் கணக்குகளையும் தயாரித்தல்.

1. வைப்புக் கணக்கு (குழுக் கொடுப்பனவுக்கான வங்கி உத்தரவாதம், மற்றும் இதர விடயம்)
2. கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் முற்பணக் கணக்கு

அட்டவணை 6. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிலான சேமிப்பக் கணக்கு மற்றும் நிதியக் கணக்குகள் தொடர்பான ஒப்பீட்டாய்வு

| விபரம் | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|
| | பெறப்பட்ட தொகை (ரூபா. மில்) | செலுத்தப்பட்ட தொகை (ரூபா. மில்) | பெறப்பட்ட தொகை (ரூபா. மில்) | செலுத்தப்பட்ட தொகை (ரூபா. மில்) |
| பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் கைப்பற்றப்பட்ட பொருள் தொடர்பிலான முற்பணக் கணக்குகள் | **2.5** | **3.4** | **2.89** | **8.18** |

வருடாந்த கணக்குகளை சமர்ப்பித்தல்

நிதிப் பணிப்பகமானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த கணக்குகளை கணக்காய்வாளர் அதிபதிக்கும் மற்றும் திறைசேரிக்கும் 2013.03.31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாயுள்ளது

- வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகள்
- வருடாந்த அரசிறைக் கணக்குகள்
- பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் கைப்பற்றப்பட்ட பொருள் மற்றும் முற்பணக் கணக்குகள் மற்றும் நிதிப் பணிப்பகத்திற்கு மேலதிக பொறுப்புகளையுடைய ஏனைய நிதியக் கணக்ககள்
- கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களும் முற்பணக் கணக்குகளும் மற்றும் நிதிப் பணிப்பகத்திற்கு மேலதிகமாக ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய குறித்த நிதியக் கணக்குளும்.

நிதிப் பணிப்பகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மேலதிக பொறுப்புக்கள்

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியக் கணக்ககளின் பொறுப்புகள் பின்வருமாறு நிதிப்பணிப்பகத்திற்கு ஒப்படைக்கபட்டுள்ளது.

1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதியக் கணக்குகளை முகாமை செய்தல்.
   - சுங்க அலுவலர்கள் வெகுமதி நிதியம்.
   - சுங்க அலுவலர்களது முகாமைத்துவ மற்றும் நஷ்டஈட்டு நிதியம்.
2. மேலே குறிப்பிட்ட நிதியக் கணக்ககள் தொடர்பிலான பெறுவனவுகளை பதிவு செய்தல், செலுத்துகை பற்றுச்சீட்டுகளை சான்றுபடுத்துதல், செலுத்துகைகளை பதிவு செய்தல், வருடாந்த மதிப்படுகளை தயாரித்தல்.

அட்டவணை 7. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிலான முற்பண நிதியக் கணக்கு தொடர்பான செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு

| விபரம் | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|
| | பெறப்பட்ட தொகை (ரூபா.மில்) | செலுத்தப்பட்ட தொகை (ரூபா.மில்) | பெறப்பட்ட தொகை (ரூபா.மில்) | செலுத்தப்பட்ட தொகை (ரூபா.மில்) |
| சுங்க அலுவலர்கள் வெகுமதி நிதியம் | 973.2 | 925.6 | 1,505.2 | 1,362.8 |
| சுங்க அலுவலர்களது முகாமைத்துவ மற்றும் நஷ்டஈட்டு நிதியம் | 362 | 97 | 583.7 | 114.8 |

# விசேட செயலணி மற்றும் கண்காணிப்புப் பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள், திணைக்களம் தொடர்பிலான ஒட்டுமொத்த கண்காணிப்பில் ஈடுபடுவதோடு முழுக் கட்டுப்பாடு தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு பக்கபலமாகவிருத்தலுமாகும். மேலும் இது பொதுமக்கள் வழங்கின்ற தகவல்களை அடிப்படையாக வைத்து பணியாட்கள் திரட்டுகின்ற உளவுத் தகவல்களைக் கொண்டு பல்வேறு அமுலாக்கங்களையும் மேற்கொள்கின்றது.


தபால் மூலமான பொதிகள், கூரியர் சேவை மற்றும் பொருள் வெளியாக்கத்திற்கான ஏனைய விசேட நடவடிக்கைகள் தொடர்பில் பொருள் வெளியாக்கல் மீதான கண்காணிப்பினை மேற்கொள்ளல்.

பிரதான தொழிற்பாடுகள்

1. ஒருமைப்பாட்டினை மேம்படுத்தல் மற்றும் திணைக்களத்திலுள்ள சீர்கேடான நடைமுறைகளை ஒழித்தல்
2. முறைப்பாடுகள் மற்றும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஒழுங்கு முறையாக அவ்வப்போது பதிலளித்தல்.
3. பாவனைக்குத் தயாராகவுள்ள வளங்கள் மூலமான இடர்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களை கையாள்வதில் சுங்கப்பணிப்பாளர் நாயகத்திற்கு ஒதவியாகவிருத்தல்.
4. இறக்கமதி செய்யப்பட்ட அல்லது ஏற்றமதி செய்யப்படுகின்ற எப் பொருட்களையும் இடைமறித்து மீள் பரிசோதித்தல் மற்றும் நடைமுறைகள் உரியவாறு பின்பற்றப்பட்டுளதா என்பதனை ஒப்புநோக்கல்.
5. விமானநிலையத்தில் அல்லது பயணிகள் உடன் வராத பொதி இல்லத்தில் வைத்து பயணிகளை அல்லது பயணிகள் பொதிகளை இடைமறித்து ஆராய்தல்.
6. தபால் மூலப் பொதிகள், கூரியர் சேவை மற்றும் பொருள் வெளியாக்கத்திற்கான ஏனைய விசெட நடவடிக்கைகள் தொடர்பில் பொருள் வெளியாக்கம் மீதான கண்காணிப்பினை மேற்கொள்ளல்.

இப் பணிப்பகத்தினாலான மொத்த அறவீடுகள் (**2009, 2010, 2011, 2012** மற்றும் **2013)**

| | **2009** | **2010** | **2011** | **2012** | **2013** |
|---|---|---|---|---|---|
| அபராதம், மேலதிகப் பதிவு மற்றும் தீர்வையும் ஏனைய அறவீடுகளும் (ரூ) | 354,417,921 | 392,152,071 | 671,474,362 | 407,821,431 | 535,522,655 |
| விற்பனை வரும்படிகள்(ரூ) | 70,179,646 | 39,451,881 | 58,642,363 | 91,004,686 | 116,906,090 |
| மொத்த அறவீடுகள் (ரூ) | 424,597,567 | 431,603,952 | 730,116,725 | 498,826,117 | 652,428,745 |




| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| வாணிப இறக்குமதிகள் (கடல் மற்றும் ஆகாய மார்கம்) ï முழுக் கொல்கலன் மற்றும் பலரது பொருட்களை கொண்ட கொள்கலன் | 827 | 1,114 | 1,196 | 1,235 | 1,847 |
| பயணிகள் உடன் வராத பொதி (ப.உ.வ.பொ) | 622 | 978 | 991 | 1,058 | 1,020 |
| பயணிகள் உடன் வந்த பொதி (ப.ச.விமான நிலையம்) | 1,000 | 24 | 70 | 40 | 0 |
| மொத்தம் | **2,449** | **2,116** | **2,257** | **2,333** | **2,867** |

## கருத்திட்டம் II

# உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) பிரிவு

# உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) பிரிவு

அறிமுகம்

1990ஆம் ஆண்டின் 40ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1994ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டமானது இலங்கை அரசாங்கத்தின் உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) கொள்கைகளை அமுல்படுத்துவதற்கான சட்டமாகும்.

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் கீழ் இயங்கிவருகின்ற இப்பிரிவானது உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தவதற்கான பொறுப்புடனும் தேசத்தின் நலனுக்காகச் செய்யப்படும் ஒழுங்கு விதிகளுடனும் பொறுப்புள்ள அரச முகவராக முக்கிய பணியினை நிறைவேற்றகிறது.

பிரதான தொழிற்பாடுகள்

1. சிகரெட்டுகள் மற்றும் ஏனைய தயாரிப்பு நிறவனங்களை கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் என்பவற்றின் ஊடாக உரிய அரசிறையினை சேகரித்தல்
2. உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் தொடர்பில் சட்ட அமுல்படுத்தல் அதிகார சபையாக திகழ்தல் மற்றும் இறக்கமதி செய்யப்படுகின்ற மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற உற்பத்தி வரி விதிக்கத்தகு பொருட்களிலிருந்து உற்பத்தி வரியினை சேகரித்தல்
3. உற்பத்தி வரி விதிப்பனவு தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடல்.

நோக்கெல்லையும் குறிக்கோள்களும்

இப்பிரிவின் நோக்கெல்லையானது இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அல்லது இலங்கைக்கள் இறக்குமதி செய்யப்படும் பொருள் மீது விதிக்கப்படும் உற்ப்த்தி வரி வருமானத்தை திறமையாக சேகரிப்பதற்கும் மற்றும் அதன் மூலம் தேசிய அபிவிருத்திச் செயன்முறைக்கு உதவுவதுமாகும்.

இப்பிரிவின் குறிக்கோள்கள் வருமாறு;

அ. 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினை அமுல்படுத்தல்.

ஆ. பெற்றோலியம், திரவப் பெற்றோலிய வாயு, சிகரெட்டுகள், மென் பானங்கள், பந்தய வெளியீடுகள், மற்றும் வாகன இறக்குமதிகள், உள்நாட்டில் பொருத்தப்படும் வாகனங்கள், தீந்தைகள், பொலிதீன் மற்றும் ஏனைய உற்பத்தி வரி விதிக்கத்தகு பொருட்களிலிருந்தான வருவாய்களை பாதுகாப்பாக சேகரித்தல்.

ஒழுங்கு முறைகளும் நடைமுறைகளும்

இப்பிரிவின் தொடக்கத்திலிருந்து இச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் உள்ளடக்கப்பட்ட வர்த்தமான அறிவித்தல்கள் வேளைக்கு வேளை வெளியிடப்பட்டதுடன் அவை வரியின் கட்டமைப்பும் அத்தகைய ஒழுங்கு விதிகள் மற்றும் கட்டளைகளுக்கு இணங்க அமுல்படுத்தப்பட்டன.

2009ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் உற்பத்தி வரி விதிக்கத்தகு (உள்நாட்டில்) பொருட்களும் சேகரிக்கப்பட்ட அரசிறையும் வருமாறு

| | ரூபா.மில் |
|---|---|
| சிகரெட்டுகள் | 37,670.16 |
| பெற்றோலியம் | 7,854.18 |
| மோட்டார் வாகனங்கள் (உள்நாட்டில் பொருத்தப்பட்டவை) | 0.11 |
| மென் பானங்கள் | 750.31 |
| பந்தய வெளியீடுகள் | 9.14 |
| மின்சார பொருட்கள் (உள்நாடு) பிற | 171.16 |
| மின்சார பொருட்கள் (சுங்கப் பிரகடண) செலுத்துகை | - |
| மதுபான வரி | - |
| ச.பா.அறவீடு (உள்நாடு) | 710.70 |
| தீந்தைகளும் பொலிதீன்களும் | 277.49 |
| நீதிமன்ற வழக்குகள் | 27.29 |
| திரவப் பெற்றோலிய வாயு | 526.34 |
| மொத்தம் | **47,996.88** |

2010ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் உற்பத்தி வரி விதிக்கத்தகு (உள்நாட்டில்) பொருட்களும் சேகரிக்கப்பட்ட அரசிறையும் வருமாறு

| | ரூபா.மில் |
|---|---|
| சிகரெட்டுகள் | 42,132.32 |
| பெற்றோலியம் | 5,650.66 |
| மோட்டார் வாகனங்கள் (உள்நாட்டில் பொருத்தப்பட்டவை) | 15.78 |
| மென் பானங்கள் | 949.56 |
| பந்தய வெளியீடுகள் | 9.31 |
| மின்சார பொருட்கள் (உள்நாடு) பிற | 284.68 |
| மின்சார பொருட்கள் (சுங்கப் பிரகடண) செலுத்துகை | - |
| மதுபான வரி | - |
| ச.பா.அறவீடு (உள்நாடு) | 564.33 |
| திரவப் பெற்றோலிய வாயு | 1.65 |
| மொத்தம் | **49,608.29** |

2011ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் உற்பத்தி வரி விதிக்கத்தகு (உள்நாட்டில்) பொருட்களும் சேகரிக்கப்பட்ட அரசிறையும் வருமாறு

| | ரூபா.மில் |
|---|---|
| சிகரெட்டுகள் | 49,925.30 |
| பெற்றோலியம் | 7,163.20 |
| மோட்டார் வாகனங்கள் (உள்நாட்டில் பொருத்தப்பட்டவை) | 21.60 |
| மென் பானங்கள் | 1345.90 |
| பந்தய வெளியீடுகள் | 9.40 |
| மின்சார பொருட்கள் (உள்நாடு) பிற | 166.00 |
| மின்சார பொருட்கள் (சுங்கப் பிரகடண) செலுத்துகை | |
| மதுபான வரி | |
| ச.பா.அறவீடு (உள்நாடு) | |
| தீந்தைகளும் பொலிதீன்களும் | |
| நீதிமன்ற வழக்குகள் | |
| திரவப் பெற்றோலிய வாயு | |
| மொத்தம் | **58,631.40** |

2012ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் உற்பத்தி வரி விதிக்கத்தகு பொருட்களும் சேகரிக்கப்பட்ட அரசிறையும் வருமாறு ;

| | ரூபா.மில் |
|---|---|
| சிகரெட்டுகள் | 54,241.38 |
| பெற்றோலியம் | 6,900.63 |
| மோட்டார் வாகனங்கள் (உள்நாட்டில் பொருத்தப்பட்டவை) | 56.9 |
| மென் பானங்கள் | 1,668.77 |
| பந்தய வெளியீடுகள் | 9.49 |
| மின்சார பொருட்கள் (உள்நாடு) பிற | 133.54 |
| மொத்தம் | **63,010.74** |

இவ் ஆண்டுக்காலப்பகுதியில் உள்ளாக்கப்பட்ட செலவினம்

2013 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் உற்பத்தி வரி விதிக்கத்தகு பொருட்களும் சேகரிக்கப்பட்ட அரசிறையும் வருமாறு ;

| | ரூபா.மில் |
|---|---|
| சிகரெட்டுகள் | 57,523.00 |
| பெற்றோலியம் | 4,850.59 |
| மோட்டார் வாகனங்கள் (உள்நாட்டில் பொருத்தப்பட்டவை) | 6.94 |
| மென் பானங்கள் | 2,020.00 |
| பந்தய வெளியீடுகள் | 10.04 |
| மின்சார பொருட்கள் (உள்நாடு) பிற | 191.71 |
| மொத்தம் | **64, 603.74** |

* சேகரிக்கப்படாத உற்பத்தி வரி (ரூபா) 1,707,474,205.73

2010ஆம் ஆண்டிலிருந்து தனியான செலவினத் திட்டம் எதுவும் இருக்கவில்லை என்பதுடன் சகல நிதி சார் செயற்பாடுகளும் திணைக்கள வாக்கப் பணத்திலிருந்தே செலவிடப்பட்டன.

சட்ட செயற்பாடுகள்

உற்பத்தி வரியினை செலுத்தத் தவறிய நிறுவனங்களுக்கு எதிராக, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வரிகளையும் அபராதங்களையும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. விபரங்கள் வருமாறு

| | |
|---|---|
| நீதிமன்றத்தில் கொண்டுவரப்பட்டவைகளது எண்ணிக்கை | 20 |
| முன்கொண்டுவரப்பட்ட விடயங்களது எண்ணிக்கை | 279 |
| ஆண்டுக்காலப்பகுதியில் தொடுக்கப்பட்ட வழக்குகளது எண்ணிக்கை | 1 |
| ஆண்டுக்காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்ட வழக்ககளது எண்ணிக்கை | 1 |
| ஆண்டுக்காலப்பகுதியில் அறவிடப்பட்ட மொத்தம் (ரூபா. 13,650.00) | (மில். 13.65) |